www.padippakam.com


'உடையும் சித்திரங்கள்' - சுப. வீரபாண்டியன் எழுதும் புதிய தொடர்...

புதிய பொலிவுடன் இனி கடைகளில்

எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
செப்டம்பர், 2000 • ரூ.6



## தனித் தமிழ் நாடு கோரிக்கை உயிர்த்தெழுமா?

படிப்பகம்

www.padippakam.com



# பூனா ஒப்பந்தம் : ஓர் ஏமாற்று வேலை



“ பூனா ஒப்பந்தம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானது. தனித்தொகுதிகளில் காங்கிரஸ், தாழ்த்தப்பட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது. உண்மையிலேயே தாழ்த்தப்பட்டவர்களின் மீது காங்கிரசுக்கு அக்கறை இருக்குமானால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு – பொதுத் தொகுதிகளில் இடம் ஒதுக்கித் தரட்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனித் தேர்வு முறை இல்லாவிடில், அவர்கள் ஒரு போதும் சட்டசபைக்குள்ளும் நாடாளுமன்றத்திற்குள்ளும் நுழைய முடியாது. ”

இரட்டை வாக்குரிமை என்ற பாறை மீது வட்ட மேசை மாநாடு என்ற கப்பல் மோதி, அக்கப்பல் நிலை குலைந்து காணப்படுகிறது. காந்தியார் விரும்புவது போல, இந்தியா சுயராஜ்ஜியம் அடைந்து விட்டால், அங்கு தாங்கள் பாதுகாப்பற்ற உணர்வோடுதான் வாழ முடியும் என்ற முடிவுக்கு சிறுபான்மையினர் வந்துள்ளனர். இதனால், சிறுபான்மை மக்கள் அரசியலில் தங்களுக்கான அதிகாரப் பகிர்வு வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தில் ஓர் மய்யக் கருத்தை எட்டுவதில் காந்தியார் சிறிதும் விருப்பம் இல்லாதவராக உள்ளார். அரசியல் மற்றும் பொருளாதார அறிவு சிறிதும் இல்லாதவர் காந்தி. இத்தகைய மனிதர் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வது அறிவுப்பூர்வமானதல்ல. இத்தகைய மனிதர், மாநாட்டின் போக்கை மாற்றும் அளவிற்கு அதிகாரம் படைத்திருப்பது, மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் தனித்தொகுதி வாக்குரிமையை வேண்டுகின்றனர். காந்தியார் தாழ்த்தப்பட்டவர்களைத் தவிர, பிற சிறுபான்மையினருக்கு தனித் தொகுதி வாக்குரிமை அளிக்க முன்வந்துள்ளார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'இரட்டை வாக்குரிமை' அளிப்பதைத்தான் எதிர்ப்பதாகவும், அதற்காக சாகும் வரை பட்டினி கிடக்கப்போவதாகவும் அறிவித்துள்ளார். தனது நிலைப்பாட்டிற்கு அவர் தந்துள்ள விளக்கம் மிகவும் விந்தையாக இருக்கிறது.

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரட்டை வாக்குரிமை அளிக்கப்பட்டால், அவர்களின் நிலை இன்னும் மோசமடைந்துவிடும். இசுலாமியர்களுக்குத் தனித் தொகுதிமுறை அளிக்கப்பட்டால், அவர்கள் என்றும் முகமதியர்களாகவே வாழ வேண்டிவரும். கிறித்துவர்களுக்கு தனித் தொகுதிமுறை அளிக்கப்பட்டால், அவர்கள் என்றும் கிறித்துவர்களாகவே வாழ வேண்டிவரும். இதேநிலை தான் சீக்கியர்களுக்கும். ஒரு மனித சமூகம் என்றும் – இஸ்லாமியர்களாக, கிறித்துவர்களாக, சீக்கியர்களாக வாழ நினைப்பதில் தவறில்லை. அதே நேரத்தில் ஒரு சமூகம் பிற சமூகக் கூட்டத்தில் இருந்து விலகி, தனிமைப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களாக வாழ்வதை நான் ஆதரிக்க இயலாது” – இது காந்தியாரின் வாதம்.

இந்த வாதம், சிறுபிள்ளைத் தனமானதாகும். ஒரு சமூகத்தைத் தனியாக தேர்வு செய்து அவர்களுக்கான தேவைகளை நிறைவு செய்வது என்பது, குற்றமோ கொடுமையோ அல்ல. அவ்வாறு தனிமைப்படுத்தி தீங்கு இழைப்பது தான் குற்றம்; கொடுமை. அதைத் தொடர்ந்து இந்து மதம் செய்து வந்துள்ளது; காந்தியாரும் செய்து வருகிறார். மக்களை எதற்காக தனியாக தேர்வு செய்கிறோம் என்பதன் நோக்கம்தான் முக்கியம். தாழ்த்தப்பட்டவர்களைத் தனியாக அடையாளப்படுத்துவதன் மூலம், அவர்களுக்கான பங்கை – சாதி இந்துக்கள் அளிக்க நேரிடும் என்ற காந்தியின் அச்சமே இதற்குக் காரணம்.

பூனா ஒப்பந்தம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானது. தனித்தொகுதிகளில் காங்கிரஸ், தாழ்த்தப்பட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது. உண்மையிலேயே தாழ்த்தப்பட்டவர்களின் மீது காங்கிரசுக்கு அக்கறை இருக்குமானால், அவர்கள் பொதுத் தொகுதிகளில் – தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் ஒதுக்கித் தரட்டும். காங்கிரஸ் இதைச் செய்யப் போவதில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனித் தேர்வு முறை இல்லாவிடில், அவர்கள் ஒரு போதும் சட்டசபைக்குள்ளும் நாடாளுமன்றத்திற்குள்ளும் நுழைய முடியாது. மேலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைப்பவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தனி இடங்களில், காங்கிரஸ் தனது அடிமைகளைப் போட்டியிடச் செய்து, இடஒதுக்கீட்டையே கொச்சைப் படுத்துகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி இந்துக்களிடம் போராடுவதுடன், காங்கிரசுடனும் தனது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டியுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு அரசியல் சக்தியாக உருவாகாமல் தடுக்கவே காந்தி, இந்து – தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற ரீதியில் நாடகமாடுகிறார். காந்தியின் கருத்து முட்டாள்தனமானது மட்டுமல்ல; நயவஞ்சகமானதும் கூட. இதை தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்து, நாம் ஒரு தனி சக்தி என அடையாளப்படுத்த உழைக்க வேண்டும். ■

'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு': 5, பக்கம் : 343

படிப்பகம்

www.padippakam.com



புகைப்படம் : ஜெயராணி

இருத்தலை குறுக்கும் நீண்ட குழி
தடித்துக் கருத்தத் தோள்கள்
தூக்கிய கோடாரி தீர்க்கிறது
இளமையை... பின் வறுமையை



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


## அய்.அய்.டி.யில் அநீதி..............16

டாக்டர் வசந்தா கந்தசாமியுடன் ஒரு சந்திப்பு







## 'உடையும் சித்திரங்கள்'.................. 22

சுபவீ எழுதும் புதிய தொடர்





## நமக்கான பண்பாடு.................29

பவுத்தம் பற்றிய புதிய பார்வை



எழுச்சி
**தலித் முரசு**

Volume : 4 Issue : 3

செப்டம்பர், 2000 • ஆண்டு : 4 - இதழ் : 8

ஆசிரியர், வெளியிடுபவர்

**பெ. சந்திரசேகரன்**

பொறுப்பாசிரியர்

**புனித பாண்டியன்**

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

தொடர்பு முகவரி

ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர். சென்னை - 600 078
தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88
E-mail : ambedkar@md4.vsnl.net.in

• அட்டை புகைப்படம், வடிவமைப்பு : ஆர்-ஆர். சீனிவாசன், 'காஞ்சனை சினிமா'



இறந்து போனவர்களில் 'ஆபத்தானவர்'.............7

'தனித் தமிழ் நாடு' கோரிக்கை உயிர்த்தெழுமா?.........8

வீரப்பன் கடத்தல் எங்கு போய் முடியும்?.............12

சட்டக் கல்லூரி பிரச்சினை...............................15

பெண்களும் சமயப்பற்றும்...............................18

ஓவியர் புகழேந்தியுடன் ஒரு நேர்காணல்...............24

அரசமைப்புச் சட்டத்தை பிரதமர் மதிக்கிறாரா?..........27

'பாரதி'ய ஜனதா பார்ட்டி...........................................31

தலித்தியமும் உலகமயமாக்கலும்.........................37


கடும் விலையேற்றத்தாலும், கூடுதல் பக்கங்கள் மற்றும் வண்ண அட்டையுடன் வெளிவருவதாலும் இனி, தலித் முரசின் விலை ரூ. 6 ஆக உயருகிறது. ஆண்டுக் கட்டணத்தில் மாற்றம் இல்லை. வாசகர்களின் ஆதரவை தொடர்ந்து எதிர்நோக்குகிறோம்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# தலித் முரசு

## நடுநிலை வகிக்க மாட்டோம்!

'தலித் முரசு' - ஜாதிப் பத்திரிகையா? இல்லை. சாதியை ஒழிக்க முயலும் ஓர் இதழ். பிறகு ஏன் 'தலித்' என்ற கேள்வி எழலாம். 'தலித்' - ஜாதி அல்ல. 'தலித்' என்பது, இந்நாட்டில் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பொருளியல் ரீதியாக வும் - அடிநிலையில் நிறுத்தப்பட்ட / வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்கள் சமூகத்தைச் சுட்டும் ஒரு குறியீடு - அடையாளம்.

'தலித் முரசி'ன் நோக்கம்? சாதியத்தாலும் மதவாதத்தாலும் பாதிக்கப்படும் மக்களின் விடுதலைக்கு உரத்து குரல் எழுப்பு வது; அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது. தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை இன மக்கள்தான் தலித் முரசின் பயனாளிகள். இவர்களிடையே கூட ஒற்றுமை நிலவவில்லையே என்ற வினா எழலாம். இம்மக்களிடையே உள்ள ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சியை - முறியடிப்பதே நம் நோக்கம்.

சாதிக் கலவரங்கள் ஏற்படும்போது, கடுமையாக பாதிக் கப்படும் - தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கமே தலித் முரசு நிற்கும். மதக் கலவரங்கள் ஏற்படும்போது, பாதிக்கப்படும் சிறுபான்மை மக்களின் பக்கமே நாம் நிற்போம். நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் இடையிலான போராட்டத்தில், நாம் 'நடுநிலை' வகிக்க மாட்டோம்; நியாயத்தின் பக்கமே நிற்போம்.

சமூக நீதிக் கருத்தியலைப் பொறுத்தவரை, அம்பேத்கரி யலும் பெரியாரியலுமே நமக்கு வழிகாட்டும் தத்துவங்கள். சமூக விடுதலை, அரசியல் விழிப்புணர்வு, தமிழ் மொழி வளர்ச்சி, பெண்ணுரிமை, மனித உரிமை, சுற்றுச் சூழல் பாது காப்பு போன்றவற்றை அடித்தளமாகக் கொண்டு, தமிழ்ச் சூழலில் ஒரு மாற்று இதழாக 'தலித் முரசு' பரிணமித்துக் கொண்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் தலித் முரசு, எல்லா கடைகளிலும் விற்பனைக்கு இல்லை என்றாலும், பத்திரிகை உலகில் ஓரளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவில் இதன் விற்பனை இருந்து வந்துள்ளது. இனி, தலித் முரசு கடைகளிலும் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையிலும் மேம்பாட்டிலும் பற்றுள்ள அனைவரின் ஆதரவையும் எதிர்நோக்குகிறோம். ●



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்




நன்றி: 'டைம்ஸ் ஆப் இந்தியா'

மக்கள் தொடர்பு சாதனங்களில் 'கிரிமினல்' களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 'கிரிமினல்'களையும் கொள்ளைக் காரர்களையும் - இந்த சமுதாயத்தின் 'புதிய கதாநாயகர்கள்' போல சித் தரிக்கின்றனர். பரபரப்புச் செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, குழந்தைத் திருமணம் போன்ற சமூகத்தின் புரையோடிப் போன மூடப்பழக்க வழக்கங்கள் தொடர்பான செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மக்கள் தொடர்பு சாதனங்கள், சமூகத்தில் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**டாக்டர். கே.ஆர். நாராயணன்,** இந்திய குடியரசுத் தலைவர்,
53ஆம் ஆண்டு சுதந்திர நாள் விழாவில் உரையாற்றியபோது.




நன்றி: 'டைம்ஸ் ஆப் இந்தியா'

நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினர் மீது பாகுபாடு காட்டப் படுகிறது. நாடாளுமன்றம் கட்சி அடிப்படையில் இயங்கு வதால், சிறு கட்சிகளுக்கு சிறிது நேரமே ஒதுக்கப்படுகிறது. காஷ்மீர் விவாதத்தில் எந்த இசுலாமியரும் இது குறித்துப் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில், சிறுபான்மை இன மக்க ளுக்கு - எது நல்லது எது கெட்டது என்பதை பெரும்பான்மை சமூகத்து உறுப்பினர்கள்தான் முடிவு செய்கின்றனர்.


**சிம்ரஞ்ஜித்சிங் மான்,** தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்,
சிரோமணி அகாலி தளம். புது தில்லியில் செய்தியாளர்களிடையே.

தமிழ் வழிக் கல்விச் சிக்கல் என்பது, வெறும் மொழிச் சிக்கல் மட்டும் அல்ல. ஆண்டாண்டுக் காலமாக நடைபெறும் சமூக நீதிப் போராட்டமாகும்.

**தியாகு,** பொதுச் செயலாளர், தமிழ் - தமிழர் இயக்கம், தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி நடைபெற்ற, தாய்த் தமிழ் செங்கல் நடைபயணத்தின் நிறைவு விழா உரையில்.

காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் இணைந்தபோது அளிக்கப் பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அரசியல் சட்டம் 370ஆவது பிரிவின் படி, அந்த மாநிலத்துக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். பல்வேறு இன, மொழி, மத அமைப்பைக் கொண்ட இந்தியாவில் - பா.ஜ.க., குறுகிய நோக்குடன் மாநில அதிகாரப் பரவலை அணுகுகிறது.

**ஈ.கே. நாயனார்,** கேரள முதலமைச்சர், சென்னையில் மார்க்சிஸ்ட் கட்சி நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில்.




நன்றி: 'எக்னாமிக் டைம்ஸ்'

காஞ்சிபுரத்திற்கு அடுத்த மாவட்டமாகிய கடலூர் மாவட்டத்தில் 'இந்து சமயத்தைச் சார்ந்த' இரண்டு சமூக மக்கள் மோதிக் கொண்டிருக்கிறார்கள்; பலர் உயிரிழந்துள்ளனர். இந்து மதத்திற்கு இதை விட கேவலம் வேறொன்றும் இருக்க முடியாது. ஆனால், 'நாம் எல்லாம் இந்துக்கள்' 'நாம் எல்லாம் ஒன்று' என கூச்சலிட்டுக் கொண்டி ருக்கும் ராமகோபாலனும் காஞ்சி சங்கராச்சாரியாரும் கடலூர் மாவட் டத்தில் 'இந்து'க்களிடையே நடைபெறும் சாதிச் சண்டைகளுக்குத் தீர்வு கண்டு ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு ஏன் முன்வரவில்லை?

**டாக்டர் அ. சேப்பன்,** தேசிய செயலாளர்
இந்திய குடியரசுக் கட்சி (கவாய்). அறிக்கை ஒன்றில்.



படிப்பகம்

www.padippakam.com

## இறந்து போனவர்களில்

# 'ஆபத்தானவர்'

இறந்து போனவர்களில் 'ஆபத்தானவர்களை' பொதுநினைவில் இருந்து துடைத்தெறிவது, இந்து சமூகம் வைத்திருக்கும் பண்புகளில் ஒன்று. அப்படி 'ஆபத்தானவர்'களில் - தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களில் முதன்மையானவர் தாத்தா ரெட்டைமலை சீனிவாசன். இறந்தும் இந்து சமூகத்தை மிரட்டும் தலைவர். இவர் 1860இல் பிறந்து தனக்கு சமூகக்கருத்து தோன்றிய நாள் முதல் 1945வரை (85வயது) தலித் சமூகத்திற்கென ஆற்றிய பணிகளைக் கணக்கிட முடியாது.




''தாத்தா சீனிவாசன் பண்படுத்திய மண்ணில், டாக்டர் அம்பேத்கர் விதை விதைத்தார்'' என்று அவரைப்பற்றிய வரலாற்று நூல் குறிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லண்டனுக்குப் பயணப்பட்ட கப்பல் புயலில் திசை தவறியதால், தென்னாப்பிரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்பு அங்கேயே தங்கி காந்தியுடன் நண்பராய் இருந்த கதையெல்லாம் முடிந்த பிறகு, அதே நண்பரை தலித் மக்களுக்காக அவர் கடுமையாக எதிர்த்து நின்று, தனிவாக்காளர் தொகுதி பெறுவதற்கு டாக்டர் அம்பேத்கருடன் உறுதுணையாய் இருந்ததும், காந்தியை சென்னை 'அமிர்தாஞ்சன்' மாளிகையில் சந்தித்தபோது, 'பழைய நண்பர்கள் புதியதாய் சந்திக்கிறோம்' என்று தொடங்கி, தலித் மக்களுக்கு காந்தி செய்யும் கேடுகளை நேரடியாக விளக்கிய நிகழ்ச்சி, எப்படியோ வரலாற்றில் மறைக்கப்பட்டு விட்டது.

1922இல் சென்னை சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து, தலித் மக்கள் பொது இடங்களில் நுழைய இருந்தத் தடையை அகற்றும் ஆணை புரட்சிகரமான ஒன்று. இந்த ஆணையைத்தான் தன் மனைவியின் கல்லறையில் இவர் வாசகமாய்ப் பொறித்தார்.



தாத்தா ரெட்டைமலை சீனிவாசன்

கோயில் நுழைவை அவர் விரும்பியதே இல்லை. (அம்பேத்கரின் கருத்தும் இதுதான்) அதற்குக் காரணம் கூறுகிறார்: (கோயில் நுழைவு குறித்து சென்னை சட்டமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்த நேரத்தில் 1938)

''விலக்கப்பட்ட சாதியார் கோயிலுக்குள் பிரவேசிப்பார்களேயானால், இந்துக்களுக்குள்ள நாலு ஜாதிகளில் ஒன்றிலேனும் சேர்க்காமல் விலக்கப்பட்ட அய்ந்தாவது ஜாதியாராக இருக்கவே செய்வார்கள். இந்தக் கபட இயக்கத்தில் ஆதிதிராவிடர்கள் சேருவார்களேயானால், தீண்டாமை ஒழிந்தது என்று ஜாதி இந்துக்கள் பிரதேசமெங்கும் புகார் செய்வார்கள். தனிப்பட்ட சமூகத்தாராக விருந்து இம்மட்டும் பல பாடுபட்டு, தாங்கள் சேகரித்த உரிமைகளை ஆதிதிராவிடர்கள் நாளடைவில் இழந்து விடுவார்கள். ஜாக்கிரதை, ஜாக்கிரதை.'' ('ஆதிதிராவிடர்' என்ற சொல் - செட்யூல்டு சாதிகளில் உள்ள 86 வகுப்புகளையும் சேர்த்தது என்றே குறிப்பிடுகிறார். தலித் தலைவர்கள் இதை கவனிக்க வேண்டும்.)

இந்த எச்சரிக்கை எவ்வளவு பெரிய தீர்க்க தரிசனம். இப்படி தாத்தா ரெட்டைமலை சீனிவாசனார் அவர்களைக்குறித்து எழுதுவதற்கு ஏராளமுள்ளது. சூலை 7, 1945இல் அவர் மறைந்த பிறகு தன் மனைவியின் கல்லறையிலேயே புதைக்கப்பட்டார். சென்னை ஓட்டேரி இடுகாட்டில் பொது இட நுழைவு ஆணையைத் தாங்கியபடி உறங்கும் சீனிவாசன் கல்லறைக்குப் பொலிவூட்ட முயற்சிப்பதாக செய்திகள் உலவுகிறது... ஆனால், இன்றுவரை இது நடந்தபாடில்லை! சூலை 7அன்று தாத்தா சீனிவாசன் நினைவுகள் கடந்தும் விட்டது. ஆனால், எண். 39, லாயிட்ஸ் சாலை, கதீட்ரல் போஸ்ட், சென்னை - முகவரியைக் கடக்கும்போதெல்லாம் அவர் வாழ்ந்த அந்த வீடு, அவரது நினைவைப் புதைத்தபடி இருக்கிறது. தமிழக அரசின் சார்பில் 15.8.2000 அன்று, தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ●

- ஜா.ச.



படிப்பகம்

www.padippakam.com

அ ர சி ய ல்

# தனித் தமிழ் நாடு கோரிக்கை உயிர்த்தெழுமா?

■ 'விடுதலை' க. ராசேந்திரன்

*1930களிலேயே - 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கங்கள் விதைக்கப்பட்ட மண் தமிழ் நாடு! முழக்கத்தை முன்வைத்த கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும், அது கடந்த கால கனவாகி விட்டது. கால வெள்ளத்தில் கரைந்து போன அந்த முழக்கங்கள், இப்போது மீண்டும் கேட்கத் துவங்கியிருக்கின்றன. சந்தனக் காடுகளிலிருந்து, 'ஒலி - ஒளி' நாடாக்கள் மூலம் வந்து கொண்டிருக்கும் கோரிக்கைகளின் ஆதார சுருதி, 'தமிழ்த் தேச' விடுதலைதான். ஆண்டுகள் பல உருண்டோடியும், இந்தத்தனி நாடு கோரிக்கை மட்டும் அவ்வப்போது உயிர்த் துடிப்புப் பெறுவது ஏன்? இதன் வரலாற்றுப் பின்னணி என்ன? ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் துவங்கிய இந்த முழக்கம் எடுத்த உருமாற்றங்கள்தான் என்ன?*

சந்தன மரக்கடத்தல் வீரப்பன் திடீரென்று - விடுதலை வீரராகக் காட்சி தருகிறார். ராஜ்குமாரை விடுவிக்க அவர் முன் வைத்துள்ள நிபந்தனைகளில் அரசியல் தொனிக்கிறது. 'தமிழ்த் தேசியம்' பளிச்சிடுகிறது. இன்னொரு பக்கத்தில் - காஷ்மீர் மாநிலத்துக்கு முழு சுயாட்சி கோரி, முதலமைச்சர் பரூக் அப்துல்லா, சட்டசபையிலேயே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். மற்றொரு புறத்தில், விடுதலைப் புலிகளின் வெற்றிகளால், தமிழ் ஈழம் மலரக்கூடிய நம்பிக்கை ரேகைகள். தமிழீழம் மலர்ந்துவிட்டால், தமிழ் நாட்டிலும், விடுதலைப் போராட்டம் துளிர்த்து விடுமா என்று இந்திய அரசும் பார்ப்பன ஏடுகளுக்கும் அச்சம். ஆக, இந்தத் தொடர் நிகழ்வுகள், 'தமிழ்த் தேசப்' பிரச்சனையை முன்னுக்குக் கொண்டு வந்து விட்டன.

இந்திய வரலாற்றில் - தனிநாட்டுக் கோரிக்கையை முன்னிலைப்படுத்திய மாநிலம் தமிழ் நாடு. இந்தியாவிலிருந்து தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்ற லட்சியங்களுக்கான இயக்கங்கள் இங்கே நடைபோட்டன. அந்த முழக்கங்கள் மீண்டும் தலைதூக்குமா? இந்தியா என்பது ஒரே நாடு தானா? தனிநாடு, மாநில சுயாட்சிகளுக்காக, இந்த மண்ணில் நடந்த இயக்கங்களின் வரலாறு என்ன? இப்போது மீண்டும் அது சாத்தியமா? வீரப்பன் பற்ற வைத்துள்ள இந்தத் தீ கொழுந்து விட்டு எரியுமா? அணிவகுத்து நிற்கும் இந்தக் கேள்விகளை அலசிப் பார்க்கலாம்.

## இந்தியா உருவானது எப்படி?

ஆங்கிலேயர்கள் இந்தியா வருவதற்குமுன், இப்போது இருக்கும் இந்தியா என்ற நாடு இருந்ததா என்ற கேள்விக்கு, இல்லை என்பதே எல்லோருக்கும் தெரிந்த பதில். வட இந்தியாவை எடுத்துக் கொண்டால், அதன் 1800 ஆண்டு வரலாற்றில், ஒரே பகுதியாக இருந்ததாக வரலாறு கிடையாது. மவுரியர், கனிஷ்கர், குப்தர், அர்ஷவர்த்தனர், சுல்தான்கள், பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். தனித்தனி நிலப்பகுதிகளில், தனித்தனி ஆட்சிகளே நடந்தன. ஒரே குடையின் கீழ் பெரும் நிலப்பகுதி கொண்டு வரப்பட்டபோது கூட, தன்னாட்சிகளை அழித்து விடவில்லை.

மராத்தியை மய்யமாகக் கொண்ட மத்திய இந்திய பகுதி, தக்காணப் பிரதேசம் என்று அழைக்கப்படுவதாகும். இங்கும், தனித்தனிப் பிரதேசங்களும், தனித்தனி ஆட்சிகளுமே நடந்திருக்கின்றன. மராத்தி, ஒரிசா, கன்னடம் மற்றும் ஆந்திரப் பகுதிகளைக் கொண்ட இந்தத் தக்காணப்பிரதேசத்தில் சாதவாகணர் என்ற ஆந்திரர்கள், சாளுக்கியர், ராஷ்டிரகூடர், கங்கர், கடம்பர் என்று பல்வேறு வம்சத்தினரின் ஆட்சிகள், தனித்தனிப் பகுதிகளில் நடந்தன.

13ஆம் நூற்றாண்டில், வட இந்தியாவிலிருந்து, மொகலாயர்கள் படை எடுத்து வந்து, தக்காணத்தின் வடபகுதியைக் கைப்பற்றினர். அப்போது தக்காணத் தென்பகுதியில் விஜயநகரப் பேரரசு இருந்தது. இது, மத்திய இந்தியாவின் நிலை என்றால், தென்னிந்தியாவின் வரலாறு என்ன? சேரர், சோழர், பாண்டியர், களப்பிரர், பல்லவர் மற்றும் குறுநில மன்னர்களின் ஆட்சிகளுக்குட்பட்ட, தனித்தனிப்பிரதேசங்கள்தான் இருந்தன. இந்திய வர



படிப்பகம்

www.padippakam.com

லாற்றில், பெரும் நிலப்பகுதியைக் கைப்பற்றி, பல தனியாட்சிகளை ஒழித்து - ஒரு முக ஆட்சியை உருவாக்கிய வர்கள் மொகலாயர்கள்தான்!

மொகலாயர்கள் பேரரசு நடந்த காலத்தில்தான் பார்ப் பனர்கள் நாடுமுழுவதும், சமூக அரங்கில் தங்கள் ஆதிக் கத்தை நிலைப்படுத்திக் கொண்டார்கள். இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத பல்வேறு இனக்குழுக்களை, பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த தும் இந்தக் காலத்தில்தான். முஸ்லிம் அல்லாத எல்லோரை யும், மொகலாய மன்னர்கள் 'இந்து' என்று கூறியதும், 'இந்து' என்ற பெயர் வழக்கில் வந்ததும். அக்காலத்தில் தான். சமஸ்கிருத சுலோகங்களையும், வேதங்களையும் பார்ப்பனர்கள், தங்கள் சுயநலச் சுரண்டலுக்கு ஏற்ப திருத்தி அமைத்துக் கொண்டதும் அப்போதுதான்.

●●

**இலங்கையின் நிர்வாக அலுவலகமே தமிழ் நாட்டில் தான் இருந்தது. இன்றைய பாகிஸ்தானும் பங்களாதேசும் அன்றைய 'இந்தியா'தான். இப்போதுள்ள வடகிழக்கு மாநிலங்களோ, காஷ்மீரோ அன்றைய இந்தியாவில் இல்லை. ஆக, 3000 ஆண்டுகால வரலாற்றில் - தனித்தனிப் பகுதிகளாக நிலவிய தேசங்களை - துப்பாக்கி முனையில் மிரட்டி, ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட நாடுதான் 'இந்தியா'.**

●●

அப்போதும் தமிழ் நாடு மொகலாயர்கள் ஆட் சியின் கீழ் வரவில்லை. அத்தகைய மொகலாயப் பேரரசுகூட, அவுரங்கசீப் புக்குப் பிறகு வீழ்ந்து விட்டது. அதன்பிறகு 66 ஆண்டுகளுக்கு, இந்தியத் துணைக்கண்டத்தைக் கட்டி ஆளும் ஒரே மைய்ய அரசு எதுவும் உருவாகிய தில்லை. ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம் பெனிதான் இங்கே குறி வைத்தது. இந்த வர்த்தகக் கம்பெனி உருவாக்கப் பட்ட நாள் 1.12.1600. இந்திய அரசர்களிடம் உரிமை வாங் கிக் கொண்டு, கடற்கரை ஓரமாக தங்களது வர்த்தகக் குடியேற்றங்களை இவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். கி.பி. 1612இல் முதன் முதலாக சூரத்திலும் தொடர்ந்து மசூலிப் பட்டிணம், (1616) அரிகர்பூர் (1633) சென்னையி லும் (1640) பம்பாயிலும் (1669) கல்கத்தாவிலும் (1686) வர்த்தகக் குடியேற்றங்களை நிறுவினர்.

வர்த்தகம் செய்ய வந்தவர்கள், நாடுபிடிக்கும் ஆசையை விட்டுவிடுவார்களா? இந்தக் கம்பெனி வெறும் கையுடன் வந்துவிடவில்லை. தனக்காக ஒரு கடற்படையை வைத்துக் கொள்ளவும், தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ள வும் பிரிட்டிஷ் ராணியிடம் உரிமை பெற்றிருந்தது. முதலில் மேற்கு வங்கத்தில் உள்ள சிட்டகாங் பகுதியைத் தாக்கி, தோல்வி கண்டார்கள். பிரிட்டிஷ் கம்பெனி நாட்டை விட்டே வெளியேற வேண்டும் என்று உத்தரவு போட்ட அவுரங்கசீப் மரணமடைந்தார் (கி.பி. 1707) பேரரசு சிதைந்து, தனித்தனி ஆட்சிகள் உருவானது. தனது அதி காரத்தை உறுதிப்படுத்த நேரம் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு நல்ல வாய்ப்பாகி விட்டது.

ராபர்ட் கிளைவ், ஆற்காடு பகுதியைப் பிடித்தார் (கி.பி. 1749) தொடர்ந்து 12 ஆண்டுகள் போர் நடத்தி தென்னிந்தி யாவின் பலபகுதிகளைப் பிடித்தனர். கருநாடகப் போர்கள் மூலம் ஆந்திரத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றினர். வெற்றிகளைக் குவித்த ராபர்ட் கிளைவ் வடக்கே போனார். பிளாசி யுத்தம் நடத்தினார்; அதில் வங்கம் வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து ஒரு நூற்றாண்டில், படிப்படியாக ஆங்கிலேயர் கள் கைப்பற்றிய பல்வேறு பகுதிகள்தான் இந்தியா. ஆங்கி லேயர் ஆட்சி செய்த இந்தியாவில், இன்றைய ஆப்கானிஸ் தான் நாட்டின் பெரும் பகுதியும், பர்மாவும் (இன்றைய

## வீரப்பன் வழி சரியானதா?

திராவிட அரசியல் கட்சிகள் - அகில இந்தியக் கட்சிகளோடு அணிசேர்ந்து கொண்டு பதவி அதிகாரத்தைப் பிடிக்கப் போட்டி போடும் நிலை யில், தேர்தல் அரசியலில் பங்கெடுக்காத பல்வேறு தமிழ்த் தேச குழுக்கள், தன்னுரிமை, சுயநிர்ணய உரிமை என்ற முழக்கங்களை முன்வைத்து இயங்கி வருகின்றன.

ஆயுதம் தாங்கியப் போராட்டத்துக்குத் தயாரான 'தமிழர் விடுதலைப் படை'யின் தலைவர் தமிழரசன், பொன்பரப்பி என்ற சிற்றூரில் படுகொலை செய்யப்பட்டார். அவரது தலைமையை ஏற்றுக்கொண்ட இளைஞர்களை, காவல் துறை வேட்டையாடி வருகிறது. கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்க, அரசின் சார்பில் வீரப்பனிடம் தூது போய்க் கொண்டிருக்கும் 'நக்கீரன்' கோபால், தமிழ் நாடு விடுதலைப்படை, தமிழர் மீட்சிப்படையைச் சார்ந்த இளைஞர்கள், வீரப்பனுடன் இருப்பதாகக் கூறியுள்ளார்.

விடுதலைப் போராளியாக வீரப்பன் ஏற்றுள்ள கதாபாத் திரம் பற்றி, தமிழ்த்தேச ஆதரவாளர்களிடையே மாறுபட் ட கருத்துகள் நிலவுகின்றன. 'வீரப்பனை வைத்துப் பிரச் சினையைப் பார்க்கக் கூடாது; வீரப்பனின் கோரிக்கை களைத்தான் பார்க்க வேண்டும்; அதன் நியாயங்களை மறுக்க முடியாது என்று சிலர் வாதிடுகிறார்கள்.

"வீரப்பன் பிரச்சனை இப்போது பரபரப்பாக இருக்க லாம்; இந்த பரபரப்புகள் விரைவில் அடங்கிப் போய்விடும். காட்டுக்குள் இருந்து நடத்தப்படும் கடத்தல் போன்ற நடவடிக்கைகளால், கைதிகள் விடுதலை போன்ற சில அரசு நிர்வாகத்துக்குட்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க முடியுமே தவிர, அரசியல் சமூக விடுதலையை எப்படிப் பெறமுடியும்? இனி, வீரப்பன் போன்றவர்களால்தான் தமிழ்த்தேச உரிமைகளைப் பெற முடியும் என்ற நம்பிக் கையை மக்கள் மனதில் வளர்த்து விடுவது - தமிழ்த் தேச கோட்பாட்டை வளர்த்தெடுக்கப் பயன்படாது" என்று வேறுசிலர் கூறுகின்றனர்.

எப்படி இருந்தாலும் அரசு என்ற அமைப்பு, வீரப்பனி டம் தோல்வி அடைந்து மண்டியிட்டு நிற்கிறது என்பது மட்டும் உண்மை. ஜனநாயக நியாயங்களுக்கு சரியான வழியில் குரல் கொடுத்தால், காதில் போட்டுக் கொள்ள மறுக்கும் அரசாங்கங்கள், வீரப்பன் வழியை மட்டுமே மதிக் கத் தயாராகி இருக்கின்றன என்கிறபோது, இந்த அரசுகள் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை வரும்? ●



படிப்பகம்

www.padippakam.com

# 'தமிழ்த் தேச'த்தின் எதிரி யார்?

ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் உண்மையான விடுதலை, சாதி அமைப்பைத் தகர்ப்பதில்தான் அடங்கியிருக்கிறது என்று சொன்ன டாக்டர் அம்பேத்கர், சாதி அமைப்பைக் கட்டிக்காப்பாற்றும் பார்ப்பனர்களையும் இந்து மதத்தையும் கடுமையான விமர்சனத்துக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தினார்.

இந்திய தேசியம் என்ற அமைப்பே - பார்ப்பன, பனியாக்களின் மேலாண்மைக்காக உருவாக்கப்பட்டதுதான் என்று கூறிய பெரியார், தனிநாடு கோரிக்கையை அந்தக் கண்ணோட்டத்திலேயே முன்வைத்தார். பெரியார், அம்பேத்கரின் பார்ப்பன - இந்து எதிர்ப்புக் கண்ணோட்டத்திலிருந்து மாறுபட்டு, 'தமிழ் பேசும் பார்ப்பனர்களும் தமிழர்கள்தான்' என்று கூறும் தமிழ்த் தேச அமைப்புகள் இருக்கின்றன.

தலித் மக்களின் பிரச்சனைகளைக் கூர்மையாக்கி, தமிழர்கள் ஒற்றுமையை சிதைப்பது, தமிழ்த்தேசக் கோரிக்கையை பின்னுக்குத் தள்ளிவிடும் என்று கூறும் அமைப்புகளும் உண்டு. தமிழ்த் தேச விடுதலைக்கு - தலித் தலைமையை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தும் குழுக்களும் உண்டு. இதைத்தவிர, தமிழர்களுக்குப் பார்ப்பனர்கள் எதிரிகள் அல்ல; தெலுங்கு பேசுவோரும், கன்னடம் பேசுவோரும்தான் எதிரிகள் என்றும், பார்ப்பனர்களிலே தெலுங்கு பேசும் பார்ப்பனர் மட்டுமே எதிரிகள் என்றும், கன்னடம் பேசும் அருந்ததியர் கூட, தமிழ்த் தேசத்தின் எதிரிகள்தான் என்று கூறும் தமிழ்த் தேச அமைப்புகளும் இருக்கின்றன. •

மியான்மர் நாடு) இலங்கையும் அடங்கி இருந்தது.

அப்போது இலங்கை ஒரு மாவட்டமாகக்கூட அங்கீகரிக்கப்பட வில்லை; ஒரு வட்டமாகவே கருதப்பட்டு, அதன் நிர்வாக அலுவலகமே தமிழ் நாட்டில்தான் இருந்தது. இன்றைய பாகிஸ்தானும் பங்களாதேசும் அன்றைய 'இந்தியா'தான். இப்போதுள்ள வடகிழக்கு மாநிலங்களோ, காஷ்மீரோ அன்றைய இந்தியாவில் இல்லை. ஆக, 3000 ஆண்டுகால வரலாற்றில் - தனித்தனிப் பகுதிகளாக நிலவிய தேசங்களை - துப்பாக்கி முனையில் மிரட்டி, ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட நாடுதான் 'இந்தியா'.

## மாநில சுயாட்சி முழக்கங்கள்

அதிகாரங்களை இந்தியர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஆங்கிலேயர் ஆட்சி முன்வந்தபோது, காங்கிரஸ் கட்சி மாநில சுயாட்சி முழக்கங்களை முன்வைக்கத் தவறவில்லை. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுதான் இந்தியா என்றும், மொழிவழி மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்றும் அந்தக் கால கட்டங்களில் காங்கிரஸ் வலியுறுத்தி வந்தது. 1935ஆம் ஆண்டு, இந்தியாவுக்கான அரசியல் சட்டம் ஒன்றை, பிரிட்டிஷ் ஆட்சி உருவாக்கி லண்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. (இந்த சட்டத்தின் பெரும் பகுதிகள் பின்னால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தில் அப்படியே சேர்க்கப்பட்டன) அப்போது, மாநில சுயாட்சியோடு கூடிய கூட்டாட்சியை இந்தியாவில் உருவாக்க வேண்டும் என்று, காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி தீர்மானம் நிறைவேற்றியது என்பது வரலாறு (1942).

இப்படி மாநில சுயாட்சிக்குக் குரல் கொடுத்த காங்கிரஸ் - அரசியல் சட்டத்தில், அதைப் புறக்கணித்தது ஏன்? மய்ய அரசிடமே அதிகாரங்களைக் குவிக்கச் செய்தது ஏன்? பாகிஸ்தான் தனிநாடாகப் பிரிந்து போனதால், மேலும் பிரிவினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கே, வலிமையான மத்திய அரசை உருவாக்க விரும்பினார்கள். அந்த உள்நோக்கத்துடனேயே மாநில உரிமைகள் குறைக்கப்பட்டன என்று பல்வேறு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

## பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம்?

உண்மையில், பாகிஸ்தான் பிரிவினைக்கு வித்திட்டது - இந்து மகாசபை என்ற பார்ப்பன அமைப்பும், காங்கிரசில் வலிமையோடு திகழ்ந்த இந்து மத வெறி கொண்ட பார்ப்பன சக்திகளும்தான். இதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ''இந்தியாவில் இரண்டு தேசங்கள் இருக்கின்றன; முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பார்சிகளின் தாய்நாடு இந்தியா அல்ல'' என்று அகமதாபாத்தில் நடைபெற்ற இந்து மகாசபை மாநாட்டில், அதன் தலைவரான வி.டி. சவர்க்கார் பிரகடனப்படுத்தினார். இது நடந்தது 1937இல்.

அப்போது, முஸ்லிம்கள் தனிநாடு கோரவில்லை. அதே 1937ஆம் ஆண்டு லக்னோவில் நடந்த முஸ்லிம் லீக் மாநாட்டில் கூட, ஒன்றுபட்ட இந்தியாவை ஆதரித்துதான் தீர்மானம் போட்டார்கள். அதற்குப் பிறகு 1940இல் லாகூரில் நடந்த மாநாட்டில் தான் - பாகிஸ்தான் பிரிவினையைக் கேட்டு, முஸ்லீம்லீக் தீர்மானம் நிறைவேற்றியது. 3 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு என்ன காரணம்?

இந்து மகாசபையின் மதவெறிப் போக்கு; காங்கிரசுக்குள் இருந்த பார்ப்பன மதவெறி சக்திகளின் முரட்டுத்தனமான அணுகுமுறைகள்; 1937ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தோழமையோடு காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் போட்டியிட்டன. காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது. முஸ்லிம் லீக் படுதோல்வி அடைந்தது. வெற்றி ஆணவத்தில் மிதந்த காங்கிரஸ், லீக்கை அவமதித்தது. குறிப்பாக, உத்தர பிரதேசத்தில் - காங்கிரஸ், முஸ்லிம் லீக் கூட்டு அமைச்சரவை அமைக்க முஸ்லிம் லீக் விரும்பியது. முஸ்லிம் லீக்கைச் சார்ந்த 2 அமைச்சர்களுக்கு இடம் தந்தால் போதும் என்பதே முஸ்லிம் லீக்கின் கோரிக்கை.

இப்பிரச்சனையில் நேரடியாகத் தலையிட்ட நேரு, கடும் நிபந்தனை



படிப்பகம்

www.padippakam.com

களை முஸ்லிம் லீக்குக்கு விதித்தார். லீக் அமைச்சரவையில் சேரவேண்டுமானால், அதன் ஆட்சிமன்றக் குழுவையே கலைத்துவிட வேண்டும்; இடைத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தக் கூடாது; லீக் சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் மேல் நிபந்தனைகள் போட்டார் நேரு. முஸ்லிம் லீக் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலையை காங்கிரஸ் உருவாக்கியதால், தன்மானமுள்ள அக்கட்சி, தனி நாடு கோரிக்கையை முன்வைக்கத் துவங்கியது.

தந்தை பெரியாரும் டாக்டர் அம்பேத்கரும் பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை ஆதரித்தனர். 1940இல் தனி நாடு கோரிக்கையை முன்வைத்து, 1947இல் பாகிஸ்தானைப் பிரித்துக் கொண்டுவிட்டார் ஜின்னா! அதே நேரத்தில் 1930ஆம் ஆண்டுகளிலிருந்தே, தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்ற குரலை ஒலித்து வந்தார் பெரியார்.

## தனிநாடு முழக்கங்கள்

இந்தியா ஒரு தேசமே இல்லை' என்ற கருத்தை 1930ஆம் ஆண்டிலேயே வலியுறுத்திய பெரியார், 1937இல் சென்னை மாகாணத்தில் ஆட்சி செய்த ராஜகோபாலாச்சாரி, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியபோது - 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முன் வைத்தார். பின்னர் இது 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கமாக மாறியது. அன்றைய சென்னை மாகாணத்தில் ஆந்திரம், கேரளம், கருநாடகத்தைச் சார்ந்த சில பகுதிகளும் உள்ளடங்கி இருந்ததால், முழக்கம் - 'திராவிட நாடு' என்று மாறியது. மொழி வழி மாநிலப் பிரிவினை ஏற்பட்ட பிறகு, பெரியார் 'தமிழ் நாடு விடுதலை' முழக்கத்தை முன்வைத்தார்.

தமிழகத்தில் கட்சிவேறுபாடு இன்றி, தனிநாடு முழக்கங்கள் ஒலித்தன. 1947இல் கடலூரில் நடந்த திராவிட நாடு பிரிவினை மாநாட்டில், திராவிட நாடு படத்தைத் திறந்து வைத்துப் பெரியார் பேசினார். நாவலர் சோமசுந்தர பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், அவர் வழிவந்த பெருஞ்சித்திரனார் போன்ற தமிழறிஞர்களும், 'நாம் தமிழர்' இயக்கத்தை நிறுவிய சி.பா. ஆதித்தனாரும் தமிழ் நாடு விடுதலைக்குக் குரல் கொடுத்தார்கள்.

> **பார்ப்பனரல்லாத மக்களை பார்ப்பன - பனியா சுரண்டலிலிருந்து மீட்க, மொழி இன அடிப்படையில், தனி நாடு கோரும் வலிமையான முழக்கங்கள் புயலைக் கிளப்பிய தமிழகத்தில், அந்த முழக்கங்கள் ஓசை இன்றி அடங்கிப் போன நிலையில், மீண்டும் தமிழ்த் தேசப் பிரச்சனைகள் விவாதத்தைக் கிளப்பியிருக்கின்றன.**

மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பிறகும் திராவிட முன்னேற்றக் கழகம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்தையே முன் வைத்தது. ''ஆந்திரம், கேரளம், தமிழகம், கருநாடகம் எனும் நான்கு மொழி வழி அரசுகளும் கூட்டாட்சித் திட்டமான திராவிட நாடு அமைத்துக் கொண்டு, வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட வேண்டும்'' என்று தி.மு.க. தலைமை இதற்கு விளக்கமளித்தது.

பின்னர் பிரிவினை கோரும் அரசியல் கட்சிகளை, தேர்தலில் போட்டியிடத் தடைசெய்யும் அரசியல் சட்டத்தின் 16ஆவது திருத்தம் ஒன்றை - அன்றைய காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து திராவிட நாடு கோரிக்கையை தி.மு.க கைவிட்டது. ஆனாலும் கோரிக்கைக்கான நியாயங்கள் அப்படியே இருப்பதாக அக்கட்சி அறிவித்தது.

## ஆகஸ்ட் 15 - துக்க நாள்

ஆகஸ்ட் 15, 1947ஆம் ஆண்டு கிடைத்தது, திராவிடருக்கான உண்மையான சுதந்திரமா என்ற விவாதம் கிளம்பியது. 'இது திராவிடருக்கு சுதந்திரநாள் அல்ல; துக்க நாள்' என்று அறிவித்த பெரியார், பிரிட்டிஷாரிடமிருந்து, பார்ப்பன - பனியா கூட்டத்துக்கு ஆட்சி கையளிக்கப்பட்டுள்ளது' என்றார். பெரியாரின் இந்தக் கருத்தை திராவிடர் கழகத்திலே இருந்த அண்ணா மறுத்து தனது 'திராவிட நாடு' பத்திரிகையிலே ஒரு நீண்ட கட்டுரை எழுதினார். 'சுதந்திரத்தை ஏற்றுக் கொண்டு, பிறகு திராவிட நாடு கோரிக்கைக்கு வலிமை சேர்க்கலாம் என்று அவர் வாதிட்டார். அந்த சுதந்திர இந்தியாவில்தான், அடுத்த 15ஆண்டுகளில் பிரிவினைதடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு, பிரிவினை பற்றி பேசுவதே தடை செய்யப்பட்டது.

திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைக் கைவிட்ட தி.மு.க., 1967ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சி முழக்கத்தை முன்வைத்தது. தமிழ் நாட்டில் மாநில சுயாட்சிக் கொள்கைக்காக, காங்கிரசிலிருந்து வெளியேறி, 'தமிழரசுக் கழகத்தை' ஏற்படுத்தியவர் மா.பொ.சிவஞானம். அதே நேரத்தில் அவர் திராவிட நாடு கோரிக்கையை எதிர்த்து வந்தார்.

1969இல் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி, மத்திய மாநில உறவுகளை ஆராயும் பி.வி.ராஜ மன்னார் குழு ஒன்றை அமைத்து, குழுவின் பரிந்துரைகளை, மாநில சுயாட்சி ஆதரவுத் தீர்மானமாக தமிழக சட்டப் பேரவையிலும் (20.4.74), மேலவையிலும் (27.4.74) நிறைவேற்றினார். (இப்போது காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா, சட்டசபையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, தமிழக முதல்வர் கருணாநிதியிடம் நேரில் ஆதரவு கேட்க வந்தார். ஆனால் முதலமைச்சரோ, தனது உறுதியான ஆதரவை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.)

தி.மு.க.வைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க., மாநில சுயாட்சியை ஏற்கவில்லை. கூடுதல் அதிகாரம் என்ற கோரிக்கையோடு நின்று விட்டது. 1976இல் அவசர நிலைப் பிரகடனம் நடைமுறையில் இருந்த போது, அகில இந்திய அண்ணா தி.மு.க. என்று அவசர அவசரமாக எம்.ஜி.ஆர் மாற்றிக் கொண்டார். தந்தை பெரியார் நடத்தி வந்த 'விடுதலை' நாளேட்டின் முகப்பில் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தையும், தந்தைபெரியார் மறைவுக்குப் பிறகு, தி.க. தலைமை நீக்கிவிட்டது. ●



படிப்பகம்

www.padippakam.com



■ ரவிக்குமார்

> 'தடா' சட்டத்தை எதிர்த்து
> தொடர்ச்சியான போராட்டத்தை
> நடத்திய தமிழக இயக்கங்களும்,
> கட்சிகளும் இந்த வாய்ப்பைப் பயன்
> படுத்திக் கொண்டு, இதுபற்றிய பிரச்
> சாரத்தைத் தீவிரப்படுத்தியிருக்க
> வேண்டும். ஆனால், அது நடக்க
> வில்லை. அதுபோலவே மாஞ்சோலை
> தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சனை
> முதல், காவிரி நதிநீர்ப் பிரச்சனைவரை
> அவற்றை முன்வைத்து அரசியல்
> செய்தவர்கள் - இப்போது அமைதியாக
> உள்ளனர். இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

# வீரப்பனின் கடத்தல்

# எங்கு போய் முடியும்?

வீரப்பன் இப்போது தமிழில் நன்றாக விற்பனையாகிக் கொண்டிருக்கிற ஒரு அடையாளம். கடத்தல்காரனாக, தமிழ்த் தீவிரவாதியாக, இரண்டு மாநில போலிசையும் 'தண்ணி காட்டும்' கதாநாயகனாக, சிலருக்கு 'தமிழர் தலைவராக' பல்வேறு வடிவங்களை எடுத்துவரும் வீரப்பன் - சகல மட்டங்களிலும் செலவாணியாகிற ஒரு அடையாளமாக மாறியிருக்கிறார். வீரப்பன் படம் தீட்டப்பட்ட 'டி ஷர்ட்'டுகள் வரவேண்டியதுதான் பாக்கி.

வீரப்பன், ராஜ்குமாரைக் கடத்திச் சென்று ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையிலும், தொடர்ந்து பத்திரிகைகளில் முதல் பக்க செய்தியாக இடம் பெற்று வருகிறது, இந்தக் கடத்தல் சம்பவம். 'சித்தி' போல ஒரு மெகா தொடரின் அளவுக்குத் தொலைக்காட்சியில் இந்த செய்திகள் விரும்பிப் பார்க்கப்படுகின்றன. இந்தக் கடத்தலின் பின்புலமாக உள்ள சாகசம், பார்வையாளர்களுக்கு சுவாரசியம் தருகிறது.

வீரப்பனை மீசையில் மட்டுமின்றி சாகசத்திலும் 'இமிடேட்' செய்யும் கோபால், இன்னொரு கதாநாயகனாக வலம் வருகிறார். இதன் கிளைக் கதையாக 'தமிழ்த் தேசியம்', 'தமிழ் நாடு விடுதலை' போன்றவை அவ்வப்போது பேசப்படுகின்றன. ராஜ்குமாரை விடுவிப்பாரா வீரப்பன் என்பதோடு, தமிழ் நாட்டை விடுதலை செய்வாரா வீரப்பன் என்ற கேள்வியும் இப்போது விவாதத்துக்கு வந்துள்ளது.

தற்போது வீரப்பனோடு இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள 'தமிழ் நாடு விடுதலைப்படை', தமிழரசன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழரசன், மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் முக்கிய பங்காற்றியவர். சாதிப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை - மார்க்சிய லெனினிய அரசியலின் மய்யத்துக்குக் கொண்டு வந்தவர். ஆயுதப் போராட்டம் என்பது, தத்துவார்த்த நிலையில் மட்டுமே பேசப்பட்டிருந்த நிலையில் - அதை நடைமுறை சாத்தியமாக்கியவர் தமிழரசன். 1987இல் பொன்பரப்பியில் நடந்த ஒரு வங்கிக் கொள்ளை முயற்சியின் போது கையில் ஆயுதங்கள் இருந்தபோதும், அவற்றைப் பயன்படுத்தியிருந்தால் தப்பித்திருக்க முடியும் என்ற போதிலும் - சாதாரண மக்களுக்கு எதிராக துப்பாக்கியை உயர்த்தாமல் கொல்லப்பட்டவர்.

தமிழரசனுக்குப் பிறகு 'தமிழ் நாடு விடுதலைப்படை' என்ற பெயரில் செயல்பட்ட பலர் கைது செய்யப்பட்டனர்; சிலர் கொல்லப்பட்டனர். எஞ்சிய ஒரு சிலரிடம் ஆயுதங்கள் மட்டுமே இருந்தன; அரசியல் இல்லை. அதன் காரணமாக, வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடுவது, கட்டைப் பஞ்சாயத்து செய்து பணம் பறிப்பதை, அவர்கள் தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்தின் நடைமுறைகளாக மாற்றினர். பணம் சேர்த்தும் பங்குபோட்டுக்கொள்வதில் சிக்கல் வந்தது. மாறி மாறி வெட்டிக் கொண்டு முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் செத்துப் போனார்கள். இதில் உதிரியாகப் போன சிலர், சாதி வெறியர்களின் கைக் கூலியாக மாறினர்.

தமிழ் நாடு விடுதலைப்படை கோஷ்டிகளில் அதிகம் அவப்பெயர் வாங்காத குழு - தற்பொழுது பேசப்படும் மாறனின் குழு. தமிழரசனின் அடியொற்றி, அரசியலுக்கும் முக்கியத்துவம் தந்து செயல்பட இவர்கள் முற்பட்டனர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தோடு சாதி ஒழிப்புப் போராட்டத்தை இணைக்க விரும்பிய இந்தக் குழுவினர்தான் - சாதி ஒழிப்பு பற்றிய தமிழரசனின் கருத்துகளை மீண்டும் தமிழ் நாட்டில் பரவச் செய்தனர்.

மார்க்சிய - லெனினிய இயக்கத்திலிருந்து விலகுவதற்கு முன்னர் 1984இல் மீன்சுருட்டி என்ற இடத்தில் தமிழரசன் சாதியொழிப்பு மாநாடு ஒன்றை நடத்தினார். 'தமிழ் நாடு விவசாயிகள் கழகம்' என்ற அமைப்பின் பெயரால் ஒருங்கிணைக்கப்பட்ட அந்த மாநாட்டில் தான் - தமிழரசனின் புகழ் பெற்ற 'சாதியொழிப்பு' பற்றிய அறிக்கை முன்வைக்கப்பட்டது. சாதியை ஒழிக்கக்கூடிய முன்னணி சக்தி - தாழ்த்தப்பட்டவர்களே என்ற நிலைப்பாட்டை வலியுறுத்திய அந்த அறிக்கையைப் படித்தால், தமிழரசன் அம்பேத்கரின் 'சாதி ஒழிப்பு' நூலைப் படித்திருந்ததற்கான அறிகுறிகளைக் காணமுடிகிறது. பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அந்த நூல் ஒன்றே - தமிழில் அப்போது கிடைத்த அம்பேத்கரின் ஒரே நூலாக இருந்தது.

தமிழரசன், அம்பேத்கர் பெயரைக் குறிப்பிட்டது மற்றும் சாதி ஒழிப்பையும் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டத்தையும் ஒன்றிணைத்தது என்பது போன்ற சாதகமான காரியங்களை செய்தாரென்றாலும்கூட, சாதி ஒழிப்பு பற்றிய அம்பேத்கரின் சிந்தனைகளை அவரும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. ''அம்பேத்கர், பெரியார் இருவருமே



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனீயத்தைத் தகர்த்தால் சாதி ஒழிந்துவிடும் எனப் பார்க்கின்றனர். பார்ப்பனீயத்தைத் தகர்க்க - கல்வி, வேலை, அரசியல் அதிகாரம் அனைத்திலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால் சரியாகிவிடும் எனப் பார்க்கின்றனர்.''

''அத்தகைய பிரதிநிதித்துவத்தையும் சாதி அமைப்பின் காவலர்களான ஏகாதிபத்திய தரகு முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்திடம் அம்பேத்கரைப் பொறுத்தவரையில் கெஞ்சியே, பெரியாரைப் பொறுத்தவரையில் வாய் மிரட்டல் மூலமே சாதிக்க முயன்றனர்...'' ''சீர்திருத்த சகதிக்குள் சுற்றுவதற்கு அப்பால் அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களது வர்க்கப் பின்னணி'' எனதமிழரசன் குறிப்பிடுகிறார்.

அம்பேத்கர், பெரியார் பற்றிய மிகவும் கொச்சையான இந்த மதிப்பீடு - எந்த விதத்திலும் மற்றவர்களிடமிருந்து தமிழரசனை வேறுபடுத்திக் காட்டவில்லை. ''பாட்டாளி வர்க்கத் தலைமை இல்லாமல் உழைக்கும் மக்களை அணி சேர்க்காமல், தாழ்த்தப்பட்டவர்களால் அதிகாரத்தை வெல்லவே முடியாது'' எனத் தமிழரசன் கூறிய தீர்வுக்கு தடையாக இருந்தது எது? சாதி ஒழிப்பு பற்றிப் பேசிய தமிழரசன், தனது இயக்கத்தில் பெரும்பாலும் வன்னியர்களையே சேர்க்கவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? அரசியல் ஆழமற்ற அவரது நடைமுறைகள், தமது தர்க்கரீதியான முடிவை இளவரசனிடமும், கூவாகம் ராமசாமியிடமும் கண்டன என்பதே உண்மை.

இன்று தமிழ்த்தேசியம் பேசுகிற பலரும் வீரப்பனது இந்தக் கடத்தல் நடவடிக்கையை சாதகமாகவே பார்க்கின்றனர். அதேசமயம், அதை வெளிப்படையாகச் சொல்லவும் அஞ்சுகின்றனர். வீரப்பனின் பழைய வரலாறு, அவர்களுக்கு மனத்தடையை உண்டு பண்ணுகிறது.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளது இந்தக் கடத்தல். ஆனால், அந்தப் பிரச்சனைகளை இதுவரை பேசிக் கொண்டிருந்த இயக்கங்கள் இப்போது அமைதி காக்கின்றன. தமிழ் நாடு விடுதலைப் படையினரோ இந்தக் கடத்தலால் தங்களுக்குக் கிடைத்துள்ள பிரபலத்தை - தமது அரசியல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வலுவின்றி உள்ளனர். அற்கான வெகுஜனப் பிரச்சாரத்தை எடுத்துச் செல்லும் அமைப்போ திட்டமோ அவர்களுக்கு இல்லை.

'தடா' சட்டம் காலாவதியாகி அய்ந்து ஆண்டுகள் கடந்த பின்பும் அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் உள்ளனர். பிணையில் வெளிவந்தவர்கள் வழக்குகளைச் சந்தித்து வருகின்றனர். இந்த அவலத்தை வீரப்பனின் கோரிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. 'தடா' சட்டத்தை எதிர்த்து தொடர்ச்சியான போராட்டத்தை நடத்திய தமிழக இயக்கங்களும், கட்சிகளும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இதுபற்றிய பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. அதுபோலவே, மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சனை முதல், காவிரி நதிநீர்ப் பிரச்சனைவரை அவற்றை முன்வைத்து அரசியல் செய்தவர்கள் - இப்போது அமைதியாக உள்ளனர். இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

ஏனென்றால், இந்தப் பிரச்சனைகள் இதுவரை பேசப்பட்டிருந்த தளத்திலிருந்து சட்டென்று வேறு தளத்துக்கு நகர்த்தப்பட்டுள்ளன. பிணைக் கைதிகளை முன்வைத்து இவை பேசப்படும்போது, இதுவரை மரபாக பயன்பட்டு வந்த களங்கள் காலாவதியாகி நிற்கின்றன. இது ஒரு மோசமான அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

தங்கள் நடவடிக்கையின் பலனை தாங்கள் பயன்படுத்த முடியாத அரசியல் பலவீனம் கொண்ட தமிழ் நாடு விடுதலைப்படை ஒருபுறம், தங்களது அரசியல் முழக்கங்கள் பறிபோய் விட்ட அதிர்ச்சியில் திகைத்து நிற்கும் தமிழ்த்தேசிய இயக்கங்கள் மறுபுறம். இந்நிலை தொடர்ந்தால், ராஜ்குமாரின் கடத்தல் ஒரு நாடகமாகவே முடிந்து போகும். தமிழ் நாட்டில் அரசு பயங்கரவாதமும், கர்நாடகாவில் தமிழ் மக்கள் மீது இனவெறித்தாக்குதலும் இந்த நாடகத்தின் தொடர் நிகழ்வுகளாகிவிடும்.

**ஜனநாயக நடைமுறைகள் முற்றாக முடக்கப்படும்போது, பயங்கரவாத நட**



**வடிக்கைகள் வலுவடைகின்றன. மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான சாதாரண போராட்ட வடிவங்கள்கூட, இன்று அரசாங்கத்தால் மோசமான முறையில் ஒடுக்கப்படுகின்றன. கொடிய சட்டங்களைத் தனது விருப்பம்போல அரசு பயன்படுத்துகிறது. மெல்ல மெல்ல தமிழ் நாடு ஒரு போலிஸ் ராச்சியமாக மாறிவருகிறது.**

இதன் எதிர்விளைவுதான் வீரப்பனின் கடத்தல் போன்ற நடவடிக்கைகள். இவை இரண்டும் ஒன்றையொன்று வலுப்படுத்தக்கூடியவை. இரண்டுமே ஜனநாயக நடைமுறைகளை நாசம் செய்பவை. இன்று நிலவும் மவுனம், இந்த இரண்டு தரப்பினராலும் திணிக்கப்பட்ட மவுனமாகும். இதை உடைத்து ஜனநாயகக் குரல்களைத் திறந்துவிடுவதுதான் இன்று உடனடித் தேவையாகும். அதை, ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள் மட்டுமே செய்ய முடியும். ●



படிப்பகம்

www.padippakam.com

# நினைவில் நின்ற வரிகள்...

## குடிநீர் தட்டுப் பாடு ஏன்?

உலக மயமாக்கலின் விளைவாக நமது பெண்கள் குடிநீருக்கு அலைகிற அபாயம் நேர்ந்திருக்கிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? ஆம். நம்பமுடியாத விஷயங்கள், சீர்கேடுகள் உலக மயமாக்கலின் விளைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்தவரை, 83% மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை என புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

நம்முடைய குடிநீரும், நிலங்களும் பன்னாட்டுநிறுவனங்களின் ஆக்கிரமிப்புக்கு ஆட்பட்டுள்ளன. பெப்சி, நெஸ்ட்லே, மான்சான்டோ போன்ற அமெரிக்க நிறுவனங்கள், குடிநீர் வாங்கலில் தன் ஆதிக்கக் கரங்களை நீட்டியுள்ளன. மகாராட்டிரத்தில் உள்ள முக்கியமான ஏரி தான்சா. அதில் நீர் எடுக்க ஆதிவாசிப் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம் தெரியுமா? மகாராட்டிர அரசு, கோகோ கோலா கம்பெனிக்கு தான்சா ஏரியை குத்தகைக்குத் தாரை வார்த்திருக்கிறது. உள்நாட்டுப் பெண்கள் குடிநீர் தேடி வீதிவீதியாக அலைய, வெளிநாட்டுக் கம்பெனிக்கு ஏரியே தாரை வார்க்கப்பட்டிருக்கிறது.

ஏதோ மகாராட்டிராவில் தான் இது நடக்கிறது என்று நாம் சும்மாயிருந்து விட முடியாது. ஏனெனில், சென்னை மார்க்கெட்டைப் பிடிக்க 'பெப்சி' முழுமூச்சுடன் இறங்கி இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். 'அக்வாபைனா' என்கிற பெயரில் மாதம் ஒன்றுக்கு 6 லட்சம் பாட்டில் குடிநீரை சென்னையில் விற்க முடியும் என்று நம்புவதாக 'பெப்சி' நிறுவனத்தின் நிர்வாகத் துணைத் தலைவர் தெரிவித்திருக்கிறார். குடிப்பதற்கு நீரில்லை என்று பெண்கள் போராட்டம் நடத்தும் சென்னையில், முக்கால் லிட்டர் குடிநீரை 10 ரூபாய்க்கு விற்கிறது 'பெப்சி'.

ஒரு புறத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆலைக் கழிவால் நிலத்தடி நீர் மாசுபட்டு குடிநீர் கிடைக்காமல் அவதி; மறுபுறத்தில் குடிநீர் ஏரிகள் அவர்களது ஆக்கிரமிப்பில். உலக மயமாக்கலால் ஏற்பட்டிருக்கும் இத்தகைய ஆக்கிரமிப்பு, எத்தகைய அத்துமீறல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சின்னச் சின்ன குக்கிராமங்களில் கூட 'பெப்சி'யும் 'கோக்'கும் கிடைக்கும். ஆனால், குடிக்கத் தண்ணீர் கிடைக்காது என்றால் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? ■

– வழக்கறிஞர் **கே. சாந்தகுமாரி**

*'உலகமயமாக்கலும் பெண்களும்' என்ற நூலில்.*

## மரண வலி ஏற்படுகிறது

முண்டியிட்டுக் களைத்த கால்கள், நடையின் சுகம றிந்து எழுந்து மணல் தேடி அடிவைக்கையில் - குறிபார்த்து காத்திருந்த கூரிய கற்கள் பாதங்களைப் பதம் பார்க்க, நிலை தடுமாறி நிதானம் உணரும் முன், நகம் பெயர்ந்து ரத்தம் கொட்டுகையில் ஏற்படுமே மரணவலி - அதே வலியைத்தான் தாமிரபரணி ஆற்றில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளை நினைக்கும் ஒவ்வொரு நொடியும் ஏற்படுத்துகிறது. 17 உயிர்களை பலி கொடுத்த நிலையிலும் மாஞ்சோலைத் தொழிலாளர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம்தான் என்ன? மீண்டும் அதே அடிமைத்தனம்.

அகப்பட்டவர்களைக் கொன்று ரத்தம் ருசித்த வாயோடு ஜனநாயகம் பேசுபவர்கள் எண்ணிக்கையில் அதிகரித்து வருகின்றனர். ■

**– ஜெயராணி**

*பத்திரிகையாளர், 'கலை' மாத இதழில்*

## மதமாற்றத்தால் மரியாதை

நாங்க மரியாதையை எதிர்பார்த்துத்தான் மதம் மாறினோம். யாராக இருந்தாலும் பக்கத்திலே இருக்கிற மனுஷனை சாதியைச் சொல்லி, மதத்தைச் சொல்லிப் பிரிக்கக் கூடாது. மதம் மாறின நாங்கள், அதை ரொம்ப உணர்ந்திருக்கோம். ரம்ஜான், பக்ரீத்துக்கு எல்லோரையும் கூப்பிடுகிறோம். எல்லோரும் ஒண்ணாக் கலந்துக்குறோம். எந்தச் சண்டையுமில்லை; சச்சரவுமில்லை. அண்ணன் தம்பி பாசத்துடன்தான் இருக்கோம். மதம்தான் மாறியிருக்கோம். ஆனா மனசு மாறலைங்க.'' ■

**-அகமது அக்பர்**

*மீனாட்சி புரத்தை உள்ளடக்கிய தேன் பொத்தை பஞ்சாயத்துத் தலைவரான 65 வயது முதியவர், அனுபவப்பட்ட உணர்வில் சொல்கிறார்- 'குமுதம்' - 10.8.2000*



படிப்பகம்

# சாதியில் நீந்தும் நீதி

அ வ ல ம்

## சென்னை சட்டக் கல்லூரி மற்றும் விடுதியில் தொடரும் அநீதி

கல்வி கண் போன்றது. இந்த கண்ணைப் பெற்ற சில அடித்தள மக்களால் தான், இச்சமூகத்திற்கே சிறிது வெளிச்சம் கிடைக்க ஆரம்பித்துள்ளது. சென்னை சட்டக்கல்லூரி, அந்த வெளிச்சத்தை அணைக்கும் வேலையைத் தொடங்கியுள்ளது. சட்டக் கல்லூரியில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதுவும் வெளியூரிலிருந்து தங்கிப் படிக்கும் மாணவர்கள் அதிகம். அவர்களுக்கு கல்லூரிகளின் விடுதி தங்குவதற்கு உள்ளது

கடந்த ஆண்டு தலித் மாணவர்கள் ஓரணியில் திரண்ட போதும், திட்டமிட்ட சில சதிகள் மூலம் அது தள்ளிப் போட வகை செய்யப்பட்டது. அதற்கு இந்தசட்டக்கல்லூரி நிர்வாகமும் உடந்தை. மேலும், விடுதியில் உணவு சரியில்லை என தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பலர் இணைந்து மொட்டை அடித்துக் கொண்டு போராட்டம் நடத்தினார்கள். இவர்கள் பழிவாங்கப் பட்டது வேறு செய்தி.

இந்நிலையில், அனைத்து மாணவ, மாணவிகளும் இணைந்து படிப்பில், வாழ்க்கையில் முன்னேறுவதற்கு பொதுவாக விடுதி - ஒரு களமாக எப்போதும் இருந்து வந்துள்ளது. மாணவ மாணவியர் விழிப்புணர்வு பெற்று திரள்வதையும் சில சக்திகள் விரும்பவில்லை. அதனால், மராமத்துப் பணிகளைக் காரணம் காட்டி - கல்லூரி திறந்து இரண்டு மாதங்களாகியும் விடுதி திறக்கப்பட வில்லை.

இதனால், மாணவர்களின் வருகை விழுக்காடு குறைந்து விட்டது. கடந்த ஆண்டு இதே நிலை இருந்ததால், பெரும்பாலான தலித் மாணவர்கள் தேர்வு எழுத தண்டத்தொகை கட்ட வேண்டியதாகி விட்டது என்று மாணவர்கள் கூறினர். இந்த ஆண்டும் அதே போல் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தோடு ஒரு மாணவர் கூறினார்.

''விடுதி திறந்தால் கூட, இன்னும் 7 மாதங்கள் மட்டுமே நடைபெறும். நடுவில் விடுமுறை வந்தால் அப்போதெல்லாம் உணவு இருக்காது. தூரத்திலிருந்து வந்து பயிலும் நாங்கள் இதை எப்படிச் சமாளிப்பது'' என்று இன்னொரு மாணவர் கூறினார்.

இதை முதல்வரிடம் கேட்டால், ஏகப்பட்ட சாக்கு போக்குகள் சொல்கிறாராம். ''நிர்வாகத்தின் உள்ளார்ந்த நோக்கம் வெளிப்படையாய் சாதி உணர்வாய் இருக்கும் போது, அவர் வேறு எப்படி நடந்து கொள்ள முடியும்'' என்று ஒரு மாணவ அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கூறினார். அதைவிடக் கொடுமை உதவித் தொகை பெறுவதற்குத் தேவையான விண்ணப்பங்கள் வழங்கப் படுவதில்லை. இருக்கும் ஒரு விண்ணப்பத்தை தலித் மாணவர்கள் சொந்த செலவில் நகலெடுத்துக் கொள்ள வேண்டுமாம். அதோடு அலட்சியமான பதில்கள் வேறு. தலித் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நூல் கடனுதவித் தொகை தலா 5,000 இரண்டு ஆண்டுகளாக வழங்கப் படவில்லை.

அரசின் திட்டங்கள் இதுபோன்ற கல்வி நிறுவனங்களால் கிடைக்கவிடாமல்தடை செய்யப்படுகின்றது. மாணவ, மாணவிகள் கோபத்தோடும் பயத்தோடும் உள்ளனர். ஏனெனில், கடந்த ஆண்டு 'ஈவ் டீசிங்' கை எதிர்த்துப் போராடிய சில மாண விகளுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட சாதி மாணவர்களை முதல்வர் தூண்டிவிட்டு கலகம் விளைவித்ததாக செய்திகள் அடிபடுகின்றன.

அவருக்கு ஆதரவாகப் போராடிய மாணவர்களுக்குத்தான் இந்த ஆண்டு முதல்வரின் 'நெற்றிக் கண்' திறந்திருக்கிறதாம். அது விடுதி வடிவில். நீதி பெற்றுத்தரும் இடமே அநியாயமாக நடந்து கொள்ளும்போது நீதி எங்கே உருப்படப்போகிறது. நீதி சாதியின் பக்கம் சேர்ந்து கொண்டு அநீதியாகிவிட்ட கதை தான் சென்னை டாக்டர் அம்பேத்கர்சட்டக் கல்லூரி. (மாணவர்களின் நலன் கருதி பெயர்கள் மறைக்கப்பட்டுள்ளன)

- நம் செய்தியாளர்

### அரசு திட்டத்திற்கு முரணாக கல்லூரி

டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி எஸ்.சி./எஸ்.டி. மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கை

சட்டக் கல்வி பயிலும் எஸ்.சி./எஸ்.டி. மாணவ, மாணவியருக்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து 1998 - 1999 கல்வியாண்டு முதல் நூல் வங்கித் திட்டத்தைத் தொடங்கியது. ஆனால், இன்று வரை சட்டக்கல்லூரி எஸ்.சி./எஸ்.டி. மாணவ, மாணவியராகிய நாங்கள் அந்த அரசுத் திட்டத்தைப் பெற முடியவில்லை. இது குறித்து கல்லூரி முதல்வரிடம் பல முறை கூறியும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கல்லூரியின் இச்செயல் அரசின் திட்டத்திற்கு முரணாக இருக்கிறது. ஏனெனில், ஆதிதிராவிடர் நலத்துறை செயல் திட்டம் வெளியீடு பக்கம். 26, எண். 6.4இல் ''ஆ.தி./ப.கு. மாணவர் ஒருவருக்கு ஒரு இணை புத்தகம் வாங்க ரூ. 5000 வீதம் வழங்கப்படுகிறது'' என கூறப்பட்டுள்ளது. இதன்படி எங்களுக்கு எதிர்காலப் பணிக்குத் தேவைப்படும் புத்தகங்கள் வாங்க இத்தொகை உதவும். ஆனால், இதைத் திரும்பப் பெற்றுக்கொள்வதன் மூலம் கல்லூரி நிர்வாகம் நூல்களை கல்லூரி சொத்தாக மாற்ற முயல்கிறது.

எங்களுக்கான உரிமையை பெறுவதில் காட்டப்படும் நிர்வாக மெத்தனம், தீண்டாமையின் ஒரு வடிவமாகவே நாங்கள் கருதுகிறோம். எனவே, 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கோருகிறோம்.

இது குறித்து ஆதிதிராவிடர் நலத்துறை இணைச் செயலர்களிடமும் நாங்கள் முன்பு புகார் கூறியிருந்தும் நடவடிக்கை ஏதுமில்லை. சட்டக்கல்லூரி மாணவ, மாணவியருக்கே இந்நிலைமை என்றால், மற்றவர் நிலை எப்படி இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. •

www.padippakam.com

# அரசமைப்புச் சட்டத்தை மீறும் அய்.அய்.டி.

**இம்முறையும் இட ஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டால், அடுத்த முப்பதாண்டுகளுக்கு எவ்வளவு கூப்பாடு போட்டாலும் - ஒரு மாற்றமும் நிகழப் போவதில்லை**

■ **ஜெயராணி**

சென்னை அய்.அய்.டி.யில் மாணவர் சேர்க்கையிலும் சரி, ஆசிரியர் சேர்க்கையிலும் சரி, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டைப் புறக்கணித்து, அரசியலமைப்புச் சட்டத்தை மீறியவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்ற கேள்வியை மிகவும் வெளிப்படையாகவே முன்வைக்கிறார் டாக்டர் வசந்தா கந்தசாமி. அய்.அய்.டி.யில் கணிதத் துறைப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர், கடந்த பத்து ஆண்டுகளாக இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தக் கோரி தனி நபராகப் போராடி வருகிறார்.

ஆண்டுதோறும் 200 கோடி ரூபாயை மத்திய அரசு, மக்களின் வரிப் பணத்திலிருந்து மானியமாக வழங்குகிறது. கல்விக்கென்று ஒதுக்கப்படும் மொத்த நிதியில், 50 சதவிகிதம் அய்.அய்.டி.களுக்கே போய் சேர்கின்றது. இந்நிலையில், அவை கூடுதல் சமூகப் பொறுப்புடன் இயங்க வேண்டிய கட்டாயம் அதிகமாகிறது. ஒவ்வொரு ஆண்டும் மூவாயிரத்திற்கும் உட்பட்ட மாணவர்களை JEE என்றும் போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்து, உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்வியை கற்றுக் கொடுத்து (?) அவர்களை, வெளிநாடுகளில் வேலைக்கு அனுப்பி வைக்கும் சிறந்த ஏற்றுமதி நிறுவனமாக அய்.அய்.டி. இயங்கி வருகிறது.

இந்திய மாணவர்கள் தரமான தொழில்நுட்ப அறிவைப் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் 1959இல் மும்பை, டெல்லி, கான்பூர், கரக்பூர், சென்னை ஆகிய அய்ந்து இடங்களில் அய்.அய்.டி.கள் நிறுவப்பட்டன.



டாக்டர் வசந்தா கந்தசாமி

**டாக்டர் வசந்தா கந்தசாமியின் நுனிநாக்கு ஆங்கிலத்தையும், நிறத்தையும் கண்டு இவர் பார்ப்பனராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து 1988இல் பணியிலமர்த்தப்பட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்துதான் அவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை கண்டு கொண்டது நிர்வாகம்.**

**அய்.அய்.டி.யில் நடைபெறும் பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவது கண்டும் - நிர்வாகத்தை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்.**

பெருமைமிக்க இந்த நிறுவனத்தில் சேர்வதற்கு மதிப்பெண் பற்றியோ, பொருளாதாரம் பற்றியோ கவலைப் படத் தேவையில்லை.

ஆனால், அய்.அய்.டி.யில் சேர்ந்து படிக்க விரும்புபவர்கள், பார்ப்பனர் என்றழைக்கப்படும் - உயர்சாதி வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டியது மட்டும் அவசியம். நாற்பதாண்டு கால வரலாற்றில் அய்.அய்.டி.யில் ஒரு தலித் மாணவர் கூட, டாக்டர் பட்டம் பெற்றதில்லை என்பது மேற்சொன்ன கருத்தை உறுதிப்படுத்துவதாகவே அமைகிறது.

நானூற்று இருபத்தேழு பேராசிரியர்கள் பணிபுரியும் இந்த மத்திய அரசு நிறுவனத்தில் - தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேரும், பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 20 பேரும்தான் விதிவிலக்கு. மீதமுள்ள பணியிடங்கள் அனைத்தையும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்துள்ளனர். சிறுபான்மையினர், அய்.அய்.டி. பற்றி கனவுகூட காண முடியாத நிலை.

மாணவர் சேர்க்கைக்கென்று அய்.அய்.டி. நிறுவனம் கொடுக்குப் விளம்பரங்களிலும் சரி, விண்ணப்பட் படிவங்களிலும் சரி, இட ஒதுக்கீடு குறித்து எந்தத் தகவலும் கொடுப்ட தில்லை. தப்பித்தவறி நுழைவுத் தேர் வரை வந்துவிடும் தாழ்த்தப்பட் மாணவர்களுக்குக் கொடுக்கப்படு வினாத்தாள்கள், பிற மாணவர்களி வினாத்தாள் நிறத்திலிருந்து வேறுப டிருக்கும். இவர், தாழ்த்தப்பட் இனத்தைச் சேர்ந்த மாணவர் என்பன குறிக்கும் அடையாளக் குறியாக இந் தனிநிற வினாத்தாள் முறை கையாள படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கொடுமை மட்டுமின்றி, அதிக மதிப்பெண்களோடு அய்.அய்.டி.க்குள் நுழையும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நுழைவுத் தேர்விற்கு முன்பே, 'சிறப்பு வகுப்புகள்' நடத்தப்படுகின்றன. இதற்கு அய்.அய்.டி. நிர்வாகத்தினர் சொல்லும் காரணம் - 'நாங்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களைத் தரப்படுத்துகிறோம்' என்பதுதான். பிற மாணவர்களிடமிருந்து தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எந்த விதத்தில் தரம் தாழ்ந்திருக்கின்றனர் என்பதைச் சொல்ல அய்.அய்.டி நிர்வாகத்தினரால் முடியுமா என்று தெரியவில்லை.

டாக்டர் வசந்தா கந்தசாமியின் நுனிநாக்கு ஆங்கிலத்தையும், நிறத்தையும் கண்டு இவர் பார்ப்பனராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து 1988இல் பணியிலமர்த்தப்பட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்துதான் அவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை கண்டு கொண்டது நிர்வாகம். அய்.அய்.டி.யில் நடைபெறும் பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவது கண்டும் - நிர்வாகத்தை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்.

விளைவு, உலகளவில் சிறந்த கணித மேதையாக அங்கீகரிக்கப்பட்ட, நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்த, பல மாணவர்களை வெவ்வேறு துறைகளில் ஆராய்ச்சிப்பட்டமும், டாக்டர் பட்டமும் பெற வழிவகுத்த இவருக்கு நிர்வாகம் சரியான அங்கீகாரத்தைக் கொடுக்காததோடு, பல தொல்லைகளையும் மிரட்டல்களையும் தந்தபடி இருக்கிறது.

அய்.அய்.டி.யில் இடஒதுக்கீடு மோசடி குறித்தும், வசந்தா கந்தசாமியின் போராட்டம் குறித்தும் சிறுபத்திரிகைகள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றன. தனக்கு மறுக்கப்பட்ட அங்கீகாரம் வேண்டி உயர்நீதிமன்றத்தில் வழக்கு மேல் வழக்கு தொடர்ந்திருக்கிறார் வசந்தா. எல்லா வழக்குகளும் நிலுவையில் இருக்கிறது.

தனியாகப் போராடிக் கொண்டிருந்தவருக்கு மிகத் தீவிரமாக கை கொடுத்தவர்கள், பெரியார் திராவிடர் கழகத்தினர். ஆர்ப்பாட்டம், கண்டன ஊர்வலம், கருத்தரங்கம், அய்.அய்.டி. மோசடி பற்றிய நூல் வெளியீடு என்று எவ்வளவோ செய்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பிரச்சனையை தற்பொழுது 'புதிய தமிழகம்', 'விடுதலைச் சிறுத்தைகள்', பாட்டாளி மக்கள் கட்சி போன்ற கட்சிகள் கையிலெடுத்து பல்வேறு கோரிக்கைகளையும் தீர்மானங்களையும் முன் வைத்தபடி இருக்கின்றன. மிக அவசரமாக இதை அரசின் கவனத்திற்கும், பொது மக்களின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயமிருப்பதற்கு முக்கிய காரணம் - மிக விரைவில் அய்.அய்.டி.யில் சுமார் 300 ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

**மிக அவசரமாக அய்.அய்.டி. பிரச்சனையை அரசின் கவனத்திற்கும், பொது மக்களின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயமிருப்பதற்கு முக்கிய காரணம் - மிக விரைவில் அய்.அய்.டி.யில் சுமார் 300 ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.**

பிரச்சனை பொதுமக்களின் கவனத்திற்கு வந்துவிட்ட இந்தச் சூழலிலும், இப்பணியிடங்கள் இட ஒதுக்கீடு இல்லாமல் பார்ப்பனர்களால் மட்டுமே நிரப்பப்படுமானால், அடுத்த 30 ஆண்டுகளுக்கு எவ்வளவு கூப்பாடு போட்டாலும் ஒரு மாற்றமும் நிகழப் போவதில்லை என்பதுதான். குடியரசுத் தலைவர் டாக்டர். கே.ஆர். நாராயணன் அவர்களால் மட்டுமே இதற்கு முடிவு கொண்டு வர இயலும் என்ற நிலையில், அவருக்குப் பல்வேறு கோரிக்கை மனுக்களை வசந்தா கந்தசாமியும், அவரின் ஆதரவாளர்களும் அனுப்பி இருக்கின்றனர்.

இட ஒதுக்கீடு என்பது சலுகை யல்ல; உரிமை என்பதைப் பலருக்கு நினைவுப்படுத்த வேண்டியிருக்கிறது. ஒரு ஜனநாயக சமூகத்தில், பொது மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் மத்திய அரசு நிறுவனத்தில் இந்த உரிமை மறுப்பு இருக்கிறதென்றால், யாரை சொல்லி என்ன பயன்? அரசுப் பணியிடங்களிலும் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு என்பது எவ்வளவு அவசியமென்பதை உணர்ந்தே அது உரிமையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவ்வகையில், ஒரு அரசு கல்வி நிறுவனமே இட ஒதுக்கீட்டைப் புறக்கணிப்பது, ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் சட்ட விரோத செயலாகும்.

காலங்காலமாய் இந்த சமூகத்திற்கு தெருப்பெருக்கி, முடி திருத்தி, பிணம் எரித்து... பழக்கிவிடப்பட்டவர்களின் சந்ததியினர், தொழில் நுட்பக் கல்வியெல்லாம் கற்று உயர் பதவிகளுக்கு வந்து என்ன சாதித்து விடப் போகிறார்கள் அல்லது ஏதாவது சாதித்துவிடப் போகிறார்கள் என்று அய்.அய்.டி.யின் பார்ப்பன நிர்வாகம் பயப்படுகிறது போலும்.

'முனுசாமியா? பரட்டையனா? விண்ணப்பத்தைத் தூக்கி மூலையில் போடு' என்று ஆணவத்துடன் ஆதிக்க கரங்களை அய்.அய்.டி. சுற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன நிர்வாகத்தினரின் அசட்டுத் துணிச்சலை - இத்தனை ஆண்டுகளாய் சும்மா விட்டு வைத்ததற்கும், இவ்வளவு காலம் தங்களுக்கு மறுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டு உரிமையை வாய் மூடி, கைகட்டி ஏற்றுக் கொண்டதற்கும் நாம் தலைகுனிந்தே ஆக வேண்டும்.

ஏமாறுபவர்கள் இருக்கின்ற வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்ற கருத்து, இந்தப் பிரச்சனைக்கு மிகச் சரியாகப் பொருந்துகிற சூழலில் - நாம் ஏமாளிகளாக இருந்திருக்கிறோம்; அதனால் அவர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள். நாற்பது காலமாகத் தொடர்ந்த அநியாயத்தைக் கடந்த பத்து ஆண்டுகளாகத் தனியாக எதிர்த்து வந்த வசந்தா கந்தசாமிக்கு, கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்துதான் ஆதரவுக் குரல்கள் எழும்பியுள்ளன. இனிமேலும் பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்து - களமிறங்காவிட்டால், இட ஒதுக்கீட்டு உரிமை என்பது, கனவாகவே இருக்கும் - எப்பொழுதும்போல். ●



படிப்பகம்

# பெண்களும் சமயப்பற்றும்



பெண்களின் அன்றாட அவலங்களுக்கு மருந்தாக அமையும் சமயமும், சமய நிறுவனங்களும்தான் அவர்களது அடிமை நிலையை, இரண்டாந்தர வாழ்க்கையை, அவ்வாழ்க்கையின் உள்ளார்ந்த அடக்குமுறைகளை நிர்ணயிக்கின்றன; தீர்மானிக்கின்றன. அவர்களை சிந்திக்க விடாமல் [illegible]க்கின்றன.

■ வ. கீதா

கடந்த மாதம் (ஆடி) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் தெருவோர அம்மன் கோயில்களில் ஆரவார திருவிழாக்கள் நடைபெற்றன. பால் குடம் தூக்குதல், தீ மிதித்தல் போன்ற சடங்குகள் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. சில கோயில்களில் குடம் குடமாக பால் வார்க்கப்பட்டது. சிலவற்றில் கஞ்சி படைக்கப்பட்டது . அம்மனின் அருளுக்கு பக்தர்கள் தெரிவிக்கும் நன்றியின் வெளிப்பாடுகளாக இவை அமைந்தன.

இச்சடங்குகளில் நூற்றுக்கணக்கான பெண்கள் பங்கேற்றனர் - பட்டுடை அணிந்து, தலைநிறைய பூச்சூடி, பக்தி சிரத்தையை குங்குமமாக நெற்றியில் அப்பிக்கொண்டு, சென்னையின் வறண்ட மரமிழந்த வீதிகளில் நடுப்பகலில் அவர்கள் பால் குடங்கள் சுமந்து வரும் காட்சி, மனதை கலக்குவதாக இருந்தது. இளம் பெண்கள் தீ மிதிக்க நீயா, நானா என்று முண்டியடித்துக் கொண்டு முன் வந்தது - இதைவிடவும் நெஞ்சை நெருடுவதாக இருந்தது.

இத்தகைய உணர்வுகள் ஏற்படக் காரணம், இப்பெண்களின் சமுதாயப் பின்னணிதான். நாள்தோறும் கடுமையாக உழைக்கும் வகுப்புகளை சேர்ந்த இவர்களை, குறிப்பிட்டுச் சொல்வதென்றால் - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள். இவ்வகுப்புகளைச் சேர்ந்த ஆண்களில் ஒருசாரார் கல்வி கற்று, நல்ல வேலைகளில் உள்ளனர் - வகுப்புரிமையின் தேவையையும், நியாயத்தையும் நிலை நிறுத்துகின்றவர்களாய்.

ஆனால், இவ்வகுப்புகளைச் சேர்ந்த பெண்கள் வகுப்புரிமையினால் எந்தளவுக்கு முன்னேறியுள்ளனர், கல்வியறிவும் பொருளாதார சுதந்திரமும் பெற்றுள்ளனர் என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்கள் மட்டும் தமது வாழ்நிலைமைகளின் காரணமாகவும், வரலாற்று ரீதியாக அவர்களுக்கு வாய்த்துள்ள துணிச்சலினாலும் தங்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர்.

பிற பார்ப்பனரல்லாத வகுப்புப் பெண்களோ மேற்கூறிய சமய சடங்குகளுக்கு ஆட்பட்டும், கல்வியில் பின்தங்கியவர்களாக, பெண்ணுரிமை இயக்கங்களில் முழுமையாகப் பங்கேற்க இயலாதவராகவும் உள்ளனர். குறிப்பிட்ட இன, வகுப்பு சார் அரசியல் மேடைகளில் இப்பெண்கள் தோன்றுவதும், பேசுவதும் ஒரு புறம் நடந்து வருகின்ற போதிலும், உரிமை அரசியலில் அவர்களுடைய பங்கேற்பு என்பது வரம்பிடப்பட்டதாகவே இருக்கிறது.

சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் சாதி எதிர்ப்பு இயக்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. அவற்றின் தாக்கத்தை, குறிப்பாக பெண்களின் சிந்தனை, உளவியல் ஆகியன மீது அவை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை மதிப்பிடுகையில், ஒரு உண்மை புலப்படுகிறது: பார்ப்பன எதிர்ப்பு அரசியலும், சமூகநீதிக்கானப் போராட்டங்களும் பார்ப்பனரல்லாத வகுப்புகளைச் சேர்ந்த ஆண்களுக்கு ஆதர்சமாக விளங்கியுள்ளன. பகுத்தறிவு சிந்தனையை அவ்வகுப்பு ஆண்கள் வளர்த்துக் கொள்ளவும், அவர்களது உலகப் பார்வையும் புரிதலும் விரிவடையவும், விடுதலை, சம நீதி ஆகியவற்றின் தேவையை உணர்த்தவும் அந்த அரசியலும் போராட்டங்களும் காரணமாக இருந்துள்ளன.

ஆனால், பெரியார் காலத்துக்குப் பிறகு, பார்ப்பனரல்லாத வகுப்புகளைச் சேர்ந்த பெண்களின் விடுதலை, அடையாளம், உரிமைகள் ஆகியனவற்றை கருத்தில் கொண்டு செயல்படும் சாதி எதிர்ப்பு / பார்ப்பனர் எதிர்ப்பு அரசியல் பெரியளவுக்கு வளரவில்லை. (பெரியார் காலத்திலேயே அவர் உட்பட சில ஆண்கள் மட்டுமே பெண்ணுரிமையையும் விடுதலையையும் உணர்வுபூர்வமாகவும் சிந்தனைப்பூர்வமாகவும் ஆதரித்தனர்)

மேலும், பார்ப்பனரல்லாத வகுப்புப் பெண்களின் வாழ்க்கைக்



படிப்பகம்

www.padippakam.com

குத் தொடர்ந்து ஆதாரமாக இருந்து வருவது மஞ்சள் - குங்குமம் - தாலி கருத்தியலும், சடங்கு சம்பிரதாயங்களை உள்ளடக்கிய தெய்வ வழிபாடும்தான். திராவிட, சுய மரியாதை அடையாளங்களைக் காட்டிலும் தாய், மனைவி கற்புக்கரசி என்பன போன்றவையே பெண்களுக்கு உகந்தவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

பார்ப்பனப் பெண்களும் பிற 'உயர்' சாதிப் பெண்களும் சமயக் கருத்தியலுக்கு ஆட்பட்டு இந்துத்துவ அரசியலுக்கு ஆதரவு காட்டி வருவதைப் பல இடங்களில் காண்கிறோம். அயோத்தி செல்லவும், பிள்ளையார் ஊர்வலத்தில் நடந்து செல்லவும், விளக்கு பூசைகளை செய்யவும், 'பாரத மாதா'வின் பெருமையையும் கண்ணியத்தையும் 'பாதுகாக்க'வும் இப்பெண்கள் முன்வந்துள்ளனர். சாதி, சமய அடையாளங்கள், 'பெண்மை' குறித்து காலங்காலமாக சொல்லப்பட்டு வந்துள்ள கருத்துகள் ஆகியவற்றைப் பேணுபவராகவும், 'பெண்ணுரிமை' என்பதை இந்துத்துவ அரசியலினூடாக விளக்குபவராகவும் இப்பெண்கள் உள்ளனர்.

பார்ப்பனரல்லாத வகுப்புப் பெண்கள் இவர்களைப் போன்றவர் அல்லர். 'இந்து' அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள அரசியலில் இவர்கள் இன்னமும் பெரிய அளவுக்கு அக்கறை காட்டவில்லை. ஆனால், 'இந்து' சமயத்தில் இவர்கள் பற்றுடையவர்கள்; அச்சமயத்தின் சடங்குகளையும் ஆதாரங்களையும் பின்பற்றுபவர்கள். தமது இருத்தலை, 'பெண்மை' யுணர்வை இச்சமய ஆசாரங்களுடன் அடையாளப்படுத்துபவர்கள். நல்ல கணவனைப் பெற, மலட்டுத்தனத்தைக் கழிக்க, ஆண் பிள்ளையை ஈன்றெடுக்க, கணவனின் கவனிப்பைத் தக்கவைத்துக்கொள்ள - கோயில்களையும், சாமியார்களையும் நாடிச் செல்பவர்கள்.

இப்பெண்களின் மனத்தை ஆட்கொள்ள, கவனத்தை ஈர்க்க தொடர்பு சாதனங்களும், சந்தைப் பொருளாதாரமும் வரிந்து கட்டிக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. தாலி - மஞ்சள்- குங்குமம் கருத்தியலை தெய்வபக்தியுடன் தொடர்புப்படுத்தியும் பெண்ணுக்குரிய அங்கலட்சணங்களுடன் பொருத்திக் காட்டியும் இவை செயல்படுகின்றன. சமயப் பற்று என்பது, இப்பெண்களைப் பொறுத்தவரை ஒரு 'பேஷனாகி' விட்டது என்றுகூட சொல்லலாம்.



இந்து மதத்தில் மட்டுமல்லாது, பிற மதங்களிலும் பெண்களின் ஆன்மீக உணர்வுகளை ஈர்க்கும் போக்குகள் பல தோன்றியுள்ளன. சுவிசேஷ கூட்டங்கள் முதல் அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள்வரை, மந்திரிக்கும் மௌல்வி முதல் - இஸ்லாத்தின் பெருமையை நெஞ்சிரைக்கப் பேசும் ஜமாத்து இளைஞர்கள் வரை, பலரும் பல போக்குகளும் பெண்களை சமயஜீவிகளாக அடையாளப்படுத்துகின்றன.

இவைபோக, கடந்து 15-20 ஆண்டுகளாக தமிழகத்தில் பேரலையாக அடி எழுப்பி செயல்பட்டு வரும் வழிபாடு வித்தைகளும் பெண்களின் வாழ்க்கையை பாதிக்கின்றன. அய்யப்பன் சாமிக்கு விரதம் இருந்தது ஒரு காலம். இப்போது அதே போன்ற விரதங்களை பழனியாண்டவரின் பக்தர்களும், ஆரோக்கிய மாதா கோயிலுக்குப் போக நோன்பிருப்பவர்களும், நாகூருக்கு செல்லத் திட்டமிட்டுள்ளவர்களும் கடைப்பிடித்து வருகின்றனர். விசேஷ உணவு உட்கொள்வதும், பூசை செய்வதும், ஆச்சாரம் பார்ப்பதும், தீட்டை விலக்குவதுமாக பல செயல்பாடுகள் எல்லாவித வழிபாடுகளிலும் தோன்றியுள்ளன. இதனால் பெண்களுக்கு வீட்டில் வேலைச் சுமை கூடுவதுடன், அவர்களது உணர்வானது மென்மேலும் சமயக் கருத்தியலுக்கு ஆட்பட்டுப் போகிறது.

பெண்களின் வாழ்க்கையைப் பொறுத்தவரை, மதம் என்பது ஒரு அபின். நாள்தோறும் சகித்துக் கொள்ள வேண்டிய வசவுகளையும், பொறுப்புகளையும், சுமைகளையும் இவர்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், இவர்களுடைய பொறுமைக்கும் சகிப்புணர்வுக்கும் பெருமைத்தரக் கூடிய அனுபவதளம் ஒன்று தேவையாகிறது.

மதச்சடங்குகளும் விழாக்களும் இத்தகைய தளத்தை அமைத்துக் கொடுக்கின்றன. இதயமற்ற அன்றாட உலகில், கருணை பொங்கும் அனுபவங்களாக சமயஉணர்வும், பற்றும் துவங்குகின்றன. பெண்களின் ஆன்மீகத்துக்குரிய வடிகால்களாக சடங்குகள் அமைகின்றன. அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ளும் அனுபவங்களாக, 'பெண்மை'யை பெருமைப்படுத்துபவையாக அவை தம்மை இனங்காட்டிக் கொள்கின்றன.

கணவன், குடும்பம், உறவுகள் என்னும் வலைப்பின்னலில் பின்னிப்பிணைந்து விளங்கும் பெண்களின் வரம்பிடப்பட்ட வாழ்க்கைக்கு மதம் புதிய பொருள் வழங்குகிறது. நாள்தோறும் பாடுபட்டாலும், பால்குடம் சுமந்து செல்கையில், தீ மிதிக்கையில், கஞ்சி படைக்கையில், பக்தி பரவசம் கூட, பெண்கள் தமது அன்றாட வாழ்விலிருந்து ஒரு சில மணிநேரம் விடுபட்டு வேறொரு உலகத்தில் சஞ்சரிக்கின்றனர்.

ஆனால், பெண்களின் அன்றாட அவலங்களுக்கு மருந்தாக அமையும்



படிப்பகம்

www.padippakam.com

சமயமும், சமய நிறுவனங்களும் தான் அவர்களது அடிமை நிலையை, இரண்டாந்தர வாழ்க்கையை, அவ் வாழ்க்கையின் உள்ளார்ந்த அடக்கு முறைகளை நிர்ணயிக்கின்றன; தீர்மா னிக்கின்றன. அவர்களை சிந்திக்க விடாமல் அவை தடுக்கின்றன. கல்விப்பற்று வளரவிடாமல் பார்த்துக் கொள்கின்றன.

சாதியின் பிடியில் அவர்களை மேலும் இறுக்கமாகப் பிணைத்து வைக்கின்றன. இவை எல்லாவற்றுக் கும்மேல் பெண்களை ஆண்களுக்கு சேவைபுரிய வேண்டியவராக வர்ணிக்கின்றன. சமயங்களின் சமூக செயல்பாட்டையும், அதிகார நிலை களுடன் அவற்றுக்குள்ள அந்நி யோன்யமான உறவுகளையும் பெண்களுக்கு உணர்த்துவோரும் இல்லை, அத்தகைய உணர்தல் தமக்கு தேவை என்று பெண்கள் கருதுவது மில்லை.

**நாள்தோறும் கடுமையாக உழைக்கும் வகுப்புகளை சேர்ந்த ஆண்களில் ஒருசாரார் கல்வி கற்று, நல்ல வேலை களில் உள்ளனர் - வகுப்புரிமை யின் தேவையையும், நியாயத் தையும் நிலை நிறுத்துகின்றவர் களாய். ஆனால், இவ்வகுப்பு களைச் சேர்ந்த பெண்கள் - வகுப்புரிமையினால் எந்தளவுக்கு முன்னேறியுள்ளனர், கல்வியறி வும் பொருளாதார சுதந்திரமும் பெற்றுள்ளனர் என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.**

இருப்பினும், எல்லா பெண் களும் இப்படித்தான் என்று சொல்லி விடமுடியாது. விதிவிலக்குகள் உண்டு. ஒரு காலகட்டத்தில் இத்த கைய விதிவிலக்குகள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தன. பெரியா ரின் சுயமரியாதை இயக்கத்தின் உறுப்பினர்களாக, செயல்பாட்டார் களா அவர்கள் இருந்தனர். பெண்ணு ரிமை, சமதருமம், சுயமரியாதை ஆகியவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தியதோடு, இப்பெண்க ளில் பலர் - பெண்களின் அறிவு வளர்ச்சி குறித்தும், அதன் பயன்கள் பற்றியும் பேசியும் எழுதியும் வந்தனர்.

மதங்களை விமர்சிக்கவும் இப் பெண்கள் தயங்கவில்லை. இந்து மதம் மட்டுமின்றி, கிருத்துவமும் இஸ்லாமும்கூட சுயமரியாதை ஏடு களில் விமர்சனத்துக்கு ஆளாயின. இஸ்லாத்தைப் பற்றி எழுதியவர்க ளில் பலர் ஆண்களாக இருந்தபோதி லும் அவர்கள் செய்த சமய விமர்சன மானது, பெண்ணுரிமையையும் விடு தலையையும் முன்னிட்டுத் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறித்துவ மதத்தை, குறிப்பாக அம்மதத்தில் பாதிரியார்கள் வகித்து வந்த அதிகார நிலையை, சுயமரியாதை ஆண்களும் பெண்களும் கடுமையாக விமர்சித்தனர். நீலாவதி அம்மையார் இது குறித்து தொடர்ந்து எழுதி வந்தார். ஆனால், சுயமரியாதைப் பெண்களின் கோபத்துக்கும் ஆராய்ச் சிக்கும் தொடர்ந்து இலக்காக அமைந்தது இந்து மதம்தான். இந்து மதத்தைப் பற்றிய விமர்சனங்கள் பலதரப்பட்டவையாக இருந்தன. சமயச்சடங்குகளுக்கு ஆதாரமாக விளங்கும் மூட நம்பிக்கைகளையும், அறிவின்மையையும் சிலர் தாக்கி எழுதினர், பேசினர். 25,26.11.33 தேதி களில் ஈரோட்டில் நடைபெற்ற கோவை ஜில்லா (சுயமரியாதை) பெண்கள் மாநாட்டில் தலைமை யுரை ஆற்றிய சி.டி. நாயகம் சிதம் பரம் அம்மாள், சாமி, கோயில், பண்டாரம், சாமியார் என்று கூறிக் கொண்டு அலைவதைக் காட்டிலும் தமது பிரச்சனைகளை நிதானமாக வும் பகுத்தறிவுடனும் பெண்கள் ஆராய வேண்டியதன் தேவையை வலியுறுத்தியுள்ளார்.

பெண்கள் தமது அறிவைப் பயன் படுத்தி சமய சம்பிரதாயங்களை மதிப்பிடுவாராயின், அவை எவ்வாறு பெண்ணடிமைத்தனத்துக்கு ஆதாரமாக விளங்குகின்றன என்பதைப் புரிந்து கொள்வர் என்று அதே ஈரோடு மாநாட்டில் பேசிய சிவானந்தம் வள்ளியம்மாள் சுட்டிக்காட்டினார்:

''பெண்களாகிய நாம் இன்று மத சம்பிரதாயப்படிக்கும், இந்து சமு தாய வாழ்க்கை சம்பிரதாயப்படிக் கும் அரசியல் முறைப்படிக்கும் அடிமைகளாகவே ஆண்களால் கருதப்பட்டு வருகிறோம்... மதங்க ளினாலும் வேதங்களினாலும் சாஸ்தி ரங்களினாலும் இவைகளை அனு சரித்த அரசாங்க முறைகளினாலும் போடப்பட்டிருக்கும் வேலி என்னும் வளையத்துக்குள் இருந்து கொண்டு 'எக்காரணத்தை முன்னிட்டும் அந்த வேலியை தாண்டக் கூடாது' என்கின்ற நிபந்தனைக்கு உட் பட்டுதான் - விடுதலையோ, சுதந் திரமோ, மனிதத்தன்மையோ, சுயமரியாதையோ கேட்க வேண்டிய வர்களாகி இருக்கிறோம்... ஒரு கட் டுப்பாட்டுக்கும் ஒரு வளையத்துக் கும் உட்பட்டுதான் சுதந்திரம் அடை யலாம் என்பதும் விடுதலை பெறலாம் என்பதும் பெண் சமுதா யத்தை ஏமாற்றுகின்ற காரியமே...'' (26.11.33, 'புரட்சி')

மதங்களை ஏமாற்று வித்தை களின் களமாக அடையாளப்படுத்திய இந்த அம்மையார், மதங்களின் வரை யறைகளை மீற வேண்டியதன் தேவையை, அத்தகைய மீறலின் நியா யத்தை வலியுறுத்திப் பேசினார்: ''கட்டுப்பாடுகளை உடைத்தெறியா மல் சுதந்திரமில்லை, சமத்துவமில்லை. எப்படியெனில் ஜெயில் திறக்கப்ப டாமல் கைதி விடுதலை அடைய முடியுமா?'' (26.11.33, 'புரட்சி').

ஈரோடு மாநாட்டில் மட்டுமல்ல, 1930களிலும் 40களிலும் நடைபெற்ற மாநாடுகளில் பெண்களின் அறிவு வளர்ச்சி குறித்துப் பலர் பேசினர். குறிப்பாக, அவ்வளர்ச்சியை கட்டுப் படுத்துவதிலும் மதங்கள் ஆற்றும் பங்கைப் பற்றிப் பேசினர். இந்த சிந் தனை மரபு இருந்த இடம் தெரியா மல் போய்விட்டது. மதங்களை பகிரங்கமாக விமர்சிக்க கம்யூனிஸ் டுகள் கூட முன்வருவதில்லை. திராவிடர் கழகத்தின் வழக்கமான விமர்சனங்கள் பொது அறிவில் இடம் பெறாமலேயே, குறிதப்பி வெற்று வார்த்தைகளாக எஞ்சி நிற்கின்றன. **மறைக்கப்பட்ட அம்மரபை இனி மீட்டெடுக்க முடியுமா?** ●

புகைப்படங்கள் : ஜெயராண



படிப்பகம்

www.padippakam.com

நூல் : நெரிந்து...
ஆசிரியர் : ம. மதிவண்ணன்
வெளியீடு : வேறுவேறு
111ஆ, காந்தி நகர்,
ஆத்தூர் - 636 102
பக்கம் : 48
விலை : ரூ. 20

# அ றி மு க ம்



தனது அத்தியாவசியங்களாலான
மூட்டையைக் கவனமாய் இடுக்கிக்கொண்டு
தகிக்கும் வெயிலை உணராதவனாய்
நீளமான அந்தக் கடைவீதியைச்
சளைக்காமல் பெருக்கிக் கொண்டிருக்கிறான்.

கற்கவசம் கட்டிய மனித முகங்களுக்கிடையில்
காற்றின் திசையிலும் பெருக்கத் தெரியாமல்
மல்லுக்கட்டிக் கொண்டேயிருக்கிறான்
கடைவீதி வேறு இன்னும் நீளமாயிருக்கிறது.

அண்ணல் அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவை யொட்டி இந்திய அளவில் எழுத்துத் துறையில் ஒரு பேரெழுச்சி ஏற்பட்டது. அது, தலித் இலக்கியம். இன்று எழுதப்படுகின்ற எல்லாமுமே ஒருவகையில் பிற்காலத்தில் சமூக ஆவணங்களாய் ஆகக்கூடியவை. அப்படி நம்மிடம் இப்போது இருக்கின்ற தமிழ் இலக்கியப் படிவங்களில் தலித் மக்களைப் பற்றியும், அவர்கள் அப்போது அனுபவித்த கொடுமைகள் குறித்தும் மிகச் சொற்பமான வையே பதிவாகியுள்ளன.

ஆனால், இப்போது நிலைமை அப்படி இல்லை. பரவலான எழுத்துத்தளம் தலித் இலக்கியத்துக்கு இருக்கிறது. கருத்தியல் தளத்தில் முன்வைக்கப்படும் அறிவுசார்ந்த விஷயங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கலை, இலக்கியம் சார்ந்த தலித் அனுபவப் பதிவுகளும். யாரெல்லாம் நான் ஒரு தலித் எழுத்தாளன் என்று சொல்லிக் கொண்டு எழுதப் புறப்பட்டார்களோ, அவர்களெல்லாம் பின்வாங்கி குழம்பி நிற்கும் இன்றைய சூழலில், சில அதிர்ச்சிப் பிரகடனங்களுடன் தனது கவிதைகளை நூலாக்கித் தந்திருக்கிறார் மதிவண்ணன்.

மதிவண்ணனின் 'நெரிந்து' நூலில் இருக்கும் எல்லா கவிதைகளுமே வெளிப்படையானவை. ஒரு தலித்தின் புற வாழ்வில் இருக்கும் அவலங்கள், அசிங்கங்கள், அகவாழ்வில் உள்ள மனப் போராட்டம், அவன் கொண்டிருக்கும் விழுமியங்கள் எல்லாமே அப்படி அப்படியே பதிவாகியிருக்கின்றன.

இக்கவிதை நூல் வெளியீட்டு விழாவில், பேராசிரியர் மார்க்ஸ் குறிப்பிட்ட இரு செய்திகள் இக்கவிதைகளைப் புரிந்து கொள்ள உதவும். ஒன்று மதிவண்ணன் கவிதைகளில் 'நான்' தன்னை அழித்துக்கொள்வது, பரிதாபத்துக்குரி வாழ்க்கைப் போராட்டங்களோடு தலித் வாழ்க்கையை சர கழிக்கும் ஒருவனுக்கு - மலையை, அருவியை, பழம் மையைப் பேசி மகிழ முடியவில்லை; முடியாது. தலித் வன், தனக்கு துரோகமிழைத்து ஒதுக்கிவைத்திருக்கும் ண்ணோடு எவ்விதத்திலும் ஒட்டுதல் கொள்ள முடியா வன். எனவே, அவன் ஒரு அகதி மனநிலையோடு கூடிய டையாளத்தை (நான்) கொண்டவன். இந்த இரு அம்சங் ட்பமாய் மதிவண்ணனின் இந்நூலில் காணமுடிகிறது.

மதிவண்ணன் கவிதைகளில் இச்சமூகம் 'நாகரீகம்' கருதி ஒதுக்கியுள்ள சொற்கள், எவ்விதத் தயக்கமுமின்றி விரவியிருக்கின்றன. அதை நாம் இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. தலித்தின் அனுபவங்களை சமூகம் அசிங்கமானதாகக் கருதுகிற - அநாகரீக சூழலிலிருந்து அப்படியே எடுத்துப் பதிவு செய்யவேண்டியிருக்கிறது.

''மழைக்காலங்களில் எங்களுக்கு மிகவும் சிரமம். மலத்தோடு தண்ணீர் கலந்துவிடும். அதைக் கைகளால் அள்ளி, கூடைகளில் நிரப்பி தலையில் சுமந்து செல்லுகிறபோது, மலம் எங்கள் முகங்களிலும், சேலை சட்டைகளிலும் வழியும். நான் வீட்டிற்குத் திரும்பினால் என்னால் சாப்பிட முடியாது; துர் நாற்றம் என்னுடைய தலை முடியையும், துணிகளையும் விட்டு அகலாது. கோடைக் காலங்களில் நிலைமை இன்னும் மோசம். உண்பதற்கு, கை கழுவ தண்ணீர் கிடைக்காது. எனவே, மழைக் காலம் மோசமானதா? கோடைக்காலம் மோசமானதா? என்று பிரித்துச் சொல்வது கடினம்.'' - குஜராத்தில், மலம் அள்ளும் பெண் ஒரு பேட்டியில் கூறியது இது. முகம் சுளிப்பவர்கள் யோசிக்கலாம்.

தன்னுடைய தலித் சார்ந்த அனுபவங்களையும், தலித் ஆணுக்கும் வேறு பெண்ணுக்கும் ஏற்படும் காதல் உளவியல் சிக்கல்களையும், தலித் கலையையும், பண்பாட்டுச் சிக்கல்களையும் இவரின் பெரும்பாலான கவிதைகள் பேசுகின்றன. சில கவிதைகள், தலித் விரோத மனோபாவம் அப்பிய எழுத்தாளர்களை கேள்விகேட்டு தொல்லை தரும்படி இருக்கின்றன. சற்றே ஓய்ந்திருப்பது போலுள்ள தலித் இலக்கியச் செயல்பாடுகளை, மதிவண்ணனின் கவிதைகள் - விவாதப் பொருளாக்கும்போது, நிச்சயம் தீவிரப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

- சி. அரவிந்தன்



படிப்பகம்

www.padippakam.com



# உடையும் சித்திரங்கள்

❑ சுப. வீரபாண்டியன்

என் மகன் சிறுவனாய் இருந்தபோது என்னிடம்
கேட்பான் - "அப்பா, அடிக்கடி நீங்க வெளி
யூரு போறீங்களே, நீங்க இல்லாதபோது, ராத்
திரியில முகமூடிக் கொள்ளைக்காரங்க வந்
திட்டா, நாங்க என்னப்பா செய்ய முடியும்?"

அவனுக்குத் தெரியாது. நான் ஊரில் இருக்
கும் நாட்களில் அவர்கள் வந்தால், என்னாலும்
ஒன்றும் செய்ய முடியாது என்னும் உண்மை.

அந்த வயதில் அவனுக்கு நான்தான் கதா
நாயகன். வளர வளர அந்தப் பொய்ச் சித்திரம்
அவனுக்குள் உடைந்து போயிருக்கும். அப்பா
வும் நம்மைப் போல ஒரு சாதாரண மனிதர்தான்
- ஒரே நேரத்தில் பத்துப் பேரை அடித்துத்
துவைக்கும் வல்லமையெல்லாம் எவருக்கும்

அவன் விடை சொல்ல மா
வாகச் சிரித்துக் கொள்வான். அ
டால், "விடுங்க மாமா, அவங்க
சண்டை வராது" என்பான். வரக்கூடா
அவன் விருப்பம்.

அவன் நெஞ்சுக்குள் இரண்டு கதாந
கள். இருவரில் எவர் தோற்றாலும் அவ
தாங்கிக் கொள்ள முடியாது.

இவையெல்லாம் உலக இயற்கை. எந்தக்
குழந்தைக்கும் ஒரு கதாநாயகன் தேவைப்படு
கிறான். உண்மையான கதாநாயகர்களை நாம்
காட்டத் தவறும்போது, திரைப்படக் கதாநாயகர்
களை அவர்கள் பற்றிக் கொள்கின்றனர்.

ஒரு காலத்தில் தியாகராய பாகவதர்,

> "திருடாதே, அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதே, அசுத்தமானவர்களோடு சேராதே, துஷ்டனைக் கண்டால் தூர விலகு" என்பன போன்று சொல்லிக் கொடுக்கப்பட்ட பல அறிவுரைகளும் போலிச் சித்திரங்களாய் உதிர்ந்து கொண்டிருக் கின்றன. இவை அனைத்தும் வசதியான சாதியிலும் வசதியான வர்க்கத்திலும் உள்ளவர்கள் திணித்துக் கொண்டிருக்கும் அறிவுரைகள் என்று புலனாகின்றன.

இருக்க முடியாது என்னும் உண்மைகள் புலனா
கியிருக்கும்.

என் நண்பரின் பிள்ளை ஒருவன். பத்து
வயது. நடிகர் ரஜினியின் தீவிர ரசிகன். அவனி
டம், 'ரஜினிக்கும், கமலுக்கும் சண்டை வந்தா,
யாரு ஜெயிப்பா?' என்று கேட்பார்கள். அவன்
தயங்காமல் சொல்வான் - 'ரஜினிதான்'.
மீண்டும் அவனிடம் கேட்பார்கள், 'டி.வி.யில
சண்டை போடுறானே அந்தக் குண்டனுக்கும்,
ரஜினிக்கும் சண்டை வந்தா? உடனே அவன்
சொல்வான், "ப்பூ... ரஜினி, அந்தக் குண்ட
னைத் தூக்கிப் போட்டு மிதிச்சிடுவாரு."



ரஜினியைப் போலவே, அவன் அப்பா மீதும்
அவனுக்கு அளவு கடந்த பாசம் என்பது எனக்குத்
தெரியும். அதனால் நான் அவனிடம் வேண்டு
மென்றே கேட்பேன், "தம்பி, ரஜினிக்கும், உங்க
அப்பாவுக்கும் சண்டை வந்தா யாரு ஜெயிப்பாங்க?"

பி.யு.சின்னப்பா. பிறகு எம்.ஜி.ஆர்., சிவாஜி.
அப்புறம் ரஜினி, கமல். இப்போது விஜய்,
அஜித் - இப்படித் திரைப்படக் கதாநாயகர்
களின் ஆதிக்கம், இங்கு இளைஞர்களின் மீது
தொடர்ந்து கொண்டே உள்ளது.

அதிலும் பாருங்கள், ஒவ்வொரு கா
கட்டத்திலும் இரண்டிரண்டு கதாநாயகர்கள்
போட்டி இல்லாத வாழ்வில் சுவையே இல்லை
அதனால்தான் இரண்டிரண்டு பேர்.

நான் சிறுவனாக இருந்தபோதிலிருந்
நெடு நாட்கள் வரை, எம்.ஜி.ஆர்.தான் என் க
நாயகர். எம்.ஜி.ஆர். நடித்து வெளிவரும் தி
படங்களை, முதல் நாள் முதல் காட்சியில் ப
கா விட்டால், ஏதோ சொத்து சுகம் எல்லாம்
போன மாதிரிக் கவலையாய் இருக்கும்.

ஒரு முறை அவர் குண்டுமணியைத் தூ
போது கீழே விழுந்து கால் ஒடிந்து போய



படிப்பகம்

www.padippakam.com

தென்று செய்தி பரவியது. அப்போது அழத் தொடங்கினேன் நான். என் அப்பா என்னைச் சென்னைக்கு அழைத்து வந்து, எம்.ஜி.ஆரிடம் நேரில் அழைத்துப் போய் அவரைக் காட்டிய பிறகு தான் என் அழுகை ஓய்ந்தது. அப்போதே சிறுவனாய் இருந்த என்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். சொன்னார், "கட்ட பொம்மா, அழக் கூடாது; சாதாரண அடிதான். என் ரசிகனா இருந்துகிட்டு இப்படி அழலாமா?"

அழுகை நின்றுவிட்டது. 'எம்.ஜி. ஆர். ரசிகன்' அழக்கூடாதல்லவா... அதனால் அழுகை நின்றுவிட்டது.

திரைப்படத்தில் வரும் எம்.ஜி.ஆர். மாதிரியே இறுக்கமாய்ச் சட்டை போட்டு, அரைக்கையை மேலும் மடித்து விட்டு - கால் கையாக்கி, தலைமுடியைச் சுருட்டி வட்டமாய் முன்னால் கொண்டு வந்து, நெற்றியில் படும் மாதிரி அமைத்து... இப்படி என்னென்னவோ பாதிப்புகள். இப்போதும் கூட தலைமுடியை அப்படித்தான் வாரிக்கொண்டுள்ளேன். பாதிப்புகளிலிருந்து முற்றிலுமாய் மீள முடியவில்லை.

எம்.ஜி.ஆரால் சில நல்ல பாதிப்புகளும் எனக்குள் ஏற்பட்டன. அவர் எந்தப் படத்திலும் சிகரெட் புகைக்க மாட்டார், மது அருந்த மாட்டார், தாயை நேசிப்பார், தீமைகளை எதிர்த்துப் போர் புரிவார். அவர் உண்மை வாழ்வில் எப்படியிருந்தாரோ எனக்குத் தெரியாது. ஆனால், அவரது திரைவாழ்க்கைதான் எனக்கு 'வேதம்'.

இன்று வரை, புகைக்க வேண்டும் என்றோ, மது அருந்த வேண்டுமென்றோ எனக்குள் சிறு ஈர்ப்பு கூட இல்லாமல் போனதற்கு, என்னையும் அறியாமலே எம்.ஜி.ஆர். ஒரு காரணமாக இருக்கலாம். "பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளலாகாது, மோதி மிதிக்க வேண்டும், அவர் முகத்தில் உமிழ வேண்டும்" என்பன போன்ற எண்ணங்களும், எம்.ஜி.ஆர். படங்களின் பாதிப்பாக இருக்கலாம்.

எல்லாவற்றையும் மீறி, நானே வியப்படையும் வகையில், அந்த எம்.ஜி.ஆர். சித்திரம், காலப் போக்கில் எனக்குள் தகர்ந்து போனது.

என்ன காரணம் என்பதை இன்றும் என்னால் தெளிவாக விளக்க முடியவில்லை. ஆனாலும், ஒரு செய்தி பிடிபடுகின்றது.

சிறுவயதில், எனக்குள்ளும் இரண்டு கதாநாயகர்கள் இருந்தனர். ஒருவர், தன் அழகால், நடை, உடை, பாவனைகளால் என்னைக் கவர்ந்த எம்.ஜி.ஆர்.

இன்னொருவர் கிழவர். என் அப்பாவின் மூலம் அவர் எழுத்துகள் அறிமுகம். தொலைவாய் நின்று அவர் பேச்சைக் கேட்டிருக்கின்றேன். எங்கள் ஊரின் சுவர்களிலெல்லாம், கறுப்பு எழுத்துகளில் அவருடைய கருத்துகளைப் படித்திருக்கின்றேன்.

"எல்லாம் வல்லவன் இறைவன் என்றால், அவன் குடியிருக்கும் கோயிலுக்குச் சாவியும், பூட்டும் ஏன்?"

> **ஒரு காலத்தில் தியாகராய பாகவதர், பி.யு.சின்னப்பா. பிறகு எம்.ஜி.ஆர்., சிவாஜி. அப்புறம் ரஜினி, கமல். இப்போது விஜய், அஜித் - இப்படித் திரைப் படக் கதாநாயகர்களின் ஆதிக்கம், இங்கு இளைஞர்களின் மீது தொடர்ந்து கொண்டே உள்ளது.**

"அண்டாவிலிருந்தால் தண்ணீராம். அதையே கெண்டியில் கொடுத்தால் தீர்த்தமாம். என்னே பார்ப்பனர் புரட்டு!"

- இப்படி அவர் கருத்துகள், எழுத்துகளாய்ச் சுவரில் இருக்கும். இந்த நெருப்பும் என்னைப் 'பட்'டென்று பற்றிக் கொண்டது.

ஆம்! என் இரண்டாவது கதாநாயகர், தந்தை பெரியார். காலப்போக்கில், கதாநாயகர்கள் இடம் மாறினர். தந்தை பெரியார் முன்னுக்கு வர வர, எம்.ஜி.ஆர். பின்னுக்குப் போனார்.

1976இல் 'நெருக்கடிக் காலம்' அறிவிக்கப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஒடுக்குமுறைகள் தலைவிரித்தாடின.

அந்தக் கொடுமைகளை எல்லாம் எம்.ஜி.ஆர். எதிர்க்கவில்லை. மாறாக, ஆதரித்தார். தீமைகளை எதிர்க்காத என் கதாநாயகர் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

என் நெஞ்சில் ஆழப் பதிந்து கிடந்த எம்.ஜி.ஆர். என்னும் சித்திரம் உடைந்து நொறுங்கியது.

அதனால்தான், 1987ஆம் ஆண்டு இறுதியில், ஒரு நாள் காலை, தூக்கத்திலிருந்த என்னை எழுப்பி, என் மனைவி, "ஏங்க, எம்.ஜி.ஆர். செத்துட்டாராம்" என்று பதற்றத்தோடு கூறியபோது, அதை நான் ஒரு செய்தியாக மட்டுமே உள்வாங்கிக் கொண்டேன்.

ஒருவேளை, அறுபதுகளில் இந்தச் செய்தி வந்திருக்குமானால், நானே கூட இறந்து போயிருப்பேன். எண்பதுகளில் அது வெறும் செய்தி.

எம்.ஜி.ஆர். இறந்த அன்று, எங்கள் வீட்டின் வாசலில், பால் ஊற்றிக் கொண்டிருந்த ஒரு பாட்டி ஓவென்று அழுதார். "அந்த மகராசன் போயிட்டான். இனி எங்க கதியெல்லாம் என்ன ஆகுமோ?" என்று அரற்றினார்.

எம்.ஜி.ஆர். இருந்த காலத்திலும், அந்தப் பாட்டி பால் ஊற்றிக்கொண்டு தான் இருந்தார்; வறுமையில்தான் அந்த அம்மா வாடினார். ஆனாலும், எம்.ஜி.ஆர். என்ற சித்திரம் அந்த மூதாட்டியின் நெஞ்சில், ஒரு மூட நம்பிக்கையாய்ப் பதிந்து கிடந்தது. அந்தப் பாட்டியின் கடைசிக் காலம் வரையிலும் கூட அது கலையாமல் இருந்திருக்கலாம்.

ஆனால், எனக்குள் பல சித்திரங்கள் உடைந்து விட்டன. எம்.ஜி.ஆர். என்ற தனி மனிதர் மேல் கொண்ட அன்பு தகர்ந்தது சாதாரணம். ஆனால், சிறு வயதிலிருந்தே, "திருடாதே, அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதே, அசுத்த மானவர்களோடு சேராதே, துஷ்டனைக் கண்டால் தூர விலகு" என்பன போன்று சொல்லிக் கொடுக்கப்பட்ட பல அறிவுரைகளும் தன் நிலை தளர்ந்தன.

அவை போலிச் சித்திரங்களாய் உதிர்ந்து கொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் வசதியான சாதியிலும் வசதியான வர்க்கத்திலும் உள்ளவர்கள் திணித்துக் கொண்டிருக்கும் அறிவுரைகள் என்று புலனாகின்றன. உடைந்து சிதறிக் கொண்டிருக்கும் அந்தச் சித்திரங்களைப் பற்றியதுதான் இந்தத் தொடர்.

- தொடரும்



படிப்பகம்

# “கலை - சமூகத்துக்காகத்தான்”



**ஓவியர் புகழேந்தி,**

*போராட்டம் பற்றிய ஓவியங்களை வரையவில்லை; இவரது ஓவியங்களே போராடுகின்றன” என்று கவிஞர் காசி ஆனந்தன் பாராட்டியதைத் தவிர, புகழேந்தி பற்றி நாம் வேறொன்றும் சொல்லத் தேவையில்லை. அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் சென்று ஓவியக் கண்காட்சியை சிறப்புற நடத்தி விட்டு வந்த ஓவியர், ‘தலித் முரசு’க்கு அளித்த பேட்டி.*

நேர்காணல் : **புனிதன்**

❐ *உங்களுடைய ஓவியக் கண்காட்சியை மலேசியாவில் நடத்த வேண்டிய அவசியம் என்ன?*

■ தமிழகத்தில் என்னுடைய கண்காட்சி நடைபெற்றபோது பார்த்த தமிழ் ஆர்வலர்கள், நண்பர்கள் மற்றும் பல்வேறு இயக்கங்களில் இருக்கக்கூடிய தோழர்கள், ‘இக்கண்காட்சி இந்தியாவைக் கடந்து உலகிலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் போக வேண்டும்’ என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் மலேசியாவில் இருந்து வெளிவரும் ‘செம்பருத்தி’ என்ற இதழின் அழைப்பும், எழுத்தாளர் சை. பீர் முகமது அவர்களின் முன்னேற்பாடும் நான் அங்கு கண்காட்சி நடத்த மிகவும் துணைபுரிந்தது. இந்த அடிப்படையில் அமைந்ததுதான் வெளிநாட்டில் நடைபெற்ற என்னுடைய முதல் ஓவியக் கண்காட்சி.

❐ *இதற்கு அங்கு வரவேற்பு எப்படி இருந்தது?*

■ இக்கண்காட்சி மிகப்பெரிய வெற்றியை ஈட்டித் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, மலேசியாவில் இருந்து வெளிவரும் அனைத்து இதழ்களிலும் கண்காட்சி குறித்த விரிவான செய்தி விமர்சனங்களும், ஓவியங்களின் புகைப்படங்களும் வெளிவந்திருந்தன. இங்கு பல இன மக்கள் வாழக்கூடிய ஒரு சூழலில், இக்கண்காட்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றது என்பது ஒரு குறிப்பிடத்தகுந்த செய்தியாக நான் கருதுகிறேன். மொத்தத்தில் இக்கண்காட்சியை பதினைந்தாயிரம் பேர் பார்த்திருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

❐ *அங்குள்ள தமிழர்களின் நிலை எவ்வாறு இருக்கிறது?*

■ அங்குள்ள தமிழர்கள் பொதுவாக மேம்போக்கான பார்வை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இன்றைக்குப் பல இன மக்களோடு சேர்ந்து வாழ்கின்றபோது, நம்முடைய இன அடையாளங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், இழந்துபோன அடையாளங்களை மீட்டெடுப்பதற்கும் - நாம் பிற இன மக்களுடைய வளர்ச்சியைப் பார்த்து ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்காமல், நம்மையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

❐ *‘கலை கலைக்காகவே’ என்று சொல்லப் படுகிறது. உங்கள் பார்வை என்ன?*

■ கலை என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக, சமூக அவலங்களை வெளிப்படுத்துவதன் மூலம் - மக்களிடையே ஒரு விழிப்புணர்வையும் போராட்ட உணர்வையும் தூண்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒரு கவிதை, சிறுகதை, இலக்கியம் போன்றவை எப்படி சமூக மாற்றத்திற்காகப் பயன்படுகிறதோ - அதே போல ஓவியமும் இதைச் செய்ய முடியும் என்ற ஆழமான நம்பிக்கை எனக்குண்டு. எனவே, ‘கலை கலைக்காக’ என்பதை என்னால் ஏற்க இயலவில்லை. கலை சமூகத்திற்காகத்தான்.

❐ *தலித்கலை, இலக்கியம்என்றவகையில்தலித்ஓவியமும் பரிணாமம் பெற்று வருகிறது. இது குறித்த தங்களின் கருத்து?*

■ ஒரு போராட்ட உணர்வை அதை உணர்ந்தவன் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆனால், பிறப்பால் மட்டுமே தலித்தாக இருக்கிறவர்கள் தலித்திய சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார்களா? என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு தலித் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. இந்த ஓவியக் கண்காட்சியில் பிறப்பால் மட்டுமே தலித்தாக இருந்த பல ஓவியர்கள், தலித்தியக் கருத்துகளை வெளிப்படுத்தவில்லை. பிறப்பால் ஒரு தலித் வரையும் எல்லா ஓவியத்தையும் நான் தலித் ஓவியமாகக் கருதவில்லை; எனக்கு அதில் உடன்பாடில்லை. சுண்டூர் சென்றிருந்தேன். அங்கே பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துயர நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்துக் கொண்டு - அந்த உணர்வோடு வெளியே வந்தேன். வெளியில் வந்து இதுகுறித்து ஓவியம் வரைந்தேன். இது, மிகப்பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய மனதில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் என்னை செய்யத் தூண்டியது.

இந்தப் பிரச்சினைகளை ஒரு தலித்தாக இருந்து வெளிப்படுத்தும்போது - இன்னும் கூடுதல் வீச்சு இருக்கும் என்பதை நான் மறுக்கவே இல்லை. ஆனால், பிறப்பால் மட்டுமே தலித்தாக இருந்து கொண்டு சிந்தனை வேறு மாதிரி இருந்தால், அதை எப்படி தலித் ஓவியமாக ஒப்புக் கொள்ள முடியும்?



சுண்டூர் படுகொலை பற்றிய ஓவியம்

❐ *காவிரிப்பிரச்சினையை முன்வைத்து சாலையில் அமர்ந்து தாங்கள் ஓவியம் வரைந்ததாக முன்பு செய்தி வெளிவந்தது. அதைப்பற்றி சொல்லுங்கள்...*

■ 1991ஆம் ஆண்டு

www.padippakam.com



காவிரி பற்றிய இடைக்கால தீர்ப்பு வந்தது. அப்போது கர்நாடகத்தில் தமிழர்களை எதிர்த்து வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன. இதில் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். 'இந்தியா ஒரு தேசம்' என்று சொல்லப்படுகிற நேரத்தில், தமிழர்கள் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்து கொண்டிருந்த நிலையில், இங்கு பேசப்படுகின்ற தேசியத்திற்கு முரணான விஷயமாக நான் இதைப் பார்த்தேன்.

ஒரு கலைஞன் என்ற அடிப்படையில், தஞ்சை பெரிய கோயில் அருகில் நான்கு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமர்ந்து பல்வேறு ஓவியக் கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்து, இந்தப் பிரச்சினையை முன்வைத்து மிகப் பெரும் ஓவியம் ஒன்றை வரைந்தேன். 'வன்முறையை இயக்குதல்' என்று அதற்குப் பெயரிட்டிருந்தேன். நான் செய்ததிலேயே மிகப் பெரிய ஓவியம் இது.

❑ ***அதேபோல, சாதி மோதல்களைத் தடுப்பதிலும் கலைஞர்களுக்குப் பங்குள்ளதல்லவா?***

சாதி, மத இனக் கலவரங்களை எதிர்த்து நிறைய ஓவியம் செய்திருக்கிறேன். சாதிக்கு எதிராக நடக்கக்கூடிய அத்தனைப் போராட்டத்துக்கும் என்னுடைய குரல் - ஆந்திரா முதல் தமிழ் நாடு வரை ஓவிய வடிவில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது. தமிழகத்தில் சாதிக் கலவரங்களைப் பற்றிப் பேசும்போது, கீழ்வெண்மணியை ஒதுக்கிவிட்டு யாரும் பேசிவிட முடியாது. எனவே, இந்த நூற்றாண்டு ஓவியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பதிவாக கீழ் வெண்மணி சாதி வன்முறையை நான் பதிவு செய்திருக்கிறேன். அதேபோல, சுண்டூர் படுகொலை முதல் பத்மினி மீதான பாலியல் வன்கொடுமைவரை நான் பதிவு செய்திருக்கிறேன். எந்த வகையான ஒடுக்குமுறையாக இருந்தாலும் சரி, அதை எதிர்த்து என்னுடைய தூரிகையும் என்னுடைய குரலும் கண்டிப்பாக ஒலிக்கும்.

**இன்றைக்கு ஈழத்துச் சகோதரிகளின் அழகை, போதைக்காக வர்ணிக்க எந்த பேனாவுக்காவது (ஈழத்துக் கவிஞனுக்கும் சரி, தமிழ் நாட்டுக் கவிஞனுக்கும் சரி) துணிச்சல் இருக்கிறதா? வீரம் விளைந்த பெண்மை அது. ஈழத்துச் சகோதரியைப் பூவோடு ஒப்பிட்டுக் கவிஞன் பாடமுடியாது. அவர்களை பூவாகக் காட்ட முனைகிற தூரிகையில் காளான் பூத்துவிடும்.**



❑ ***கற்சிற்பங்கள் முதல் இன்றைய ஓவியங்கள்வரை பெண்ணை நிர்வாணமாக வரையக்கூடிய ஒரு தன்மை உள்ளது. இதற்கு என்ன காரணம்?***

■ பெரும்பான்மையான கலைஞர்கள் ஆண்களாக இருந்திருக்கிறார்கள் என்பதும் இதற்கு ஒரு காரணம். இன்றைக்கு காலம் மாறிவிட்டது. பெண் ஓவியர்கள் மிக மிகக் குறைவு. மேலை நாடுகளில் Nude study என்பது உண்டு. இதில் ஆண், பெண் என்ற வேறுபாடெல்லாம் இல்லை. ஆனால், இந்தியாவில் மட்டும்தான் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக - பெண்கள் நிர்வாணமாக வரையப்படுகிறார்கள். என்னுடைய ஓவியங்களில் இது போன்று இருக்காது.

❑ ***பெரும்பாலான கவிஞர்களும் கலைஞர்களும் பெண்களை அழகுப் பதுமைகளாகவே காட்டுகின்றனர். இதை எப்படி மாற்றுவது?***

■ அழகு எல்லோருக்கும் பொதுவானது. அது பார்க்கப்படும் விதத்தில் இருக்கிறது. பெண்களை அழகுப் பொருட்களாக அணுக நான் விரும்பவில்லை. அவர்கள் உலகின் ஆணிவேர்கள். உலகின் சூட்சுமமே அவர்கள்தான். அவர்களை அழகு என்கிற அம்சத்திற்காக மட்டுமே தூரிகை தொடுவதை நான் வெறுக்கிறேன். அவர்கள் முன்பு இருத்தி வைக்கப்பட்டிருந்த அழகுப் பெட்டகங்களை உடைத்துக் கிளம்பி வெகுகாலம் ஆகிவிட்டது. அவர்கள் போராட்ட வாழ்க்கைக் களத்திற்கும் புகுந்து விட்டார்கள்.

ஈழத்துச் சகோதரிகளை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்ப் பெண்ணியத்திற்கும் உலகப் பெண்ணியத்திற்கும் இவர்களை விட சிறந்த முன்னோடி இருக்க முடியாது. இவர்களை விட சிறந்த பெண்ணியப் போராளிகள் இருக்க முடியாது. இன்றைக்கு ஈழத்துச் சகோதரிகளின் அழகை, போதைக்காக வர்ணிக்க - எந்த பேனாவுக்காவது (ஈழத்துக் கவிஞனுக்கும் சரி, தமிழ் நாட்டுக் கவிஞனுக்கும் சரி) துணிச்சல் இருக்கிறதா? வீரம் விளைந்த பெண்மை அது, வீரம் விளைந்த இலக்கியம் அது.

ஈழத்துச் சகோதரியைப் பூவோடு ஒப்பிட்டுக் கவிஞன் பாட முடியாது. அவர்களை பூவாகக் காட்ட முனைகிற தூரிகையில் காளான் பூத்துவிடும். அவர்களின் வீரம் பேசப்பட வேண்டும். பெரும்பாலும் எனது ஓவியங்களில் வருகின்ற பொருள்கள் - அழகு, அணிகலன்கள், பூ, பொட்டு இல்லாமல்தான் இருப்பார்கள். அவர்கள் ஒப்பனை செய்து கொள்ளவும், பூ வைக்கவும், பொட்டு வைக்கவும் நேரமில்லாதவர்கள். என் ஓவியப் பெண்கள் அணிகலன்களுக்கு ஆட்படாத போராளிகள்.

❑ ***இனிவரும் கணினி யுகத்தில் ஓவியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?***

■ கணினியில் சிலவற்றை செய்வதற்குக்கூட கையில் வரைந்துதான் உள்ளே கொண்டு செல்ல முடியும். கணினி சில வேலைகளை எளிமைப்படுத்தி இருக்கிறது. எவ்வளவுதான் கணினிகள் பெருகினாலும், கையால் வரையப்படும் ஓவியங்களுக்கான மதிப்பை ஒருபோதும் குறைத்துவிட முடியாது. அது நேரத்தைக் குறைத்திருக்கிறது என்று மட்டும் சொல்லலாம். ●



படிப்பகம்

www.padippakam.com



# அரசமைப்புச் சட்டத்தை பிரதமர் மதிக்கிறாரா?

■ நீதிபதி எச். சுரேஷ்

அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு என்றவுடன், நாம் எழுப்பும் முதல் கேள்வி, அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு என்றால் என்ன? என்பதுதான். ஒட்டுமொத்த சட்டத்தையும் அழித்துவிட்டு, புது அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதா? அல்லது ஒரு சிலவற்றை மட்டும் மறு ஆய்வு செய்வதா? இரண்டாவது கேள்வி: அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு வேண்டும் என்று யார் கோரலாம்? மறு ஆய்வு குறித்த கோரிக்கையை மக்கள்தான் முன்வைக்க வேண்டும். 'எங்களுக்கு இந்த சட்டம் வேண்டாம்; இந்து சட்டம்தான் வேண்டும்' என்று பா.ஜ.க. போன்ற அரசியல் கட்சிகள் கேட்கலாம்.

ஆனால், அரசமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு அரசாங்கம், அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரலாமா? என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி.

அரசாங்கம், சட்டத்திற்கு அப்பாற்பட்டு நடக்கலாமா? உண்மையில், எந்த அரசாங்கமும் அரசமைப்புச் சட்ட நெறிகளுக்குப் புறம்பாக நடக்க முடியாது. எனவே, பிரதமர் உட்பட அரசு அமைச்சர்கள் அனைவரும் அரசமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதாக உறுதிமொழி எடுக்கின்றனர். இந்நிலையில், 'இந்தச் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; எனவே, இதை மறு ஆய்வு செய்ய வேண்டும்' என்று எந்த அரசாங்கமாவது சொல்ல முடியுமா?

இப்படிச் சொல்வதற்கு அரசமைப்புச் சட்டத்தில் எந்த வழிமுறையும் இல்லை. அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யலாம் என்று சட்டப்படியே சொல்ல முடியாது. அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசாங்கம் நினைத்தால், அதற்கு முதலில் நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி - அனைவரின் ஒப்புதலையும் பெற வேண்டும். அப்படி ஒப்புதல் பெற்ற பிறகு, முன்பு செய்ததுபோல் அரசமைப்பு அவையை நியமிக்க வேண்டும். ஆனால், 30 சதவிகித மக்கள் ஆதரவு மட்டுமே உள்ள பா.ஜ.க. அரசு, அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு குறித்து எப்படி முடிவு செய்யலாம்?

அரசியல் கட்சிகளின் கொள்கை அறிக்கைகளைப் பார்த்தால், பா.ஜ.க. அல்லது சங்பரிவாரத்தைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் தங்களின் தேர்தல் அறிக்கையில் இதைக் கோரவில்லை. தேசிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் அறிக்கையிலும் இது இடம் பெறவில்லை. அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று பா.ஜ.க. மட்டுமே வெளிப்படையாக அறிவித்திருக்கிறது. எனவே, இவர்களின் நோக்கம் என்ன? சிறுபான்மை மக்களுக்கு உரிமை வேண்டும் என்பதற்காக இவர்கள் அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோருகிறார்களா? தலித் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கோருகிறார்களா? அதுவும் இல்லை.

பா.ஜ.க., சாதி அமைப்பை மறுக்கத் தயாராக இருக்கிறதா? பா.ஜ.க.வுக்கு சாதி ஒழிப்பில் நம்பிக்கை இருக்கிறதா? இல்லை. சாதி அமைப்புதான் இவர்களின் மய்ய தளம்.

பன்னாட்டு நிறுவனங்களை இன்றைக்கு ஆதரிப்பவர்கள் யார்? பா.ஜ.க. மட்டும்தான் ஆதரிக்கிறது. சமூக, பொருளாதார உரிமைகளை - அடிப்படை உரிமைகளில் சேர்ப்பதற்கு இக்குழுவில் இருக்கும் எந்த ஒரு உறுப்பினரோ - பா.ஜ.க.வோ தயாராக இல்லை. ஏனெனில், அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை மாற்ற வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம்.

எந்த மாதிரியான சட்டத்தை இவர்கள் உருவாக்க விரும்புகின்றனர்? 'இந்து ராஷ்டிரா'வை உருவாக்குவதுதான் இவர்களின் தலையாய நோக்கம். 1998ஆம் ஆண்டே ஆர்.எஸ்.எஸ்., 'அகில் பாரதீய வித்யார்த்தி பரிஷத்' ஆகியவை புதிய அரசமைப்புச் சட்ட வரைவை உருவாக்கியுள்ளன என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. இப்போதிருக்கிற அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி இவர்கள் குறிப்பிடும்போது, 'இது, மதநெறிகளையும் மரபுகளையும் வெளிப்படுத்தவில்லை என்றும் இது இந்து மதத்திற்கு எதிராக இருக்கிறது' என்றும் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர்.

இப்போது ஆர்.எஸ்.எஸ்., தலைவராக இருக்கும் சுதர்சன் என்பவர், 'தர்ம கிரந்த்' அடிப்படையில் அரசமைப்புச் சட்டம் அமைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு இரு வாரங்களுக்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். மற்றும் அகில் வித்யார்த்தி பரிஷத், 'நாடாளுமன்றத்திற்கான தேவையே இல்லை என்றும், சட்டத்தை 'தர்ம குருக்கள்'தான் உருவாக்க வேண்டும்; நாடாளுமன்றம் அல்ல என்றும், பிரதமர் மட்டுமே சட்டத்தை நடைமுறைப்படுத்துவார் என்றும் கூறியுள்ளன. மார்ச் 1999 பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையில் ''ஒரே தேசம், ஒரே மக்கள், ஒரே பண்பாடு என்பதில் உறுதியாக உள்ளோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்லும் பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் பல மத்திய அமைச்சர்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினர்களே! சில மாதங்களுக்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். கொடி முன்பு அத்வானி 'சல்யூட்' அடித்து உறுதி மொழி எடுப்பது போன்ற புகைப்படம் வெளி வந்தது. அந்த உறுதிமொழி என்ன தெரியுமா?

"எனது புனிதமான இந்து மதம், இந்து சமுதாயம், இந்துப் பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்ப்பதன் மூலம் 'பாரத வர்ஷ'த்தின் (இந்தியாவின்) பெருமையை உலகெங்கும் நிறுவுவதற்காக நான் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராகிறேன்." என்பது ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் அனைவரும் எடுக்கும் உறுதிமொழி. உறுதிமொழியை அவர் எடுத்ததற்காக அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், அமைச்சராகும்போது அவர் அரசமைப்புச் சட்டத்தின் மீது உறுதி மொழி எடுக்கிறார்.

இதையெல்லாம் இவர்கள் வெளிப்படையாக செய்து கொண்டு, சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்போம் என்கிறார்கள். இந்த உறுதிமொழியை இவர்கள் கைவிடுவதாகச் சொல்கிறார்களா? இல்லையே. பா.ஜ.க. தன்னுடைய எந்தவொரு செயல்திட்டத்தையும் இதுவரை விட்டுக் கொடுக்கவே இல்லை. மாறாக, தன்னுடைய செயல்திட்டத்தை செயல்படுத்துவதில் முனைப்பாக உள்ளது. கடந்த 13 மாதங்களில் சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் பெருமளவுக்கு அதிகரித்து வந்துள்ளன.

உ.பி.யில், குஜராத்தில் கல்வி – காவிமயமாக்கப்பட்டு வருகிறது. நிர்வாகம், காவிமயமாகியுள்ளது. திடீரென இப்பொழுது மாநில சுயாட்சி பற்றி பேசுகிறார்கள். ஏனெனில், விதி 370 அய் நீக்க வேண்டும் என்று முயல்கின்றனர். இதற்காக, பரூக் அப்துல்லா மூலம் சுயாட்சி பிரச்சினையை எழுப்புகின்றனர். சுயாட்சி விவாதத்தின் மூலம் விதி 370அய் நீக்கி விடலாம் என்று முயல்கின்றனர். இதுதான் அவர்களின் செயல்திட்டம்.

அரசமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழுக்கான வரம்பெல்லைகளில், அரசமைப்புச் சட்ட ஆய்வு எத்தகையது என்பது மேலோட்டமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. "கடந்த 50 ஆண்டுகால அனுபவங்களின் பின்னணியில் நவீன இந்தியாவின் நிர்வாகம், சமூக, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்கான திறமையான அமைப்பு முறைகளின் தேவையை இப்போதுள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் எந்த அளவுக்குப் பூர்த்தி செய்கின்றன என்பதை இந்த ஆய்வுக் குழு பரிசீலிக்கும்." ('இந்து' 15.2.2000)

"நவீன இந்தியாவின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக" என்றால் என்ன பொருள்? உலகமயமாக்கலுக்கு ஏற்ப அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்கிறார்கள். எனவே, இதற்காக சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்கிறார்கள். அரசமைப்புச் சட்டக்குழுவின் தலைவர் நீதிபதி வெங்கடாச்சலையா, இதை எப்படிப் புரிந்து கொண்டுள்ளார்.

அவர் சொல்கிறார்: 'அரசமைப்புச் சட்டத்தை முழுவதுமாக மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பதல்ல இக்குழுவின் நோக்கம். அரசு செலவிடும் பணத்திற்கு ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். மத்திய மாநில உறவுகள், அறிவுச் சொத்துரிமை, பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள், நீதி சுதந்திரம் இல்லாததால், நீதிமன்றம் சுதந்திரமாக செயல்படமுடியவில்லை. எனவே, இக்குழு இதை எடுத்துக் கொள்ளலாமா என்று பரிசீலிக்கும்'.



நீதிபதி எச்.சுரேஷ், எஸ்.வி. ராஜதுரை, வி.கருப்பன், சக்திதாசன்

இக்குழுவில் காந்தியின் பேத்தி என்பதாலேயே குல்கர்னி நியமிக்கப்பட்டிருக்கிறார். வேறு சில நீதிபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில், நீதிபதிகள் அறிவாளிகளாகக் கருதப்படுகின்றனர். உலகில் எங்காவது நீதிபதிகள் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதைப் பார்த்திருக்கிறீர்களா? அரசமைப்புச் சட்டத்தை ஏற்படுத்துவதற்கு நீதிபதிகள் தகுதியானவர்கள் அல்ல. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர். அம்பேத்கர் மற்றும் முன்ஷி போன்றவர்கள் எல்லாம் வழக்குரைஞர்கள் என்றாலும் அவர்கள் ராஜதந்திரிகளுமாவர். இக்குழுவில், ஓரிரு தலித்துகளையும் நியமித்து – மக்களை இதன் மூலம் ஏமாற்றலாம் என்று திட்டமிட்டுள்ளனர்.

இந்தக் குழு இப்போது எப்படி செயல்படுகிறது? இக்குழுவின் செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்கிறதா? இல்லை என்று அக்குழு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ள நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யரே என்னிடம் கூறினார். இக்குழு, 23.3.2000 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் யார்வேண்டுமானாலும் இதுகுறித்து ஆலோசனை சொல்லலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவின் முதுபெரும் வழக்கறிஞர் நாரிமன், ஒரு உரையில், "பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளை வரவழைப்பது, அராஜகத்தை வரவழைப்பதாகும். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நூறுபேர் ஆலோசனை கூறினால், அதற்கு எதிராக இருநூறு பேர் ஆலோசனை சொல்வார்கள். இது, நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தைத் துண்டு துண்டாக உடைப்பதில்தான் போய் முடியும்.

இக்குழு சட்டப்படியான குழு அல்ல. மக்களின் பிரதிநிதித்துவமும் இதில் இல்லை; யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலையிலும் இல்லை. இக்குழுவிடம் வெளிப்படையான செயல்முறைத்திட்டமும் இல்லை. எனவே, யாரும் கேள்வி கேட்க முடியாது. பிறகு இதை ஏன் நியமித்தார்கள்? ஏனெனில், அடுத்தத் தேர்தலுக்கான செயல் முறைத் திட்டத்தை பா.ஜ.க. – சங்பரிவார் வகுத்துள்ளது. அதிபர் ஆட்சிமுறை ஒருமுறை வந்துவிட்டால், நாடாளுமன்றத்திற்கு வேலையே இல்லாமல் போய்விடும். எனவே, இந்த அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு முயற்சியை நாம் வெளிப்படையாக எதிர்த்தாக வேண்டும். இதை நாம் புறக்கணிக்கிறோம்; இதை ஆதரிக்க மாட்டோம் என்று நாம் ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும். •

*19.8.2000 அன்று, முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி எச்.சுரேஷ், சென்னையில் நடைபெற்ற 'அரசமைப்புச் சட்டத்தின் மீளாய்வு' கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்.*



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு கலகக்காரனின் திரைக்கதை



நூல் : ஜான் ஆபிரஹாம்
வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48, ராணி அண்ணா நகர், கே.கே. நகர்
சென்னை - 600 078
விலை : ரூ. 80 பக்கம் : 238

அளவுக்கதிகமாக குடித்து விட்டு ஜான் மாடியிலிருந்து விழுந்து (?) 1987 மே 30இல் இறந்து போனார். ஜான் இறந்தது தற்கொலையா இல்லை விபத்தா? ஜான் ஆப்ரஹாம் என்கிற நாடோடிக் கலைஞனைப் பற்றிய முதல் தமிழ்நூலை காஞ்சனை சீனிவாசன் தொகுக்க, தாமரைச் செல்வி பதிப்பகம் தமிழ்ச்சமூகத்துக்கு கொடுத்திருக்கிறது. ஜானை பற்றி தமிழர்கள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?

''கூத்து, நாட்டுப்புறவியல், இயல் இசை, இசை மரபுகளுக்கானமய்யம், பதிப்பு, மொழிபெயர்ப்பு, நவீன நாடகக்குழு என்று பல துறையினரும் 'போர்டு பவுண்டேஷன்' முன்பு மண்டியிட்டு மடிப்பிச்சை ஏந்தி தமது 'ஆன்மா'வை விற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் பொதுமக்களிடம் சென்று, படம் எடுக்க வேண்டும் காசு கொடுங்கள்'' என்று கேட்ட ஜானை ''தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்கிறார் தாமரைச் செல்வி பதிப்பக திருநாவுக்கரசு.

ஜான் குடிகாரரா, நிரந்தர போதையினால், தன்னையும் தனது கலையையும் அழித்துக் கொண்டவரா? ''அக்ரஹாரத்தில் கழுதை ஒரு போதும் வெளிச்சத்துக்கு வராது என்று நம்பியவர்கள் அநேகம் பேர் இந்த காலதாமதம் எனது பொறுப்பற்ற வாழ்க்கை முறையின் ஒரு பகுதி மட்டுமே என்று நம்பியவர்கள் இருந்தனர். ஆனால், அது சரியல்ல. வேதனை நிறைந்த என் வாழ்க்கையில் என்னை வேதனைப் படுத்தியது இந்தத் தவறான அபிப்ராயம்தான். வாழ்க்கையில் வேறு எந்த ஆசையும் இல்லாத நான் என்னுடைய ஒரே அடைக்கலமான சினிமாவுடன் எப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொள்ள முடியும்.''

எதிர்ப்பு கலைவடிவம் அனைத்துத் துறையிலும் கலகம் விளைவிக்கிற மாதிரியே லத்தீன் அமெரிக்க சினிமாவின் தாக்கம் கொண்டு ஜானும் அடக்குமுறைகளுக்கும் / நிறுவனங்களுக்கும் எதிரான 'எதிர்ப்பு

**நூலிலிருந்து...**

**கடந்த அய்ம்பது ஆண்டுகளாக நாம் கொச்சையான திரைப்படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆபாசம் நமது பார்வையாளர்களை போதைமருந்து போல பாதித்திருக்கிறது. இது மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும்.**

சினிமாவை' படைத்தார். இதுவே மக்களுக்கானது என்பதை நன்கு உணர்ந்த ஜான், தனது வாழ்க்கையையும் சினிமாவையும் பிரித்துப் பார்த்ததில்லை என்பதை இந்நூலின் மூலம் உணர முடிகிறது.

'ஒடேஸ்ஸா' மூலம் தமுக்கடித்து சுவரொட்டி ஒட்டி, பிரச்சாரம் செய்து அய்ம்பது காசு, ஒரு ரூபாய் திரட்டி உண்டியலேந்தி படம் எடுக்கிற தைரியம் ஜானைத் தவிர வேறொருவருக்கு வர சாத்தியப்பாடுகள் மிகக் குறைவே. ''நான் பட்டினி கிடந்து சாக வேண்டியதாக இருந்தாலும் கூட, வியாபாரத்தனமான திரைப்பட உலகத்தின் பக்கம் நுழையவே மாட்டேன். என் சக உயிர்களோடு நான் தொடர்பு கொள்ள தேர்ந்தெடுத்த வழியே இந்த சினிமா. நான் படுத்து உறங்க எனக்கு ஒரு கூரை கூட வேண்டாம்; பட்டினி கிடப்பதற்கும் கூட எனக்கு தெரியும். எனக்கு நான் ஆசைப்படும் திரைக் கதைகளை தயாரித்தாலே போதும்.'' ஒரு நடிகனை 'ஹீரோ' ஆக்க பல லட்சம் மக்களை முட்டாள்களாக்கும் வியாபார திரைப்படத்தை எடுக்க ஒரு போதும் அவர் நினைத்ததில்லை.

''இந்த ஜான் மட்டும்தான் இப்படித் தெருவிலும் கடைத் திண்ணையிலும் அமர்ந்து பேசுவதற்காக கிடைப்பான். காரணம், நான் இந்த நாட்டின் பச்சை மனிதர்களைக் காண்பவன். குளிர் அறைகளில் அமர்ந்து 'ஆர்ட் பிலிம்' பற்றி தலை சூடேறும்படி ஆலோசிக்கும் அறிவு ஜீவி இயக்குநரல்ல நான்'' ஜானின் கலை சினிமாவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியவர்களுக்கு உதவும் நல்ல நூல் இது.



அவரது கையூர் திரைக்கதை உட்பட, ஜானின் கட்டுரைகள், நேர்முகங்கள், சிறுகதைகள் ஜானைப்பற்றிய கதைகள், விமர்சனக்கட்டுரைகளோடு வந்திருக்கும் இந்நூல் தமிழில் ஒரு அரிய முயற்சி எனப் பாராட்டலாம். ●

- டி. அருள் எழிலன்



படிப்பகம்

www.padippakam.com

திறனாய்வு

# நமக்கான பண்பாடு

**இருட்டை விரட்டி விட்டு வெளிச்சத்தைக் கொண்டுவர முடியாது. வெளிச்சம் வந்தால், இருட்டு தானாகவே வெளியேறி விடும். எனவே, பவுத்தம் என்ற உயரிய வாழ்வியல் நெறி எனும் ஒளி பாய்ந்தால் - பார்ப்பனீயம், இந்து மதம், வர்ணம், சாதி போன்ற இருள் மறையும். இதைக் கருத்தில் கொண்டு, பவுத்த காப்பியங்களில் பேசப்பட்ட துறவிகள், மனிதர்கள், மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றை சற்று ஆழ்ந்து நோக்கும் புதிய முயற்சியே இக்கட்டுரை.**

■ சங்கமித்திரை

பவுத்தம் என்றவுடன் நமக்கு உடனடியாக நினைவுக்கு வருவது புத்தர் என்ற மனிதர்தான். இந்த மனிதரைத் தவிர வேறு எந்த நிகழ்வுகளோ, துறவிகளின் பெயரோ அல்லது பவுத்தத்தில் மிகவும் சிறப்பாக விளங்கிய புத்தர் காலத்து மக்களோ நம் நினைவை எட்டுவதில்லை.

ஆனால், இந்து மதம் - ராமாயணம் என்றவுடன், ராமன், லட்சுமணன், சீதை, அனுமான் ... போன்ற கற்பனைப் பாத்திரங்கள் சட்டென்று நமது நினைவை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. வெகு மக்களிடையே கூட ராமாயணம், மகாபாரதம் சார்ந்த பழமொழிகள், சொல்லாடல்கள் பேச்சு வழக்கில் மிகவும் இயல்பாகக் காணப்படுகின்றன.

'ராமராஜ்யம் வரணும்', 'படிக்கிறது ராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோயில்', 'விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு - சீதைக்கு ராமன் சித்தப்பன் என்றானாம்', 'கும்பகர்ணனைப் போல தூங்குகிறான்', 'நான் என்ன அனுமானைப் போல எனது இதயத்தைப் பிளந்து அங்கு ராமன் இருப்பதையா காட்ட முடியும்', 'ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?' - இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகுமளவிற்கு ராமாயண, மகாபாரத ஊடுருவல்கள் நம் பண்பாட்டை, நம்மை அறியாமலேயே சிதைத்து வருகின்றன.

ஏன் இந்த நிலை? இந்த மண்ணிற்கென தொன்மையான வரலாறு இல்லையா? ராமாயணம், மகாபாரதம் போன்றவைதான் இந்த மண்ணிற்கான வரலாற்றைச் சொல்கின்றனவா? புரட்டுக் காவியங்களைக் கூறித் தெரிந்து கொள்ளும் அளவிற்கு - இந்தச் சமூகம் வரலாறு அற்ற ஒரு சமூகமா? என்பன போன்ற வினா எல்லோர் மனதிலும் எழுவது இயல்பு.



குரங்கைக் கூட அனுமானாக - ஆஞ்சனேயனாக, யானையை வினாயகனாக, மயிலை முருகனின் வாகனமாக, மண்ணை பூமாதேவியாக, கல்வியை சரசுவதியாக, செல்வத்தை லட்சுமியாக, வீரத்தை காளியாக இன்று அனைத்தையும் - இந்துமதமாக உருவகப் படுத்தியுள்ளதன் பின்னணி என்ன? இந்து மதத்தைத் தவிர்த்து, ஒரு துரும்பைக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு, இந்தியாவில் அனைத்தும் இந்து மயமாக்கப்பட்டுள்ளது. ஆயுத பூசை என்ற பெயரில், கிருத்துவர், இஸ்லாமியர்கள் கூட தங்களது கடைகளில் அன்றைய தினம் பொரிகடலை தந்து கொண்டாட வேண்டும் என்ற அளவிற்கு நிர்பந்தம் உருவாகியுள்ளது.

இந்தியாவில் மட்டும்தான் இந்த அவல நிலை. புதிய கலாச்சாரம் நம்மை இந்த அளவிற்கு சீரழிக்க முடிகிறது என்றால், நாமென்ன கலாச்சாரம் அற்றவர்களா? அல்லது நமது கலாச்சாரம் இந்து கலாச்சாரத்தால் விழுங்கப்பட்டதா? அப்படியெனில், நமது பண்டைய கலாச்சாரம் என்ன? என்பன போன்ற வினாக்கள் தோன்றுவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

ராமன் அயோக்கியன்; ராமாயணம் பொய் என்று போதுமளவிற்குக் கூறியாகிவிட்டது. அயோக்கியனை அடையாளப்படுத்தத் தெரிந்த நமக்கு



படிப்பகம்

www.padippakam.com

# ராமாயணம், மகாபாரதம் - திருடப்பட்ட காவியங்கள்

சீவகன் என்ற சீவக வழுதியை, பவுத்த வரலாற்றாசிரியர்கள் எவரும் இதுவரை சரியான முறையில் பதிவு செய்யவில்லை. சீவகனின் தாயார், மன்னன் பிம்பிசாரன் அரசவையில் நடனமாடும் ஒரு பெண். இவர் திருமணம் செய்து கொள்ளாமலேயே ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தார். தனது தொழிலான நடனத்திற்கு தன்னுடைய குழந்தை இடையூறாக இருக்கும் என முடிவெடுத்தார். தனது குழந்தையை ஒரு மரப்பெட்டியில் வைத்து இருக மூடி குப்பை மேட்டின் மீது எறிந்து விட்டார். அவ்வழியே வந்த மன்னனின் மகன் இளவரசன் அபயன், அப்பெட்டியின் உள்ளே இருந்த ஆண் குழந்தையைக் கண்டான். பிறந்து மூன்று மாதமே ஆன ஆண் குழந்தை மூடிய பெட்டிக்குள்ளும், குப்பைகளின் நடுவே இருந்தும் உயிருடன் இருப்பது கண்டு, இளவரசன் அபயன் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தான்.

தாம் வாழும் சூழல் தங்களுக்கு உகந்ததாக இல்லாதபோது, பெரியவர்களே தங்களது உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். ஆனால், இச்சிறு குழந்தை மிகவும் மகிழ்ச்சியோடு ஆரவாரத்துடன் தனது கைகளையும், கால்களையும் உதைத்துக் கொண்டு 'தன்னில் மகிழ்ச்சியடைவது' அபயனை மிகவும் ஈர்த்து விட்டது. குழந்தை இந்நிலையிலும் உயிருடன் இருப்பதால், பல உயிர்களைக் காக்கும் வல்லமை பொருந்திய குழந்தை என்று பொருள் தரும்படி - 'ஜீவகன்' என்ற பாலி மொழிச் சொல்லை குழந்தைக்குப் பெயராக இட்டான். அந்தக் குழந்தையை தன்னுடைய மகனாகத் தத்தும் எடுத்துக் கொண்டான்.

பல உயிர்களைக் காக்கும் வகையில், சீவகன் வல்லமை பொருந்திய மன்னனாக வரவேண்டும் என அபயன் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டான். ஆனால், சீவகனோ ஒரு மருத்துவரால், ஒரு துறவியால் மட்டுமே உலக உயிர்களின் உடலையும், மனதையும் செம்மைப்படுத்த இயலும் என உறுதியாக நம்பினான். அதன் பொருட்டு மருத்துவம், தத்துவம் போன்றவற்றை ஆழக்கற்று சிறந்த மருத்துவரானான். மன்னன் பிம்பிசாரனின் தீராத நோயையும் தீர்த்து, சிறந்த மருத்துவர் என்ற புகழும் பெற்றான்.

சீவகனுக்கு, புத்தரின் அருகிலேயே இருந்து, மருத்துவராகப் பணியாற்ற வேண்டும் என்ற பேரவா இருந்தது. ஒரு சமயம் பொறாமை மிகுதியால் தேவதத்தன், புத்தரின் மீது ஒரு பாறையை உருட்டி விட்டான். அது, புத்தரின் காலில் பெரும் காயத்தை ஏற்படுத்தி விட்டது. இந்தக் காயத்தை ஆற்ற வேண்டி சீவகன், புத்தரை முதன் முதலாகச் சந்தித்தான். புத்தரின் காயத்தை முழுமையாகக் குணப்படுத்தினான்.

தன்னை புத்தரின் சீடனாக அங்கீகரிக்க வேண்டினான். மருத்துவன், துறவி என்ற எல்லைக்குள் சீவகன் அடங்கி விடக்கூடாதென்று புத்தர் மறுத்து விட்டார். புத்தரின் ஆலோசனைப்படி, சீவகன் தலைசிறந்த மருத்துவனாக, உலக மக்களுக்குத் தொண்டு செய்தார்.

ஆனால், சீவகனின் வாலாறு, இந்துத்துவ வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் இந்திரன் மகன் 'கர்ணன்' என்ற கதாபாத்திரம், இந்த சீவகவழுதியின் வரலாற்றிலிருந்து திருடப்பட்டதே! தமிழ் கூறும் நல்லுலகம், சீவகனை நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு 'திருத்தக்க தேவர்' என்ற பெருமகனார் "சீவக சிந்தாமணி' என்ற காப்பியத்தைப் படைத்தார். இந்தக் காப்பியத்தை'அய்ம்பெரும் காப்பியமாக' தமிழ் உலகம் அங்கீகரித்துள்ளது.

தமிழ் இலக்கியத்தில் 'காப்பியம்' என்ற அங்கீகாரத்தை இதுவரை ராமாயணம், மகாபாரதம் கூட பெற முடியவில்லை. அவை வடமொழியில் எழுதப்பட்ட காவியங்களின் மொழி பெயர்ப்புகளே. ஆனால், சீவக சிந்தாமணி தான் முதல் காப்பியமாக, தலைசிறந்த காப்பியமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காப்பியத்தின் நாயகன் சீவகன். இந்தக் காப்பியத்தில் - தடயவியல், உரு, ஒலி, ஓசை, விரல் பதிவு போன்றவற்றை வைத்தே ஒரு நபரின் ஓவியத்தை வரையும் முறை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விசை மூலம் இயங்கும் விமானம், 'மயில் வாகனம்' போன்ற வளமான கற்பனைச் சுவையுடன் இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. மகாபாரதம், ராமாயணம் போன்ற கதைகளில் உலவிவரும் பெரும்பாலான கதாபாத்திரங்கள், சீவகனின் வரலாற்றில் இருந்து திருடப்பட்டவையே. ●

யோக்கியன் யார் என்று ஏன் சொல்லத் தெரியவில்லை அல்லது நாம் அதை ஏன் சொல்ல முற்படுவதில்லை. வரலாற்றை மக்கள் மயப்படுத்தாமல், எதிரி, எதிரி.. எங்கும் எதிரிகள் என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தால், மக்களுக்கு இயல்பாகவே அச்சம் தோன்றும்; நம்பிக்கை மறையும். தங்களைச் சுற்றி இருள் சூழ்ந்திருப்பது போல, ஒரு விரக்தி மனப்பான்மையில் மக்கள் வாழ வேண்டிவரும்.

கிட்டத்தட்ட இன்றைய தினம், பெரும்பான்மையான முற்போக்கு வாதிகளும், சிந்தனையாளர்களும், மக்களிடையே களப்பணி செய்பவர்களும் மனம் தளர்ச்சி கொண்டவர்களாகவும் - அடிக்கடி சலித்துக் கொள்பவர்களாகவும், "இந்த சமூகம் திருந்தாது, இந்த சமூகம் நன்றி கெட்ட சமூகம், இந்த சமூகம் பிற்போக்கான சமூகம்'' என்ற கருத்தை - தாங்கள் துவண்டு விழும்போதெல்லாம் வெளியிடுபவர்களாக உள்ளனர்.

மாறாக, சங்கரச்சாரி முதல் கடைசி காளி கோயில் பூசாரி வரை - முகத்தில் ஒரு மலர்ச்சியோடு, நம்பிக்கையோடு இருக்கின்றான். அவர்கள் இப்படித் துவளுவதில்லை; உலகை வெறுப்பதில்லை. தன்னிடம் மனம் தளர்ந்து வருபவர்களுக்கு நம்பிக்கை ஊட்டி அனுப்புகின்றனர். இதற்கான காரணங்கள் என்ன?

தங்களுக்கென ஒரு கருத்தியல் இருக்கும் துணிவுதான். தங்களுக்கு மன ரீதியாக தொய்வு ஏற்படும் போதெல்லாம், அந்தக் கருத்து சரியோ தவறோ அவர்களுக்கு அந்தக் கருத்து ஓர் ஆறுதல் அளிக்கிறது. அந்த ஆறுதல் ஒரு புதிய நம்பிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது.

பார்ப்பனர்கள் கூட, முதலில் தங்களின் கருத்துகளுக்கு எதிரான சிந்தனை உள்ளவர்களை விமர்சனம் செய்தனர். அதே போல், தங்களது மதமான இந்து மதத்தை வளர்ப்பதிலும் அதிக அக்கறை காட்டியுள்ளனர். இந்து மதம் அவர்கள் எதிர்பார்த்த வளர்ச்சி பெற்றவுடன், மாற்றுக் கருத்து உள்ளவர்களை - ஒரு காலகட்டத்திற்கு அப்பால் சென்று விமர்சனம் செய்யாமல் அவற்றை இருட்டடிப்புச் செய்தே வந்துள்ளனர். இதுதான் பார்ப்பனீயம். இந்த வகையில், இந்தியாவில் பார்ப்பனீயக் கருத்துகள் பரவியுள்ளதால், பவுத்த கருத்துகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. ●



படிப்பகம்

www.padippakam.com



# 'பாரதி'ய ஜனதா பார்ட்டி! 6

■ வே. மதிமாறன்

பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற் கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னைப் பட்டணத்து 'பட்லர்'களைப் பற்றிப் பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றியே பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு; பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நாநம் பண்ணச் சொல்லு. அவர்களோடு சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களை எல்லாம் உடனே ஒன்று சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதறவிடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக் கோட்டைச் செட்டிகளே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக்கூடிய கைங்கர்யம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கர்யம்."

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இப்படி கட, கடவென்று உத்தரவு போடுகிறாரே இந்த கவிராஜன், எதனால்?

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் பங்களிப்பும் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் - பார்ப்பனர்களை அடித்து விட்டதாகக் கேள்விப்பட்டதினாலும் வந்த பாசம், இதில் கவனிக்கப்பட வேண்டிய வாசகம்.

'அவர்களை எல்லாம் உடனே ஒன்று சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள்'

**- இதுவே பாரதியம்.**

மடாதிபதிகளே! நாட்டுக்கோட்டைச் செட்டிகளே! பணத்தை வாரிச் செலவிடுங்கள். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கர்யம் என்று வர்ணிக்கிறார்.

ஆனால்,

அதை செயலில் செய்த நீதிக்கட்சிக் காரர்களை தேசத்துரோகிகள் என்கிறார். நீதிக்கட்சி அரசு பொறுப்பேற்றவுடன்,

- ஆதித்திராவிடர்களுக்கு என்று மட்டுமான பலப்பலவான பள்ளிகளை உருவாக்கலும் நடத்தலும்.
- ஆதித்திராவிடர்களுக்கு தொழிற் கல்வி அளிப்பதில் விவசாயத்துறை, கல்வித்துறை இரண்டும் தனியார் துறையில் நல்ல போட்டியுடன் நடைபெறும் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதை ஊக்குவித்தல்.
- கூட்டுறவு இயக்கத்தை ஆதிதிராவிடர்களிடையே ஊக்குவித்தல்.
- நீர்வசதியை மேம்படச் செய்தல்.
- நிலங்கள் வழங்குவதை விரைவுபடுத்துதல்
- மதுவிலக்கை ஊக்குவித்தல்

***தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள்:***

நிலங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அப்போது தொல்லைகள் ஏற்படுகின்றன. இவற்றை நீக்க லேபர் கமிஷனரால் கூறப்பட்டு ரெவினியூ போர்டினால் பரிந்துரைக்கப்பட்டவை இவை:

- நிலம் ஒரு கூட்டு அமைப்புக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வமைப்பு மூலதனம் வழங்க வேண்டும். சாதி மக்களிடமிருந்து எழும் எதிர்ப்பைச் சமாளிக்க, ஆதி திராவிடர்களுக்கு உதவ வேண்டும். நிலம் வழங்கப்பட்ட ஒரு உறுப்பினர்க்கு நிலத்தின் மீது ஈடுபாடு கொள்ளச் செய்யும் போது, அந்தச் சொத்தை அவர் அடமானம் வைக்க ஒப்புதல் அளிக்கக் கூடாது. அவ்வாறே தாழ்த்தப்பட்டோருக்காகச் செயலாற்றும் மிஷனரிகள், பொது நல அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளுக்கு பி.எஸ்.ஓ. 15படி அவர்களுக்கு நிலங்களை ஒதுக்குவதில் மறுப்பதற்கில்லை என அரசு ஆணை பிறப்பித்தது. *இச்செய்திகள், 11.08.1920 நாளிட்ட 1934ஆம் எண் ஆணையில் காணப்பெறுவன.*
- வேளாண்மைக்காக ஏராளமான நிலங்கள் இருக்கும் சிற்றூர்களில் ஆதிதிராவிடர்கள் வேளாண்மை செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட பகுதி நிலங்களை அவர்களுக்காக ஒதுக்குதல்; மற்ற சிற்றூர்களிலும் தேவை என மாவட்ட ஆட்சியாளர் எண்ணுவாரானால் இவ்வாறு செய்யலாம்.
- எண்ணற்ற புறம்போக்குப் பகுதிகளோ, அளக்கப்படாது உள்ள நிலங்களோ அயனுக்கு மாற்றப்படும்போது, எடுத்துக்காட்டாக ஒதுக்கப்பட்ட காடுகள் அழிக்கப்படும் போது, ஆதிதிராவிடர்களின் இன்றைய தேவைகளும் எதிர்காலத் தேவைகளும் குறித்து ஆராயலாம்.
- இந்த நிலங்களைப் பெறுபவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு மாற்றப்படாதவாறு நிலங்கள் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- நிலத்தைப் பெறுபவர்கள் கட்டணம் செலுத்த முடியாதபடி மிக ஏழையராக இருப்பின், வழங்கப்படும் நிலங்களில் உள்ள மரங்களின் மதிப்பைத் தள்ளுபடி செய்யவோ குறைக்கவோ செய்யலாம். நில அளவைக்கான கட்டணமும் இவ்வாறு செய்யப்படலாம். - *இவ்விபரங்கள் 16.12.1921 நாளிட்ட 2815 எண் ஆணையில் உள்ளன. (முனைவர் பு. இராசதுரை எழுதிய 'நீதிக் கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக' என்ற நூல்.)*

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் அல்லாமல் குறவர், மீனவர், கள்ளர் சமுதாய மக்களுக்கும் நிறைய திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறது நீதிக்கட்சி அரசு.

இந்த நீதிக்கட்சிக் காரர்களைத் தான் தேசத் துரோகிகள் என்கிறார் நம் வரகவி. அப்படியானால் பாரதி பார்வையில் தேசாபிமானிகள்?

● ●

பெண் கல்வி, பெண் உரிமை, ஜாதிய ஒற்றுமை (ஜாதி ஒழிப்பல்ல) பற்றி தீவிரமாக கவிதைகளிலும், கட்டுரைகளிலும் எழுதித்தள்ளிய சுப்பிரமணிய பாரதி,

படித்த பெண்கள், இந்து மதத்தைத் தவிர்த்து, கிறித்துவ மதத்தில் நாட்டம் கொள்ளும்போது அல்லது கிருஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிக்கும்போது, கிறித்துவ பள்ளிகளில் பாதிரிகள் கிருஸ்துவைப் பற்றி போதிக்கும்போதும், ஜாதிய ஏற்றத் தாழ்வுகளுக்குப் பார்ப்பனர்கள் காரணம் என்று சொல்லும்போதும்,

இந்தப் பெண்ணுரிமை சிந்தனையாளர், ஜாதிய ஒற்றுமையாளர் - ஒரு வைதீகப் பார்ப்பனருக்குரிய வெறியோடு பாய்ந்து கிழிக்கிறார்.

"நமது வாலிபர்கள் பாடசாலைகளிலே நமது மஹான்களைப் பற்றி மிகவும் இழிவான எண்ணங் கொண்டு வளர்கிறார்கள். முக்கியமாகக் கிருத்துவப் பாடசாலைகளில் இவ்விஷயமாக ஏற்படும் கெடுதிக்கு அளவில்லை..........

நாம் குழந்தைப் பருவத்திலே ஒரு கிறிஸ்துவப் பாடசாலை உபாத்தியாருடன் பேசிக்கொண்டிருந்தபோது, வியாஸ பகவானைப்பற்றி விவரிக்க நேரிட்டது. அப்போது அந்த உபாத்தியாயர் நம்மை நோக்கி "உனக்குத் தெரிந்த விஷயங்கள்கூட வியாஸருக்குத் தெரியாதே! பூமி தட்டையாக ஒரு பாம்பின் தலைமீது நிற்கிறதென்று வியாஸன் நினைத்து வந்தான். உங்கள் முன்னோர்களெல்லாம் அநாகரிக ஜனங்கள்" என்று கூறினார். அவர் தெய்வ அவ தாரமென்று தொழும் கிறிஸ்துவும், மஹாஞானிகளென்று கருதும் ஸெயின்ட்பால் முதலிய நூற்றுக்கணக்கான மனிதர்களும் அதே மாதிரிதான் என்பதை அந்த உபாத்தியாயர் மறந்துவிட்டார். இப்படிப்பட்ட உபாத்தியாயர்களின் கீழ் நமது குழந்தைகளிருக்குமானால், எத்தனை தீமை உண்டாக மாட்டாது?

உபநிஷத்துகளைப் பற்றிப் பாதிரிகள் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களும் நமது இளைஞர்



படிப்பகம்

www.padippakam.com

களின் மூளையிலே ஏறும்படி விட்டுவிடுவோமே யானால், நமது நாட்டிற்கு நாமே பரம சத்துருக் களாக முடிவோம்.

கிருஸ்துவப் பாடசாலைகளுக்குப் பிள்ளை களை அனுப்பி சிவாஜியைக் கொலையாளியென் றும், வியாசரை அறிவிலியென்றும், ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தூர்த்தனென்றும் அவ்விளைஞர்க ளைக் கற்கும்படி செய்கிற ஒவ்வொரு தந்தையும் புத்திர துரோகியாகிறான். இளைஞர்கள் அவ்வாறே நினைப்புக் கொண்டவர்களாகி தமது ஒழுக்கத்திற் கும், அபிவிருத்திக்கும், ஊக்கத்திற்கும் யாரையும் திருஷ்டாந்தமாகச் சொல்ல வன்மையற்றவர் களாகி, அது காரணமாக ஒழுக்கம் முதலியவற்றிலே தாழ்வடைந்து போய் விடுவார்களாதலால் மேற் கண்டவாறு தமது புத்திரர்களை மிஷன் பாடசாலை களுக்கு அனுப்பும் தந்தையர் தேசத் துரோகிகளு மாகிறார்கள். கிருஸ்து மார்க்கத்திலே நாம் அனாவஸ் யமான விரோதம் கொண்டிருப்பதாக நினைக்க வேண்டாம். .................................................. ஆரியத் தன்மையைப் பெரும்பாலுமிழந்து அஞ் ஞானம், மூட நம்பிக்கை யென்னும் சேறுகளிலே அமிழ்த்திக் கிடக்கும் நம்மவர், கிருஸ்தவப் பாதிரி கள் நமது முன்னோரைப் பற்றிக் கூறுவதே மெய் யாக இருக்கலாமென்று கிரஹித்துக் கொள்கிறார் கள். அறியாமை மிகுந்த அன்னியர்கள் எழுதி வைத்திருக்கும் வாய் சரித்திரங்களைக் கழற்றி யெறிந்துவிட்டு நமது நாட்டின் தேச பக்தியும் நவீன அறிவும் கலந்து மேலோர்கள் சரியானபடி ஆராய்ச்சிகள் புரிந்து உண்மையான சரித்திரங் களெழுதத் தலைப்பட வேண்டும். அதற்கி டையே இளைஞர்களின் அறிவையெல்லாம் பாதிரிகள் விஷமாக்கி விடாதவாறு அவர்களின் பாடசாலைகளை விலக்கி வைக்க முயல வேண்டும். போதுமானபடி பணம் குவித்து வைத்திருக்கும் மனிதர்கள் பச்சையப்பன் காலேஜ் போன்ற சுதேசீய காலேஜிகளையும் ஸ்கூல்களையும் பலப்படுத்தி பாதிரிகளின் பள்ளிக்கூடங்களுக்கு நிகராக்க வேண்டும்.

பெண்கள் பள்ளிக்கு பார்த்த சாரதி அய்யங்கார் என்பவர் நன் கொடை அளித்ததைப் பாராட்டி, புது மைப் பெண்களை உருவாக்கிய மகா கவி பாரதி, இந்தியாவின் தலைசிறந்த பெண்நிலைவாதிகளான கர்கி, மைத் ரேயி, ராமனின் மனைவி சீதா இவர் களைப் பற்றியும் பாடத்திட்டத்தில் கொண்டுவரவேண்டும் என்று பாசத்து டன் பரிந்துரை செய்கிறார்.

"இவர் (பார்த்தசாரதி) இந்தப் பள்ளிக்கூடத் துக்கு வரும் பெண்களுக்கு ஸம்ஸ்கிருதபாஷை அவசியமாகக் கற்பிக்க வேண்டுமென்பது தமது நன்கொடையின் நிபந்தனையாக இவர் வைத்தி ருக்கிறார். இது மிகவும் மெச்சுதற்குரிய செய்கை யாகும். கர்கி, மைத்ரேயி, ஸீதா முதலிய பாரத கண்டத்து ஸ்திரீ ரத்னங்களின் ஸமாச் சாரங்களை நமது மாதர்கள் நேரே கற்றறியும் திறமை படைத்து விடுவார்களானால் இதைக் காட்டிலும் இந்நாட் டிற்கு வேறென்ன அதிர்ஷ்டம் வேண்டும்"

பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் டி.எஸ். ராமச்சந்திரராவ் என்கிற பார்ப் பனர் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பி, மாபெரும் ஆராய்ச்சி செய்து ஒரு பொய்யை எழுதியிருக்கிறார். அந்த மாபெரும் ஆராய்ச்சி பொய்யை பாராட்டி நம் 'அக் கினிக்குஞ்சு' கவிஞர் எழுதுகிறார்,

"இங்கிலாந்திலே ஜாதி வேற்றுமையானது பொன்னையும், மண்ணையும் பொறுத்து நிற்கி றது. இந்தியாவில் ஜாதி உயர்வானது குடும்பத்தின் பரம்பரையான ஞான விசேஷத்தையும், ஆசாரங் களையும் பொறுத்திருக்கிறதென்று" அவர் (ராமசந் திரராவ்) எழுதுகிறார். எனவே, நமது தேசத்து ஜாதி



தமிழ் நாட்டிலேயே முதல் முறையாக பெண் கல்வி, பெண் விடுதலை, ஜாதிய ஒற்றுமை பாடியது சுப்பிரமணிய பாரதி தான் என்று மார்க்சிய - பெரியாரிய - பாரதி கல்வியாளர்களும், இந்திய கம்யூ னிஸ்ட் கட்சிகளும் அடிக்கடி மேடைதோறும் 'ஒலி' பரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவர் முற்போக்கு முலாம் பூசப்பட்ட 'ஆரிய சமாஜ்' சிந்தனையாளர் என்பதே உண்மை.

வேற்றுமைகள் மிகுந்த தீங்குடையனவாயிருந்த போதிலும், அவை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற தேசத்து முறைமைகளைப் போல அத் தனை தீங்குடையன அல்லவென்றும், நம்மவரை அன்னியர்கள் கேலி செய்வது மயில் இறகில் விழுந்திருக்கும் பச்சையைப் பார்த்து காகம் கேலி செய்வதற்கு நிகரானதென்று தோன்றுகிறது. ஜாதி வேற்றுமைகளின் நிலைமைகளைப் பற்றி நமது சொந்த அபிப்பிராயத்தை தெரிவிப்பது இப்போது அவசியமில்லை. எனினும், ஜாதி வேற்றுமையா னது ஸனாதன தர்மத்தில் சம்பந்தப்பட்டதில்லை யென்றும் அது சில சவுகரியங்களை உத்தேசித்து மனிதர்களால் செய்து கொள்ளப்பட்ட கட்டுப்பாடே யாகுமென்றும் சுவாமி அபேதானந்தர் அபிப்பிரா யப்படுதல் கவனிக்கத் தக்கது.

*(1906 ஆண்டு, 'இந்தியா' பத்திரிகை யில் பாரதி எழுதிய கட்டுரைகளில் இருந்து தொகுக்கப்பட்டது. 1921வரை இந்த கருத் திலிருந்து அவர் மாறுபடவில்லை. வெளி யீடு: 'நியூ செஞ்சுரி புக் அவுஸ்')*

பாரதியின் இந்த அவஸ்தைகளுக் கும், ஆவேசத்திற்கும் காரணம், உலகின் தலைசிறந்த, ஈடு இணையற்ற ஒரே தத்து வம் வேதங்களே என்று அவர் நம்பியது.

'வேதங்கள் சொன்னபடிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்றே'

என்று அழுத்தமாக வேத ஆணி அடிப்பதும்,

பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யே தொரு நூல் இதுபோலே'

என்று சவால் விடுவதும்,

பாரத மாதாவிற்கு திருபள்ளி எழுச்சிப் பாடும் போதுகூட,

தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்திரு நாமம் ஓதி நிற்கின்றார்'

என்று உருகுவதும்,

வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பாளோ பாரததேவி!

மாராட்டிய சிவாஜியின் குரல் வளையாய் கூக்குரலிடும்,

'வேத வுப நிடத மெய்நூல்க ளெல்லாம் போய்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே'

என்று புலம்பலுமாய் இருந்த வேத வெறிபிடித்த சுப்பிரமணிய பாரதியைப் போன்ற ஆரிய சமாஜ்க ளைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார்,

"ஆரிய சமாஜிகள் எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் மற்றொருவகை இந்துப் பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் வேதங் களைத் தவிர வேறு எதையும் நம்பாதவர்கள். வேதங்களில் இல்லாத எதையும் புறக்கணிட் பவர்கள் என்கிற வகையில் இவர்கள் வைதீக களிடமிருந்து வேறுபடுகின்றனர். வேதங் களுக்குத் திரும்ப வேண்டும் என்பதே இவ களது கோட்பாடு.

வேதங்கள் நிலைபேறுடையவை, சா வதமானவை, ஆரம்பமோ அந்தமோ இல்லாதவை பிழைபாடில்லாதவை. இதே போன்று இந்த வேத களின் அடிப்படையில் அமைந்த இந்து சமூ அமைப்புகளும் நிலைபேறுடையவை, ஆரம்பமே அந்தமோ இல்லாதவை, பிழையாதவை என் நச்சுப்பிரச்சாரம் செய்து, இந்து சமுதாயத்தை ஒ தேக்கநிலை சமுதாயமாக ஆக்கும் மிகப் பெரு தீங்கை ஆரிய சமாஜிகள் இழைத்துள்ளனர்.

இத்தகைய ஒரு பொய்யான நம்பிக்கையை பரப்புவதன் மூலம் ஒரு சமுதாயத்திற்குச் செய்ய மிக மோசமான தீமை வேறு எதுவும் இருச் முடியாது. ஆரிய சமாஜிகளின் இந்த சித்தாந்த முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட்டாலொழி இந்து சமுதாயம் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள அவசியத்தை ஏற்றுக்கொள்ளாது என்று நா திடமாக நம்புகிறேன்."

டாக்டர் அம்பேத்கர் விவரிக்கு ஆரிய சமாஜின் தத்துவப் பின்ன தான் பாரதிக்கும்.

1875ஆம் ஆண்டு தயானந்த சரஸ் தியால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்யச



படிப்பகம்

ஜின் அடிப்படை நோக்கம், இந்து மதத்தை விட்டு விலகியவர்களை மீண்டும் இந்து மதத்திற்குள் இழுப்பதுதான். அதற்காக தீண்டாமை எதிர்ப்பு, பெண்கல்வி, விதவைகளின் மறுவாழ்வு போன்ற முற்போக்கு முலாம் பூசப்பட்ட இந்துத்துவம்தான் ஆர்யசமாஜ்.

'இந்தியத் தொலைக்காட்சிகளிலேயே முதல்முறையாக உங்கள் 'சன் டி.வி.'யில் புத்தம் புதிய திரைப்படம்' என்பது மாதிரி,

தமிழ் நாட்டிலேயே முதல் முறையாக பெண்கல்வி, பெண்விடுதலை, ஜாதிய ஒற்றுமை பாடியது சுப்பிரமணிய பாரதிதான் என்று மார்க்சிய - பெரியாரிய - பாரதி கல்வியாளர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளும் அடிக்கடி மேடைதோறும் 'ஒலி' பரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவர் முற்போக்கு முலாம் பூசப்பட்ட 'ஆரிய சமாஜ்' சிந்தனையாளர் என்பதே உண்மை. இதோ ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த லாலா லஜபத்ராய் பற்றி பாரதி எழுதுகிறார்,

"பாலியத்திலேயே ஆரிய சமாஜத்திலே சேர்ந்து கொண்ட இவர் மேற்படி சமாஜத்தின் அபிவிருத்தியின் பொருட்டாக எவ்வளவோ முயற்சி செய்திருக்கின்றார். லாஹோரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தயானந்த ஆங்கிலோ வைதீக காலேஜை உன்னத நிலைமைக்குக் கொண்டுவரும் பொருட்டு இவர் அளவற்ற பரிசிரமம் எடுத்திருக்கின்றார். பஞ்சகாலத்தில் இவர் இன்னும் சில ஆரிய சமாஜிகள்கூட சேர்ந்து கொண்டு பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு வருந்தும் ஜனங்களுக்கு உதவி செய்து அவர்களை கிறிஸ்தவ பாதிரிகளின் வலையினின்றும் காப்பாற்றினார். இக்காரணம் பற்றியே பாதிரிகள் இன்று வரையும்கூட லாலா லஜபத்ராயரிடத்திலும், ஆரிய சமாஜத்தாரிடத்திலும் கெட்ட எண்ணம் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர்................ ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகராகிய மஹரிஷி தயானந்த சரஸ்வதியார் சரித்திரமும், ஸ்ரீகிருஷ்ணபகவானது சரித்திரமும் இவரால் எழுதப்பட்டிருக்கின்றன." *(1907- மே மாத 'இந்தியா' பத்திரிகையில் எழுதியது)*


வேத வித்தகரான நம் மகாகவியை இப்படி வேண்டுமானால் சொல்லலாம்,

'பெண் கல்வி, ஜாதிய ஒற்றுமை, பெண் விடுதலை' கருத்துகளை தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக - இந்துத்துவா பின்னணியில் எழுதிய புதுமைக் கவிஞன்.

அதாவது, 'வெளக்குமாத்துக்கு பட்டுக்குஞ்சம்' கட்டிய மூத்த கவி. ●

- பாரதி பார்வை தொடரும்

# மானத் தமிழனின் மாதிரி வடிவம்



**1879.09.17 பெரியார் பிறந்த நாள்**

**❝ ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் — மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.**

**அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.**

**இதைத் தவிர, வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் — நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன். ❞**

***— தந்தை பெரியார்***

www.padippakam.com



# நிழலுக்குத் தெரியாத நிஜம்!

■ அ. இருதயராஜ்

கர்நாடகத் திரையுலகின் 'எம்.ஜி.ஆர்', 'இதயதெய்வம்' என்றெல்லாம் வர்ணிக்கப்படும் நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டவுடன் - பெங்களூர் நகரமே ரசிகர்களின் ஆர்ப்பாட்டத்தால் வெறிச்சோடிக்கிடந்தது; பேருந்துகள் ஓடவில்லை. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. ராஜ்குமார் ஒரு தனிமனிதர் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருந்திருந்தால், இவ்வளவு கூத்துகள் அரங்கேறியிருக்காது. அந்தத் தனிமனிதருக்கு 'திரைப்பட முகம்' ஒன்று இருப்பதால்தான் - இத்தனை ஆர்ப்பாட்டங்களும், கலவரங்களும்.





ராஜ்குமாரின் 'திரைமுகம்'தான் மக்கள் வன்முறையில் இறங்குமளவுக்கு அவர்களிடையே பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜ்குமார் என்ற நடிகர் கடத்தப்பட்ட சம்பவம், அதன் அடிப்படையில் ஏற்பட்ட கலவரம், வழிபாடு, தொடர் உண்ணாவிரதம், தொடர்பு சாதனங்களுக்கு ஏற்பட்ட பரபரப்பு எல்லாமே - சமூக அக்கறையுள்ள மனிதர்களுக்கு, ஏராளமான செய்திகளை விளக்கிச் சொல்லுகின்றன.

கடத்தப்பட்ட ராஜ்குமார், ஒரு பிரபலமான நடிகர். அவரைக் கடத்திய வீரப்பன் ஒரு கொள்ளைக்காரன். திரையில் தோன்றுவதன் மூலம் மக்களிடையே பிரபலமான ராஜ்குமார், மக்களின் நலனுக்காகவோ, மனித உரிமைப் பிரச்சனைக்காகவோ அரும்பாடுபட்டவர் அல்ல. திரைப்படம் என்ற ஊடகத்தின் பலம் இவருடைய முகத்திற்கு புகழை அதிகம் கொடுத்திருக்கின்றது என்பதே உண்மை.

திரைப்பட ஊடகத்தின் பலத்தை அறியாத மக்கள், படம் பார்க்கும்போது ராஜ்குமாரோடு தங்களையும் அய்க்கியப்படுத்திக் கொள்கிறார்கள். தங்களையே அவரில் இழந்துவிடுகின்றனர். இந்த விபத்து, திரையரங்கிற்குள் அமைதியாக நடைபெறுகிறது. இந்த அமைதியான விபத்தின் வெளிப்பாடே - ராஜ்குமார் கடத்தப்பட்டவுடன் ஏற்பட்ட வன்முறை மற்றும் கலவரங்கள்.

கொலை, கொள்ளைக் கும்பலின் தலைவன் வீரப்பன் எப்படி திடீரென்று தீவிரவாதியாகவும், தமிழ்த் தேசப்பற்றுள்ளவனாகவும் மாறினான் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. தீவிரவாதி மற்றும் தமிழ்த் தேசியவாதி போன்ற சொற்களுக்கு அர்த்தம் விளங்காமலேயே போயிற்று என்று நினைக்கத் தோன்றுகிறது. மக்களை முழுமையாக நேசித்து, மக்களோடு வாழ்ந்து, சமூகத்தில் புரையோடிப்போயிருக்கின்ற அழுக்குகளை வேரோடு அறுத்து எறிய வீரமுடன் புறப்பட்டவன்தான் தீவிரவாதி என்று பெயர் பெறுகிறான்.

இவர்களுடைய ஆயுதமெல்லாம் மக்களுக்கு எதிராக செயல்படுகிற அதிகார வர்க்கத்தையே குறிவைக்கும். எடுத்த குறிக்கோளில் ஒருபோதும் தளர்ச்சியடையாதவர்கள்தான் - உண்மையான தீவிரவாதிகள். வீரப்பன் ஒரு தீவிரவாதி என்று காட்டப்படும்போது, உண்மையான தீவிரவாதிகள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள 6 கோடி மக்களின் உரிமைக்குரலாக, தமிழினத் தலைவராக திடீரென்று வீரப்பன் உருமாற்றப்பட்டுள்ளார். ராஜ்குமார் என்ற பழைய நடிகருக்கு ஏற்பட்டுள்ள சங்கடம், கர்நாடக மாநிலத்தையே கண்ணீர் சிந்த வைத்துள்ள காட்சிகளைப் பார்க்கும்போது சிரிப்புதான் வருகிறது.

இரண்டு தனி நபர்களால், இரண்டு மாநிலங்கள் வாய்பொத்தி நிற்கவேண்டிய நிர்பந்தம். இதில் யார் கதாநாயகன்? யார் வில்லன்? என்ற கேள்விக்கே இடமில்லை. இருவருமே கதாநாயகர்களுமல்ல, வில்லன்களுமல்ல. கர்நாடக மாநிலத்தின் கலாச்சாரத்தூணாக - பிம்பமாக ராஜ்குமாரை சித்தரிக்கும் திரைப்படத் துறைதான் கதாநாயகன். இந்தக் கலாச்சாரத் தூணை தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆட்டமாடும் அப்பாவி ரசிகர்கள்தான் வில்லன்கள்.

கொள்ளைக்காரக் கும்பலின் தலைவனாகச் செயல்படத் துவங்கிய நாளிலிருந்து இன்றுவரை - வீரப்பனோடு மறைமுகமாகத் தொடர்பு வைத்துள்ள அவனை வளரவிட்ட அரசியல்வாதிகள்தான் உண்மையான கதாநாயகர்கள். கடத்தல் நாடகத்தில் அரசுத்தூதுவராக காட்டிற்குள்ளே சென்றுவரும் 'நக்கீரன்' கோபால்தான் - இன்றைக்கு வில்லன். ஒரு மாநில அரசே நேரடியாகச் செய்ய முடியாத வேலையை 'நக்கீரன்' கோபால் செய்வது வில்லன் என்



படிப்பகம்

> "ராஜ்குமார் திரைப்படம் மூலம் பாமர மக்களை பைத்தியக்காரர்களாக மாற்றியிருக்கிறார். வீரப்பனோ தன்னுடைய கடத்தல் நாடகத்தின் மூலம் மக்களை பரபரப்புக்குள்ளாக்கி - ஏமாளிகளாக மாற்றியிருக்கிறார். இருவரும் வெவ்வேறு மாநிலத்தவர் என்பதால், இரு மாநில மக்களும் மோதிக் கொள்வது எவ்விதத்திலும் சரியானதல்ல."

நிலையில் இருப்பதால் மட்டுமே. இதனால் இவர் நடத்துகின்ற பத்திரிகையான 'நக்கீரன்' என்ற வார இதழுக்கு ஏகபோகமான இலவச விளம்பரம் கிடைக்கிறது.

'சுதந்திர' நாளன்று குடியரசுத் தலைவர், நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் நறுக்கென்று கூர்மையாக ஒருசில கருத்துகளை எடுத்துவைத்திருக்கிறார்: ''கொலை கொள்ளை செய்த குற்றவாளிகளோடு அரசியல்வாதிகளும், முக்கிய பிரமுகர்களும் கள்ளக் கூட்டு வைத்திருப்பது கவலையைத் தருகின்றது'' என்று அவர் கூறியுள்ளார். வீரப்பனின் கை இவ்வளவுதூரம் ஓங்கியிருப்பதற்குக் காரணமே அரசியல்வாதிகள்தான். அரசுக்கு ஏற்படும் தலைகுனிவை முடிந்தவரை தவிர்ப்பதற்காகவே - இருமாநில அரசுகளும் ராஜ்குமார் கடத்தல் விளையாட்டில் காயை மெல்ல மெல்ல நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

ராஜ்குமார் கடத்தப்பட்ட பிறகு கர்நாடகத்திலும் மற்ற இடங்களிலும் ரசிகர்கள் நடந்துகொண்ட விதம் - அவர்களிடையே உள்ள நாயக வழிபாட்டின் (Hero worship) உச்ச நிலை, மந்தை ஆட்டுச் சிந்தனை' ஆகியவற்றையே வெளிப்படுத்துகின்றன. மக்களிடத்திலுள்ள கிளர்ச்சி செய்யும் போக்கு, வீதிகளுக்கு வந்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்ற போராட்டச் சிந்தனை, உணர்ச்சி பொங்க கோபத்தை வெளிப்படுத்த வேண்டுமென்ற செயல்பாடுகள், நெஞ்சுக்கு நெருக்கமான நடிகர் கடத்தப்பட்டார் என்று நினைக்கும்போது ட்டுமே! இதுவே, உண்மையான மக்கள் ரச்சனைக்காக ரசிகர்களின் கிளர்ச்சி, பாராட்டம், உண்ணாவிரதம் போன்வையெல்லாம் வெளிப்பட்டால் - வ்வளவு அருமையாக இருக்கும். அரங்கத்தின் ஊழல்களைக் கண்டித்தும், திக்கொடுமைகளை எதிர்த்தும் சயல்பட்டால் எவ்வளவு அழகாக ருக்கும்.

ராஜ்குமார் கடத்தப்பட்டதிலிருந்து மைசூரில் நிரந்தரமாக ஒரு பந்தல் போடப்பட்டுள்ளது. இங்கு யார் வேண்டுமானாலும் வந்து பட்டினி இருக்கலாம். பெங்களூரில் பல இளம் ரசிகர்கள் வீதிகளில் வெறிபிடித்த மிருகங்கள்போல கர்ஜிக்கும் கோபத்தோடு அலைகின்றார்கள். பல கோயில்களில் வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. கன்னட நடிகர், நடிகைகள் 'பகீரத பிரயத்தனம்' செய்துவருகிறார்கள். தனி மனித துதிபாடுதல் என்பது உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

ராஜ்குமார் என்ற நடிகனை இந்த அளவுக்கு நேசிக்கும் பாமர ரசிகர்கள், தங்களையே நேசிக்க மறந்தவர்கள். நடிகர் வீட்டில் நாய்குட்டிபோடும் 'நல்ல செய்தி' முதல், அவர் கடத்தப்படும் நிகழ்வுவரை மகிழ்ச்சியும், துக்கமும் ரசிகர்களை மாறி மாறி தொற்றிக்கொள்கிறது. ராஜ்குமார் விசயத்தில் இது ஒரு கணம் கூடியிருக்கின்றது.

ஏனென்றால், ராஜ்குமார், தமிழர்களுக்கு எதிரான கன்னட இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர். அவ்வப்போது கன்னட இயக்கங்களுக்கு நான் ''ஒரு தேச பக்தன்'' என்ற முழக்கத்தோடு பிரச்சாரம் செய்பவர். இதனால்தான் ராஜ்குமார் ஒரு நடிகன் என்பதையும் கடந்து, கன்னட இனம் மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் 'கலங்கரை விளக்க'மாக ரசிகர்களின் இதயத்திலே திகழ்ந்திருக்கிறார்.

வீரப்பன் ஒரு தமிழன் என்பதால் தமிழ் நாட்டுக்காரர்கள் பெருமைப் பட்டுக்கொள்ள முடியுமா? பிணைக் கைதியாகவுள்ள ராஜ்குமார் ஒரு கன்னடர் என்பதால், கர்நாடக மாநில மக்கள் சிறுமைப்படத்தான் வேண்டுமா? இந்த இருவரும் - இரண்டு தனித்தன்மையில் மக்களிடையே பிரபலமானவர்கள். திரைப்படம் ராஜ்குமாருக்கு பின்புலம். காடும், கடத்தலும் வீரப்பனுக்கு பின்புலம்.

வீரப்பன் காட்டிற்குள் இருந்து கொண்டு சாகசம் செய்வதால், தமிழனுடைய வாழ்வு துளிகூட நிமிரப் போவதில்லை. ஏனென்றால் வீரப்பன் மக்களின் பொது நலன், சமூக அக்கறை என்பதிலிருந்து வெகுதூரத்திலிருக்கிறான். ராஜ்குமார் ஒருவேளை கடத்தப்படவில்லை என்றால், ஏழை கன்னட ரசிகர்களின் வீட்டில் அடுப்பெறியாத நிலை மாறப்போவதுமில்லை. காரணம் அவர்களுடைய ரசிகர்கள் எப்படிப்பட்ட பொருளாதார கஷ்டப்படுகிறார்கள் என்பது, அவருக்குத் தெரிய ஏற்றதொரு வாய்ப்பில்லை. ராஜ்குமார் திரையில் தோன்றும் 'நிழல்'. வீரப்பன் காட்டிற்குள்ளே சுற்றித்திரியும் 'நிழல்'. இந்த இரண்டு நிழல்களுக்கும் பின்னால் அல்லல்படும் 'நிஜம்' - அப்பாவி மக்கள் மட்டுமே. ●


**பகவன் புத்தா சமூக - கல்வி அறநிலை**

**முதலாண்டு மலர் வெளியீடை முன்னிட்டு கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

- எது விடுதலை? யாருக்கு விடுதலை? எவரிடமிருந்து விடுதலை?
- அம்பேத்கர் பார்வையில் அரசியலும் - மதமும் வெவ்வேறானதா?
- அம்பேத்கர் - இயக்கங்கள், கட்சிகள் செய்தவை, செய்யத்தவறியவை.
- பவுத்தத்தின் பொருளாதார - அரசியல் கொள்கைகள் என்ன?
- பவுத்தத்தின் யுத்த - தந்திர - போர்முறை

சிறந்த கட்டுரைகளுக்கு மலர் வெளியீட்டு விழா அன்று பரிசளிக்கப்படும்

அனைத்துக் கட்டுரைகளையும் தட்டச்சு செய்து 5 பக்கங்களுக்கு மிகாமல் புகைப்படத்துடன் அனுப்ப வேண்டும்.

கடைசிநாள் : 20.9.2000

**மலர் வெளியீட்டுக் குழு**
**பகவன் புத்தா சமூக - கல்வி அறநிலை**
**எண். 10/176, சத்திய மூர்த்தி நகர்**
**வியாசர்பாடி, சென்னை - 600 039**
**☎ 044 - 5516581, 5516483**

www.padippakam.com

With Best Compliments from



Kavitha Art Printers

80/1, Kuttiyappan Street, Kilpauk
Chennai - 600 010

படிப்பகம்

www.padippakam.com



■ எஸ்.வி.ராஜதுரை

# தலித்தியமும் உலக முதலாளியமும்

10

## வேலைவாய்ப்புகளை மறுப்பதற்கான எளிய வழியே புதிய பொருளாதாரக் கொள்கை

இந்திய அரசாங்கம் 1980களிலிருந்து பின்பற்றி வருகின்ற, இன்றைய பா.ஜ.க. கூட்டணி அரசாங்கத்தால் தீவிரமாக்கப்பட்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கை, உலகமயமாதல் என்பன, இந்திய உழைக்கும் மக்களில் மிகவும் அடித்தட்டு நிலையிலுள்ள - தலித் மக்களின் வாழ்வை மேலும் சீரழிக்கும்.

உலகம் முழுவதிலுமுள்ள நாடுகள், பொருளாதார ரீதியாக ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலை அதிகரித்து வருவதுதான் 'உலகமயமாதல்' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு நாடுகள் ஒன்றையொன்று பொருளாதார ரீதியாகச் சார்ந்திருத்தல், பிணைக்கப்படுதல், ஐக்கியப்படுதல் என்பன அப்படியொன்றும் புதிய நிகழ்வுப் போக்குகள் அல்ல என்றும் 19ஆம் நூற்றாண்டில் அய்ரோப்பிய முதலாளித்துவம் வளர்ச்சி பெற்று, காலனியாதிக்கம் தோன்றியது முதல் முதலாம் உலகப்போர் தொடங்கிய நாள் வரையிலான கால கட்டத்திலேயே - உலக நாடுகளிடையே, பொருளாதாரப் பிணைப்புகள் உருவாகி விட்டன என்றும் பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் காலகட்டத்தில், நாடுகளுக்கிடையிலான பொருளாதாரப் பரிமாற்றங்களுக்கான தடைகள் பெரும்பாலானவை நீக்கப்பட்டன; நாட்டின் எல்லைகளைக் கடந்து பண்டங்களும் மூலதனமும் பயணம் செய்தன. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பெரும் எண்ணிக்கையில் மக்கள் புலம் பெயர்ந்து சென்றனர்.

எனினும், கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக, அய்ந்து முக்கிய வளர்ச்சிப் போக்குகள் காணப்படுகின்றன.

1. சர்வதேச நிதி (பண) பட்டுவாடாக்களில் மிகத் துரித வளர்ச்சி.

2. தொழில், வர்த்தகம் ஆகியனவற்றில் - குறிப்பாக உள்நாட்டு மூலதன நிறுவனங்களின் தொழில், வர்த்தகம் ஆகியனவற்றில் மிக விரைவான வளர்ச்சி.

3. நேரடியான அன்னிய பன்னாட்டு மூலதன முதலீட்டில் பெரும் பாய்ச்சல்.

4. பெரும் உலகச் சந்தைகளின் தோற்றம்.

5. உலகமயமாக்கப்பட்டுள்ள தகவல் தொடர்பு, போக்குவரத்து முறைகள் மூலமாக, தொழில்நுட்பங்கள் பரவலாக்கப்படுதல்.

இன்று உற்பத்தி மட்டுமல்ல, நிதியுமே உலகமயமாக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில், உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தை தேக்கமுறவும் உற்பத்திச் செலவு அதிகரிக்கவும் நேரிடும் போது, பன்னாட்டு மூலதன நிறுவனங்கள் வளர்முக நாடுகளில் இந்தப் பொருட்களின் உற்பத்தியைத் தொடங்குகின்றன. இந்தப் பொருட்களுக்கும் தொலைக்காட்சிக் கேளிக்கைகள், வங்கிகள், காப்பீட்டு சேவைகள் முதலியனவற்றுக்கும் வளர்முக நாடுகளில் உள்நாட்டுச் சந்தை உள்ளது.

இங்கு தொழிலாளர்களின் ஊதிய விகிதம் குறைவாக இருப்பதாலும், மூலப் பொருட்கள், அகக்கட்டுமானங்கள் முதலியன மலிவு விலையில் கிடைப்பதாலும் உற்பத்திச் செலவு குறைவாக உள்ளது. ஒரு நாட்டில் பிரச்சனைகள் ஏற்பட்டால், உடனடியாக உற்பத்தியைத் தனக்கு வசதியான மற்றொரு நாட்டில் உடனடியாகத் தொடங்கக்கூடிய வாய்ப்பு பன்னாட்டு மூலதன நிறுவனங்களுக்கு உண்டு. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்

> ●● புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, சாதாரண மருந்துகளின் விலைகள் கூட எட்டிப்பிடிக்க முடியாத உயரத்துக்குச் சென்று விட்டன. தனியார் மருத்துவ மனைகள்தான் ஊக்குவிக்கப்படுகின்றன. பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிகோலுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சிகள், மாற்றங்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றுக்கான செலவுகள் குறைந்துள்ளமை ஆகியவை நினைத்த இடத்திற்குத் தொழிற்சாலைகளைக் கொண்டு செல்லும் ஆற்றலை பன்னாட்டு மூலதன நிறுவனங்களுக்குத் தந்துள்ளன.

கனடா, வட அமெரிக்கா, மெக்சிக்கோ போன்ற நாடுகள் இணைந்துள்ள நாஃப்டா, அய்ரோப்பிய யூனியன் போன்ற பிராந்திய அமைப்புகள் தோன்றி, மூலதனப் புழக்கமும் வர்த்தகமும் அந்தந்த அமைப்புகளிலுள்ள உறுப்பு நாடுகளுக்குள் மட்டுமே நிகழ்கின்றவையாக வரையறுக்கப்படுவதும் நிகழத்தான் செய்கிறது. எனினும், உலகச் சந்தையில் போட்டிப் போடுவதற்கான அளவுகோல்கள், நியதிகள், வர்த்தக விதிகள், சுங்கவரி அளவுகள் ஆகியன உலகளாவியவையாக உள்ளன.

●●

**தலித் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்புகளை மறுப்பதற்கான எளிதான வழி தான் – புதிய பொருளாதாரக் கொள்கை; பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கி விட்டால் 'இட ஒதுக்கீட்டுத் தொல்லை' ஒழியுமல்லவா?**

●●

உலகச் சந்தைகளில் மூலதனம் திரட்டப்படுகிறது; தொழில்நுட்பம் உலகத் தரம் வாய்ந்ததாக உள்ளது. தகவல் தொடர்பு முறைகள் உலகளாவியவை. உலக வர்த்தக நிறுவனம் (WTO), உலக நாடுகள் அனைத்திற்குமான வர்த்தக நியதிகளைக் கொண்டு வருகிறது. அதில் உறுப்பியம் வகித்தால்தான் உலகச் சந்தையில் நுழைய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இந்த நிறுவனத்தில் வெகுமக்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ பிரதிநிதித்துவம் இல்லை. வர்த்தகர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும்தான் பிரதிநிதித்துவம் உண்டு.

எனவே, அவர்களது நலன்களுக்காகவே ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளும், தொழில்கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன; வேளாண்மை, தொழில், வர்த்தகம், வங்கிகள், நிதி நிறுவனங்கள், தகவல் தொடர்பு, போக்குவரத்து, காப்பீடு, மருத்துவம் போன்ற சேவைத் துறைகள் முதலியவற்றில் அரசுக் கட்டுப்பாடுகள் கூடாது என்பதும், எந்த நாட்டு மூலதனமும் எந்த ஒரு துறையிலும் தடையின்றி நுழையலாம் என்பதும் - இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நியதியாகிவிட்டது. தொழிலுற்பத்தித் திறமை, வர்த்தக மேம்பாடு என்பன அந்தந்தத்துறையில் முதலீடு செய்துள்ளவர்களின் ஆதாயத்தோடு தொடர்புடைய விஷயங்களாகக் கருதப்படுகின்றனவேயன்றி, வெகுமக்களின் நலன்கள் சம்பந்தப்பட்டவையாக அல்ல.

அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் திறமையாக இயங்குவதில்லை என்று காரணம் காட்டி, அவற்றை முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்துவிடலாம். வெளிநாடுகளிலிருந்து தேயிலை, மீன் வகைகள், சர்க்கரை முதலியனவற்றை மலிவான விலையில் இறக்குமதி செய்யமுடியும் என்றால், உள்நாட்டில் உற்பத்தியாகும் இதே பொருட்களை வர்த்தக நிறுவனங்கள் புறக்கணித்து விடலாம். இந்த நாட்டின் நீர்நிலைகள் கூட, உலகமூலதனத்திடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தலித் மக்களுக்கான தனிக் குடிநீர் குழாய்கள்கூட அடைக்கப்பட்டுவிடும். இன்று பொருளுற்பத்தியை விட நிதி தான் மிகவேகமாக உலகமயமாக்கப்பட்டுள்ளது. பங்குகளை வாங்குதல், விற்றல், ஊகவாணியம், வர்த்தகம் ஆகியன மின்னணுச் சாதனங்கள் மூலமாக நடைபெறுகின்றன. இங்கு ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைவதற்கான வாய்ப்புகளே இல்லை.

தலித் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புகளை மறுப்பதற்கான எளிதான வழி தான் புதிய பொருளாதாரக் கொள்கை. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கி விட்டால், 'இட ஒதுக்கீட்டுத் தொல்லை' ஒழியுமல்லவா? அதுமட்டுமல்ல, மேலே குறிப்பிட்ட மத்திய அரசாங்கத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்படும் நிதிகள், தாராளமயமாதல் கட்டத்தில் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்ததைக் கருத்தில் கொண்டால், அவை எதிர்வரும் காலத்தில் வெகுவாகக் குறைக்கப்படுவதற்கோ அல்லது முற்றிலுமாக நிறுத்தப்படுவதற்கோ வாய்ப்புண்டு.

மேலும், அத்தகைய நிதி ஒதுக்கீடுகள் மூலம் ஓரளவு பொருளாதார நன்மைகளைப் பெற்ற தலித் மக்களின் சிறு தொழில்கள், வேளாண்மை உற்பத்தி முதலியன புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாகத் 'திறந்துவிடப்பட்ட' இந்திய, உலகச் சந்தையில் தாக்குப் பிடித்து நிற்க முடியாமல் போய்விடும். ஏழை மக்களுக்கு - குறிப்பாக தலித் மக்களுக்கு - ஓரளவு பயனளித்து வந்த பொது விநியோக முறையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் (ரேஷன் அரிசி, கோதுமை, எண்ணெய், மண்ணெண்ணெய் விலை உயர்வு; வழங்கப்பட்டு வந்த ரேஷன் பொருட்களின் அளவைக் குறைத்தல்) பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

தலித் மக்கள் அவர்களுக்கே உரிய, தனிச்சிறப்பான பிரச்சனைகளை சந்திப்பதுடன் விஷயம் முற்றுப் பெறுதில்லை. இந்நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் என்ற வகையில் நாட்டு மக்களை ஒட்டு மொத்தமாகப் பாதிக்கும் பிரச்சனைகளையும் அவர்கள் சந்திக்க வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, சாதாரண மருந்துகளின் விலைகள் கூட எட்டிப்பிடிக்க முடியாத உயரத்துக்குச் சென்று விட்டன. அரசாங்க மருத்துவமனைகளில் கிடைக்கும் மருந்துகளின் அளவும் தரமும் குறைந்து விட்டது. தனியார் மருத்துவ மனைகள்தான் ஊக்குவிக்கப்படுகின்றன. பெட்ரோல் டீசல் விலை உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு வழிகோலுகிறது. இவையெல்லாம் ஒ சில எடுத்துக்காட்டுகள்தாம்.

இத்தகைய சூழலைக் கருத்தில் கொ ளும்போது, சுதந்திரத்திற்குப் பிந்திய இன்னும் சரியாகச் சொல்லப்போனால் அம்பேத்கருக்குப் பிந்திய தலித் இய கங்கள் எத்தகைய திசையில் சென்றது? தலி மக்கள், அரசியலில் எத்தகைய உத்திகளை வகுக்க வேண்டும்? எத்தகையப் போரா டங்களை அவர்கள் முன்னெடுக்க வே டும்? என்ற கேள்விகள் எழுகின்றன.

- தொடரு



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைக் களம்


**தலித் மக்களின் அரசியல் உரிமைக்கான போர்க்களத்தில் சூன் 30, 1997 அன்று மேலவளவில் மாவீரன் முருகேசன் உட்பட ஏழு பேர் வீர மரணத்தைத் தழுவினர்.**

●●

**இவர்களின் நினைவாக, 'விடுதலைக் களம்' எனப் பெயரிட்ட நினைவிடத்தை விடுதலைச் சிறுத்தைகள் உருவாக்கியுள்ளனர்.**

●●

**இந்நினைவிடத் திறப்பு விழா மேலவளவில் ஆகஸ்டு 30, 2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதை 'விடுதலைச் சிறுத்தைகளின்' மாநில அமைப்பாளர் தோழர். திருமாவளவன் திறந்து வைத்தார்.**












## நிறப்பிரிகை - 9

### வெளிவந்து விட்டது

- 'தமிழ் இனி 2000' நாங்கள் ஏன் புறக்கணிக்கிறோம்?
- காஞ்சா அய்லையா நேர்காணல்
- சாதி மோதல்கள் கூட்டு விவாதம்
- தேசிய பிரச்சனை தொடர்பான கட்டுரைகள்
- 'கல்கி'யின் இந்துத்துவம் மற்றும் பல
- பக்கம் : 50 ● விலை ரூ. 20/-

தொடர்பு முகவரி: நிறப்பிரிகை வெளியீடுகள்
47, ருக்மணி நகர், செட்டி மண்டபம்,
கும்பகோணம் - 612 001



தலித் முரசு
கட்டணப் படிவம்

**தலித் முரசு**

சமூக நீதித் திங்கள் இதழ்

நான், தலித் முரசு இதழின் ஆண்டு / வாழ்நாள் கட்டணம் செலுத்த விரும்புகிறேன்.

- ஆண்டுக் கட்டணம்: ரூ. 100
- வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000

பெயர்.............................................

முகவரி .............................................

.............................................

.............................................




படிப்பகம்

www.padippakam.com

# நில மீட்புப் போர்

## இயக்கம்

தலித் மக்களின் பஞ்சமி நிலங்களை அபகரித்த ஆதிக்க சாதியினரைக் கண்டித்து ஆகஸ்ட் 1 அன்று, வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் வழங்க ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் 1890ஆம் ஆண்டில் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழகத்தில் மட்டும் 10 லட்சம் ஏக்கர் டி.சி. நிலங்கள், பஞ்சமி நிலம் என்ற பெயரில் தலித் மக்களுக்கு



வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இத்தகைய நில ஒதுக்கீடுகள் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களை முதல் 10 ஆண்டுகளில் யாருக்கும் விற்கவோ, பரிசாகத் தரவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ கூடாது என சட்டம் கூறுகிறது. அவ்வாறு 10 ஆண்டுகளுக்குப்பின்னால் தலித் மக்களுக்கு மட்டும் விற்பனை செய்யலாம் என்ற சிறப்பு நிபந்தனையுடன் - இந்நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

இந்நிலையில், வாடிப்பட்டி வட்டத்தில் மேலச்சின்னனம்பட்டி, கள்ளிவேலிப்பட்டி, ராஜக்கால்பட்டி, கட்டக்குளம் கல்லணை, குட்டிமேய்க்கன் பட்டி, மேட்டு நீரேத்தான், குலசேகரன் கோட்டை, சேந்தமங்கலம் ஆகிய கிராமங்களில் பஞ்சமி நிலங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலங்கள் அனைத்தும் ஆதிக்க சாதியினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடந்துள்ள நிபந்தனைகளைக் கண்டித்து, ஆதிக்க சாதியினரிடமிருந்து நிலத்தினை 1995இல் அரசு கையகப்படுத்தியுள்ளது. இருப்பினும், இன்று வரை மேற்படி நிலங்கள் - ஆதிக்க சாதியினரின் கட்டுப்பாட்டில் இருப்பது வேடிக்கையாக உள்ளது.

இதைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 'பஞ்சமர் நிலமீட்பு கூட்டமைப்பின்' கூட்டுனர் இரும்பொறை சேதுராமன் தலைமை தாங்கினார். அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் மாநிலக் குழு உறுப்பினர் திரு. மு.சி. ஆறுமுகம் துவக்கி வைக்க, பஞ்சு என்ற வீரன் - 'விடுதலைச் சிறுத்தைகள்', மலைச்சாமி - 'அம்பேத்கர் மக்கள் இயக்கம்', சண்முகம் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.எல்), முருகன் - புதிய தமிழகம், பாண்டி - 'அருந்ததியர் பேரவை' கம்யூனிஸ்ட் கட்சி, தங்கராஜ் - 'புதிரை வண்ணார் பேரவை' இவர்களுடன் சமுதாயத் தலைவர் அய்யாசாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். தலித் விடுதலைக்கான செயல்பாட்டு கூட்டமைப்பின் மாநில அமைப்பாளர் திரு.ச. கருப்பையா, கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

***ஆர்ப்பாட்ட கோரிக்கைகள்:***

- வாடிப்பட்டி வட்டத்தில் கள்ளிவேலிப்பட்டி, மேலச்சின்னம்பட்டி, ராசாக்காள்பட்டி, 15பி மேட்டுப்பட்டி ஆகிய கிராமங்களில் அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை - மீண்டும் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சாதி இந்துக்களை 1989ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 3(1) (IV)இன் கீழ் கைது செய்ய வேண்டும்.
- வாடிப்பட்டி பகுதியில் அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தினை, நிலமற்ற தலித் மக்களுக்கு வழங்க மறுத்து வரும் வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகப் பணியாளர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
- வாடிப்பட்டி வட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் உள்ள பஞ்சமி நிலங்கள் குறித்த தகவல்களை வெளியிட வேண்டும்.
- வாடிப்பட்டி பகுதியில் அரசால் கையகப்படுத்தப்பட்ட பஞ்சமி நிலங்களை, உடனடியாக நிலமற்ற தலித் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.
- வாடிப்பட்டி அருகேயுள்ள கச்சைக்கட்டி பகுதியில் பூமிதான இயக்கம் சார்பாக, ஆயிரத்தி எழுநூறு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டும் - உரிய பட்டா இன்றுவரை வழங்கப்படவில்லை. எனவே, உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். ●

- நம் செய்தியாளர்

# இணைப்புப் பாலம்

தலித் முரசு' வாசகர் வட்டம் சார்பில் வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டில் 20.8.2000 அன்று, கருத்தரங்கம் நடைபெற்றது. முதல் அமர்வுக்கு முதுபெரும் தலைவர் சி.ஆர். ராமசாமி தலைமையேற்றார். திரு. முனிரத்தினம், திரு. சவுந்தரபாண்டியன், திரு.மா. இன்பகுமார், திரு. கம்பீரன் திரு. அழகிய பெரியவன், திரு. ராமபிரபு, திரு சாரோன் செந்தில் குமார், திரு. பொன்வள்ளுவன், திரு. வேதாசலம், திரு. பல்லவன் ஆகியோர் பேசினார்கள். தலித் முரசு குறித்துப் பல்வேறு கருத்துகளை பலரும் முன்வைத்தனர்.



திரு. சவுந்தரபாண்டியன் : 'தலித் தலைவர்களிடம் ஒற்றுமை வேண்டும். அதை தலித் முரசு வளர்த்தெடுக்க வேண்டும்' என்றா திரு. ராமபிரபு, நாளேடுகள், வார, மாத இதழ்களின் சாதிமனே பாவத்தை சாடினார். தலித் முரசு - தலித், பிற்படுத்தப்பட்டோரிச இணைப்புப் பாலமாகவே செயல்பட்டுவருகிறது என்றார். திரு அழகியபெரியவன்: 'தலித் மக்களுக்கென்ற பத்திரிகைகள் இல்லை. இன்று தலித் முரசு இருக்கிறது. வன்முறையைத் தூண்



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. இன்று தலித் முரசு இருக்கிறது. வன்முறையைத் தூண்டுவதற்கு பால் தாக்ரே போன்றோர் பத்திரிகையைப் பயன் படுத்தியதில் இருந்தே பத்திரிகைகளின் பலம் தெரிகிறது. தலித் முரசை நாம் சமத்துவத்துக்கும், விழிப்புணர்வுக்கும் தலித் விடுதலைக்கும் பயன்படுத்த வேண் டும்' என்றார்.

திரு. கம்பீரன், தலித் முரசு - கலாச்சார தளத்திலும் வேலை செய்ய வேண்டும். பசுவதைத் தடுப்புச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்றும், திரு. சாரோன் செந்தில் குமார், தான் பணியாற்றுகிற சென்னைத் தொலைக்காட்சியின் பார்ப்பனப் போக் குகளை அம்பலப்படுத்தினார். வளரும் கலைஞர்கள் பகுதியில் தலித் மக்களுக்கு வாய்ப்பு அளிக்காமை, செய்தி வாசிப்பு மற்றும் அறிவிப்பாளர்களில் தலித் - பிற்ப டுத்தப்பட்டோர் இல்லாதது போன்ற பல செய்திகளை அவர் சொன்னார்.

பிற்பகலில் 'ஒரு நதியின் மரணம்', 'ஒரு கண் ஒரு பார்வை', ஆகிய குறும் படங்கள் திரையிடப்பட்டன. இது குறித்து கலந்துரையாடலும் நடைபெற்றது. ●

## அறிவாயுதம்

**பேரறிஞர். அம்பேத்கரின் கருத்துக் கருவூலங்கள் அடங்கிய பதினாறு தொகுப்பு நூல்கள் ஆங் கிலத்தில், மகாராட்டிர அரசால் வெளியிடப்பட்டுள்ளன.**

**இந்திய சமூகத்தைப் பற்றி மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வும், சமூகக் கொடுமைகளை எதிர்க்கவும், சமத்துவ சமூகத்தை உருவாக்கவும், நாம் அனைவரும் அண்ணலின் நூல்களை முதலில் ஆழ்ந்து படிக்க வேண்டும். அம் பேத்கரின் நூல்களே சமூகப் போரா ளிகளின் அறிவாயுதமாகும்.**

**தற்பொழுது 'தலித் முரசு' அலுவலகத்தில் கீழ்க்கண்ட ஆங் கிலத் தொகுதிகள் உள்ளன: 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 16 குறைந்தளவு நூல்களே உள்ளன. நூல்கள் வேண்டுவோர் 'தலித் முரசு' அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அஞ்சலில் அனுப்ப இயலாது.** ●

# மாபெரும் சக்தியாக உருவெடுப்போம்



புதுவை தலித் சேனா மாநில மாநாட்டில் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது

தலித் சேனா எந்த ஒரு சாதிக்கா கவோ, ஒரு மதத்துக்காகவோ உரு வாக்கப்பட்ட இயக்கம் அல்ல. சமூ கத்தில் உள்ள வேற்றுமைகளைக் களைய உருவாக்கப்பட்ட இயக்கமாகும்'' என்று புதுவையில் நடைபெற்ற தலித் சேனா வின் முதல் மாநில மாநாட்டில் மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சரும் தலித் சேனாவின் தேசியத்தலைவருமான திரு. ராம்விலாஸ் பாஸ்வான் கூறினார்.

புதுவை மாநில தலித் சேனா முதல் மாநில மாநாடு, புதுவை - கம்பன் கலை அரங்கில் 11.8.2000 அன்று நடைபெற் றது. இம்மாநாட்டுக்கு புதுவை மாநிலத் தலைவர் திரு. கே. அன்பு தலைமை வகித் தார். தமிழ் நாடு தலித் சேனா தலைவர் திரு. பெ. சந்திரசேகன், தலித் சேனாவின் தேசிய பொதுச் செயலாளர் திரு. ஜெயகரன் ஜோசப், தமிழகப் பொதுச் செயலாளர் திரு. நம்பியார் ஆகியோர் பங்கேற்று உரை யாற்றினர்.

திரு. ராம்விலாஸ் பாஸ்வான் தமது உரையில், ''தலித் சேனா - தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்கள் அனைவருக்கும் உரிமை வேண்டும் எனப் போராடி வருகின்றது. நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சமுதா யக் கொடுமைகள் அளவுக்கு மீறி சென்ற தால் மதமாற்றங்கள் இந்தியாவில் நிகழ்ந்தன'' என்றார். ''இந்தியாவில் உள்ள 6லட்சம் கிராமங்களிலும் தலித் சேனாவின் கிளையை அமைத்தே தீர வேண்டும் என்ற உறுதியை எடுத்துள் ளோம். ஒரு கிளைக்கு 25 உறுப்பினர்கள் என்று வைத்துக் கொண்டாலும் - ஒன்ற ரை கோடி உறுப்பினர்கள் நம்மிடம் இருப் பார்கள். நாம் மறுக்க முடியாத சக்தியாக உருவெடுப்போம்'' என்றார்.

''நமது பலத்தை இன்னும் அதிகப் படுத்த வேண்டும்; அனைத்து ஊர்களிலும் நமது அமைப்பைத்துவக்கவேண்டும். தலித் சேனாவை மேலும் வலிமையாக்கினால், அரசியல் கட்சி அறிவிக்கப்படும். ஆனால், அந்த அரசியல் கட்சிக்கு இன்னும் பெயர் முடிவு செய்யப்படவில்லை. தலித் சேனா தொடர்ந்து தனது பணியை செய்யும். பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் காட்டிய பாதை யில் தொடர்ந்து மக்களுக்காகப் பாடுபட வேண்டும். அதுவே எனது விருப்பம்.'' என்றார். ●

## அனைத்து கிராமங்களுக்கும் தொலைபேசி

''தமிழகம், புதுவை, பஞ்சாப், கேரளா, அந்தமான், அரியானா உள்பட 6 மாநிலங் களில் விரைவில் அனைத்து கிராமங்களுக் கும் தொலைபேசி வசதி செய்து தரமுடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் தொலைபேசி வசதி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்பது தான் எங்கள் நோக்கம். அதனை நிறைவேற்றுவதற் காகப் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறோம். தமிழகத்தில் உள்ள 17,991 கிராமங்களிலும் புதுவையில் 166 கிராமங்களிலும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.''

''பஞ்சாப் தவிர அனைத்து மாநிலங்க ளிலும் கிராமங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுவிட்டது. மீதமுள்ள 11 மாநிலங்களில் உள்ள அனைத்து கிரா மங்களுக்கும் தொலைபேசி வசதி ஏற்படுத் தித்தர, ஏற்கனவே பணிகள் துவங்கப்பட்டு விட்டன'' என்று புதுவையில் மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் செய்தியாளர் களிடையே தெரிவித்தார். ●



படிப்பகம்

www.padippakam.com

# மடல்கள்

## இட ஒதுக்கீட்டின்படி நிரப்ப வேண்டும்

■ கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கடந்த 1912ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து இது நாள்வரை, தன்னகத்தே கொண்டுள்ள ஏறக்குறைய 500 பணியிடங்களில் ஒருவர் கூட தலித் இல்லை. தற்போதைய அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் அளித்த அனைத்து நிதி நிலை அறிக்கையினைத் தொடர்ந்து நடந்துள்ள கூட்டுறவு மானிய கோரிக்கைகள் அனைத்திலும், கூட்டுறவுத் துறையில் உள்ள அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் உள்ள காலி இடங்கள் உடனடியாக - இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்பப் படும் என்று உறுதி அளித்தும், இது நாள்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால், இந்த மாவட்டத்தில் கூட்டுறவு பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற சுமார் 1000 தலித் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமலும், வேறு வருமானத்திற்கு வழியின்றியும், பசிக்கும் பட்டினிக்கும் ஆளாகி உள்ளனர். அளவிற்கு அதிகமான வாய்ப்புகள் இருந்தும் - அது இவர்களுக்கு தற்போதைய புள்ளிவிவரப்படி 150 பணியிடங்கள் காலியாக உள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து அரசிடம் வலியுறுத்த தலித் இயக்கங்கள் முன்வர வேண்டும்.

டி. ரவிச்சந்திரன், தலைவர், கடலூர் மாவட்ட பட்டதாரிகள் கூட்டுறவு நலச் சங்கம், காட்டுமன்னார்கோயில்.

■ இன்றைக்கு ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதா கட்சி, இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் மீது இந்து மதத்தையும் 'இந்துத்துவ' கருத்துகளையும் திணித்துக் கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து, இம்மக்கள் பவுத்தத்தைத் தழுவும் வகையில் பவுத்தம் குறித்த சிந்தனைகளில் தலித் முரசு அக்கறை செலுத்த வேண்டும்.

எஸ். கணபதி, ஜி. சோமநாதன், எஸ். ராஜாமணி, சென்னை

■ காஷ்மீர் பற்றிய ரவிக்குமாரின் கட்டுரை, இப்பிரச்சினை மீதான புதிய பார்வையை அளித்தது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி தேசிய அளவில் ஒரு விவாதத்தைத் துவங்க உள்ளோம்.

என். நந்திவர்மன், பொதுச் செயலாளர், திராவிடப் பேரவை, புதுவை

■ தலித் முரசு இதழை ஆரூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாங்கிப் படித்தேன். ஒடுக்கப்பட்ட நம் மக்களின் உரிமைகளையும் தலித் மக்களின் மீதான வன்கொடுமைகளையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளீர்கள். உங்களின் பணி பாராட்டுக்குரியது.

வி. வேடியப்பன், செல்லம்பட்டி

■ ஆகஸ்ட் இதழில் வெளிவந்த தாமிரபரணி புகைப்படங்கள் மற்றும் 'தீர்வைத் தராத தீர்ப்பு' – கண்டதேவி நேரடித் தகவல்கள், மிகுந்த பாராட்டுக்குரியவை.

ஜெயராஜ், அய்யன் ரெட்டியபட்டி

■ மரண தண்டனைக்கு எதிராக தலித் முரசு தொடர்ந்து குரல் எழுப்பி வருவது ஆறுதலை அளிக்கிறது. தலித் முரசு மட்டுமே சமூகத்தில் நிலவும் அவலங்களுக்கு தீர்வு சொல்லியும் – அதைத் தடுப்பதற்கான முயற்சியையும் செய்கிறது. பாராட்டுகள்.

திலீபன், குடியாத்தம்

■ 1996ஆம் ஆண்டு தொடக்கக் கல்வி இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்தில் போதிய தாழ்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றோர் இல்லாத காரணத்தால், 1340 காலியிடங்களுக்கு தாழ்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களைக் கொண்டு பாடப்பிரிவு பாகுபாடு இன்றி பதிவு மூப்பு அடிப்படையில் நிரப்பினர்.

ஆனால், 1997 ஆம் ஆண்டு இதுபோல் நிரப்பாமல் மூன்று பாடப்பிரிவுக்கு மட்டும் அரசு ஆணை பிறப்பித்தது. தொடக்கக் கல்வி, இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர் போதிய நபர்கள் இல்லாமையால் வேலை வாய்ப்பகப் பட்டியலில் உள்ள பி.எட் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். இதை அரசு பரிசீலிக்குமா?

சா. ஜோதிமணி, தருமபுரி

■ ஆகஸ்டு இதழில் டீஸ்டா செடல்வாட் பேட்டி, மதவாதத்தைப் பல கோணங்களில் புரிந்து கொள்ளும் வகையில் பயனுள்ளதாக இருந்தது. தொடர்ந்து இது போன்ற பேட்டிகளை தலித் முரசில் எதிர்பார்க்கிறோம்.

முகிலன், ஆத்தூர்

## நூலகப் போக்கு மாற வேண்டும்

■ ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைத்த தலைவர்களின் வரலாறுகள், அவர்களின் கருத்துகள், சிந்தனைகள் மறைக்கப்பட்டுவருகின்றன. தமிழகம் முழுவதும் நூலகங்கள் இருக்கின்றன. சென்னையில் அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலகத்திற்கு அண்மையில் சென்றிருந்தபோது, புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையில் குறிப்பிட்ட ஒரு புத்தகத்தைத் தேடியபோது - மனம் மிகவும் வேதனைக்குள்ளானது.

ஏனென்றால், அங்குள்ள புத்தகங்களில் டாக்டர் அம்பேத்கரைப் பற்றி ஆறே புத்தகங்கள்தான் இருந்தன. அவை யாவும் அம்பேத்கரைப் பற்றி ஆய்வு செய்து எழுதப்பட்ட நூல்கள். அம்பேத்கர் எழுதிய நூல்கள் அல்ல. மேம்போக்கான பார்வை கொண்ட நூல்கள் அவை. அம்பேத்கரின் 24நூல் தொகுப்புகள் மத்திய அரசால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், இதுபோன்ற புத்தகங்களை வாங்கி நூலகங்களில் வைக்காமல், 'சிபாரிசு' மூலம் வரும் நூல்களையே பெரும்பாலும் நூலகங்களில் வாங்குகின்றனர். அறிவுக்குப் பயன்படாத ஆன்மீகப் புத்தகங்களும், இந்தியாவை, தமிழகத்தைக் கெடுத்த - கெடுத்துக் கொண்டிருக்கிற அரசியல்வாதிகளின் 'வாழ்க்கை' வரலாறுகளும், 'சிந்தனை'களும் - 'கருத்து'க்களும் அடங்கிய புத்தகக் குப்பைகளுமே நூலகங்களில் நிரம்பி வழிகின்றன.

இந்த நிலை மாற வேண்டும். அறிவார்ந்த - நல்ல, தெளிந்த சிந்தனையாளர்களின் புத்தகங்களை நூலகங்களில் வைக்க வேண்டும். இல்லையென்றால், நூலகங்களுக்கும், திரை அரங்குகளுக்கும் வேறுபாடில்லாமல் போய்விடும்.

- எ.த. இளங்கோ, வியாசர்பாடி



படிப்பகம்

www.padippakam.com



# விபச்சாரம் – பெண் அடிமைக்கான குறியீடு

விபச்சாரம் என்பது, பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தையே. ஏனெனில், விபச்சார தோஷம் என்பதும், விபச்சாரம் செய்வதால் ஒழுக்கக் குறைவு என்பதும் - வழக்கத்தில் பெண்களுக்குத்தான் உண்டேயொழிய ஆண்களுக்குக் கிடையாது. சில இடங்களில் விபச்சாரம் ஆண்களுக்குத் தற்பெருமையாகவும், கீர்த்தியாகவும்கூட இருப்பதைப் பார்க்கின்றோம். சில ஆண்கள் அதைப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வதையும் கேட்கிறோம். மக்களும் 'விபச்சாரி மகன்' என்று சொன்னால் கோபப்படுகின்றார்களே ஒழிய - 'விபச்சாரனுடைய மகன்' என்றால் கோபிப்பது இல்லை.

அதாவது, விபச்சாரம் என்னும் வார்த்தை, வழக்கத்தில் ஏன் பெண்களை மாத்திரம் சொல்லப் பயன்படுத்தப்பட்டது? ஆண்களைச் சொல்லுவதற்கு ஏன் அது பயன்படுத்தப்படவில்லை? விபச்சாரம் என்று சொல்லப்படுவது, சுபாவத்தில் உண்மைக் குற்றமுள்ள வார்த்தையாக இல்லை. எப்படி 'கற்பு' என்னும் வார்த்தையையும் அதைப் பயன்படுத்தும் முறையையும் புரட்டானது என்றும், பெண்ணடிமை கொள்ள உத்தேசித்து ஏற்படுத்தியதாகுமென்றும் சொல்லுகிறோமோ - அது போலவே, 'விபச்சாரம்' என்னும் வார்த்தையும் அதன் பிரயோகமும் புரட்டானதும் பெண்களை அடிமை கொள்வதற்கென்றே ஏற்பட்டதென்றும் காணப்படுவதோடு - அது இயற்கைக்கு விரோதமானது என்றுங்கூடச் சொல்லலாம்.

மனித சமூகத்திற்குச் சில கட்டுப்பாடுகளும் ஒழுங்கும் வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை மறுக்கவில்லை. பொது வாழ்க்கைக்கு ஏற்படுத்தப்படும் கொள்கைகள், பொது மக்களில் யாருடைய தனி சுதந்திரத்திற்கும் பாதகமில்லாமலும் பிரயோகத்தில் உயர்வு - தாழ்வுத் தத்துவம் இல்லாததாகவும்இருக்க வேண்டும். முக்கியமாக, இயற்கையோடியைந்ததாக இருக்க வேண்டும். அவைகளும் மற்றவர்களுடைய நியாயமான உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் சிறிதும் பாதகம் உண்டுபண்ணாததாக இருக்க வேண்டும். அன்றியும் அறிவுக்கும் சாத்தியத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்றதாகவும், அவசியம் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இப்படி இல்லாமல், வெறும் நிர்ப்பந்தத்திற்கு நாணயமற்றதும், அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒவ்வாததுமான விஷயங்களுக்காக - வலுத்தவர்கள், தந்திரக்காரர்கள் தங்களுக்குத் தோன்றினபடிக்கெல்லாம் கட்டுப்பாடுகள் செய்து கொண்டு போவதானது - எவ்விதப் பயனையும் தராது; அது மனித சமூகத்திற்கு வீண் கஷ்டத்தை உண்டாக்கும்.

பொது வாழ்க்கையில் ஒருவன் செய்யக் கூடாது என்பதாக ஏற்பாடு செய்திருக்கும் 'திருட்டு' என்பதானது, ஒரு மனிதனுக்கு - அதாவது திருட்டுக் கொடுத்தவனுக்குக் கஷ்டத்தையும் மன வருத்தத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கின்றது. எதனால் அந்த நஷ்டமும் சங்கடமும் ஏற்படுகிறதென்றால், திருட்டுக்கொடுத்தவன் திருட்டுப்போன சொத்தைத் 'தன்னுடையது' என்றும், அது 'தனக்கே உரியது' என்றும் எண்ணியிருப்பதால்தான்.

பொய் சொல்லக்கூடாது என்று வாயால் சொல்லி விடுகிறோம். ஆனால், தொழில் முறைக்காக, பொய்யை அவசியமாக வைத்து, அதனால் பிறருக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுத்துவரும் வக்கீல்களையும், வியாபாரிகளையும் மனித சமூகத்தில் எவ்வித இழிவுமின்றி ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அத்தொழிலால் சம்பாதித்த செல்வத்தைக் கொண்டு அம்மக்களைக் கவுரவமாக நடத்துகிறோம் - மதிக்கின்றோம். ஆனால், அதுபோலவே நடக்கும் மற்றொரு தொழில்காரரை (தேவதாசிகள்) இழிவாகக் கருதுகிறோம்.

இப்போது நடைமுறையிலிருக்கும் 'விபச்சாரம்' என்பதும் அதன் தத்துவமும் பெண்களை அடிமைப்படுத்துவதற்காக - பெண்கள் அடிமைகள் என்னும் கருத்தின்மீது ஏற்பட்டவைகளாதலாலும், அவை ஆண்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமலிருப்பதாலும் அவை ஒப்புக்கொள்ள முடியாததாய்க் காணப்படுவதோடு, பெண்கள் சுதந்திரம் என்னும் காரியத்திற்காக நடைபெறும் காரியங்களில் - 'விபச்சாரம்' என்னும் காரியம் வந்து முட்டுக்கட்டை போடுமானால் - அதைத் தைரியமாய் எடுத்தெறிந்துவிட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது, உண்மையான உழைப்பாளிகளின் கடமையாகும். ■

*'குடி அரசு' தலையங்கம் - 26.10.1930*



“உலகில் பொருளியல் சமத்துவம் ஏற்படுகின்றவரை, திருட்டு என்னும் குணமானது குற்றமாகத்தான் பாவிக்கப்படும். இன்று உலகத்தில், சிறப்பாக நமது நாட்டில் இருந்து வரும் கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றவை எல்லாம் பெரிதும் இயற்கைக்கு எதிராகவும் - அடிமைத்தனத்திற்கு ஆதரவாகவும் - தனிப்பட்டவர்களின் சுயநலத்திற்கேற்ற சூழ்ச்சிகளுமாகவே இருக்கின்றன.”

படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN/Chief PMG - 151/2000 RNITC.TN.TAM 11342 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals Regd. No.: 71325/97


# OPENING SHORTLY

aiwa

TCL
Quality Inside.

# BARON POINT

**EXCLUSIVE DEALERS :**

aiwa — Color T.V., Music Systems, Video Systems, Cordless Phones

TCL Quality Inside. — Color T.V., V.C.D. Players

## JANSONS

No. 1, Dharma Towers, No. 88, Nelson Manickam Road
Chennai - 600 094
☎: 9841011898 / 9840090435

*Await Our Special Inaugural Offer*
*Attractive Hire Purchase Schemes Available*


*Owned and Published by* **P. Chandragesan** from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 ar printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesa

படிப்பகம்